பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspa,

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 22 செவ்வாய்க்கிழமை (07-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:287

## ஒட்டுமொத்தத் தமிழினத்துக்கும்

# இ.தொ.கா. திடீர் முடிவால் நன்மையா?

# சந்தேகத்தைக் கிளப்புகின்றனர் புலிகள்!

## தமிழ்ச்செல்வன் 'உதயனு'க்குக் கருத்து



கிளிநொச்சி,செப்ரெம்பர்7

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எடுத்த திடீர் முடிவினால் ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் நன்மை கிட்டுமா என்பது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் சந்தேகம் தெரிவித்திருக்கின்றனர்.**

**விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று மதியம் கிளிநொச்சியில் வைத்து உதயனுக்கு அளித்த விசேட செவ்வியிலேயே இவ்வாறு சந்தேகம் வெளியிட்டார்.**

இ.தொ.காவின் முடிவினால் ஏற்பட்ட பலா பலன்கள் குறித்து புலிகளின் தலைமைப்பீடம் ஆராய்ந்து வருவதாகவும் -

விளைவுகளைப் பொறுத்திருந்தே அவதானிக்கவேண்டியிருப்பதாகவும் - அவர் கருத்து வெளியிட்டார்.

தமிழினத்தின் பிரச்சினைகளுக்கு அமைதி வழியில் தீர்வுகாணும் விடயத்தில் இந்த அரசு நாளுக்கு நாள் குழப்பமான செய்திகளையும், தகவல்களையும் வெளியிட்டு வருவதோடு, முன்னுக்குப் பின் முரணான நிலைப்பாடுகளையும் பிரதிபலித்து வருகின்றது.

இத்தகைய அரசுக்குப் பெரும்பான்மைப் பலம் என்ற உறுதிநிலையைப் பெற்றுக்கொடுப்பது ஒட்டுமொத்தத் தமிழினத்துக்கும் நன்மை பயக்குமா என்பது சந்தேகமே.

எனவே, இத்தகைய முடிவு வரவேற்கத்தக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஆறுமுகனுக்கும் முத்துசிவலிங்கத்துக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்க இணக்கம்

கொழும்பு,செப்.7

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் மீண்டும் அமைச்சராகின்றார். பிரதித் தலைவர் எம்.எஸ். செல்லச்சாமி மாகாணம் ஒன்றின் ஆளுநராக நியமிக்கப்படலாம்.

சிறுபான்மை அரசுக்கு முண்டுகொடுத்ததால் இ.தொ.காவுக்கு இரண்டு அமைச்சுப் பொறுப்புக்களும் மூன்று பிரதி அமைச்சுப் பொறுப்புகளும் சன்மானமாக வழங்கப்படுகின்றன என்று தெரிகின்றது.

இவர்கள் அனைவரும் இவ்வார இறுதிக்குள் பதவிப்பிரமாணம் செய்துகொள்வார்கள் என இ.தொ.கா. வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சுப் பொறுப்புக்கள் எதையும் ஏற்கமாட்டேன் என்று கூறிவந்த ஆறுமுகன் தொண்டமான், நகர அபிவிருத்தி அமைச்சராகவும் முத்துசிவலிங்கம் சமூக, அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராகவும் பதவியேற்பர்.

இ.தொ.காவுக்குப் புதுமுகங்களான வி. புத்திரசிகாமணியும் பைஸல் முஸ்தபாவும் பிரதி அமைச்சர்களாகப் பதவி ஏற்கவுள்ளனர்.

தற்பொழுது நாடாளுமன்றத்தில் குழுக்களின் பிரதித் தலைவராக இருக்கும் பதுளை மாவட்ட எம்.பியுமான முருகன் சச்சிதானந்தனும் ஒரு பிரதி அமைச்சராகலாம். அவரது இடத்துக்கு குழுக்களின் பிரதித் தலைவராக இ.தொ.காவைச் சேர்ந்த நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகதீஸ்வரன்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இன்று நடக்கவிருந்த

# படையினர் - புலிகள் சந்திப்பு மீண்டும் பிற்போடப்பட்டது!

மட்டக்களப்பு,செப்.7

மட்டக்களப்பில் படைத்தரப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறவிருந்த சந்திப்பு மீண்டும் பிற்போடப்பட்டுள்ளது. இன்று சந்திப்பு நடப்பதாக ஏற்பாடாகி இருந்து.

மட்டக்களப்பில் மாதாந்தம் நடைபெற்று வந்த படைத்தரப்பு - விடுதலைப் புலிகள் சந்திப்புக் கடந்த சில மாதங்களாக இடம்பெறவில்லை.

படுகொலைச் சம்பவங்கள் தொடர்ந்ததால் இச்சந்திப்புக்களில் பங்குபற்றுவதில்லை என்ற முடிவுக்கு விடுதலைப் புலிகள் வந்திருந்தனர்.

கடந்த 31 ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புரூவ் ஹொவ்டே படைத்தரப்புடனும் விடுதலைப் புலிகளுடனும் தனித்தனியாகப் பேச்சுக்களை நடத்தினார். இதன் பயனாக இருதரப்பினரும் மீண்டும் சந்திப்புக்களை நடத்துவது என இணக்கம் காணப்பட்டிருந்தது.

கடந்த 3 ஆம் திகதி சந்திப்பை நடத்துவதென முதலில் முடிவு செய்யப்பட்டது. பின்னர்,

(16 ஆம் பக்கம் பார்க்க)

# பலம்வாய்ந்த அரசை விரைவில் நிறுவுவார் என ரணில் சூளுரை!

## ஐ.தே.கவின் 58 ஆவது வருட நிறைவு நிகழ்வில் கங்கணம்



கொழும்பு,செப்.7

நாட்டைப் பிரிக்காமல் ஐக்கிய இலங்கைக்குள் - ஒரு சமஷ்டி ரீதியிலான தீர்வை நோக்கி நாம் நகர்ந்த சமயம் பார்த்து எமது அரசு கலைக்கப்பட்டது. நாம் வெகுவிரைவில் பலம் வாய்ந்த அரசொன்றை நிறுவுவது உறுதியாகி விட்டது.

- இப்படிக் கூறுகிறார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 58 வருடங்கள் பூர்த்தியாவதை ஒட்டி நேற்று அக்கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் விசேட வைபவங்கள் இடம்பெற்றன. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சி என்பது இந்த நாட்டின் வரலாற்றில் இருந்து பிரிக்கமுடியாத ஒரு கட்சியாகும். 58 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட கட்சி.

சேர் பொன்.இராமநாதன், சேர் பொன். அருணாசலம் போன்றவர்கள் உட்பட பல பெருந்தகைகள் இந்தக் கட்சி உருவாகுவதற்குக் காரணகர்த்தாக்களாக இருந்திருக்கின்றார்கள்.

இந்த நாட்டை ஆங்கிலேயரிடமிருந்து விடுவித்து, சுதந்திர நாடாகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் எமது கட்சித் தலைவர்கள்தான். வரலாற்றில் பல புரட்சிகரமான வேலைத் திட்டங்களை முன்னெடுத்தவர்களும், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டவர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட அதிரடிப்படைக்கு ஆள் சேர்க்க அரசு திட்டம்

கொழும்பு,செப்.7

பொலீஸ் விசேட அதிரடிப் படைக்கு ஆள் சேர்ப்புச் செய்ய அரசு முடிவுசெய்துள்ளது.

2500 பேர் வரையிலானோர் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்தப் பிரிவில் சுமார் 2500 இற்கும் அதிகமான வெற்றிடங்களுண்டு. இவற்றை நிரப்ப வேண்டும். இதற்கான ஏற்பாட்டை அரசு மேற்கொண்டுவருகின்றது என பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்குக்கான அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா நேற்று உத்தியோகபூர்வ விஜயமாகப் பொலீஸ விசேட அதிரடிப்படை தலைமையகத்திற்கு சென்றிருந்தார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும், தெரிவித்ததாவது:-

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதச் சட்டத்தின் கீழான தீர்ப்பை ஐ.நா.மனித உரிமைகள் குழு நிராகரிப்பு!

இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தினார் என்று பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான குற்றச்சாட்டில் இலங்கை நீதிமன்றம் தமிழர் ஒருவருக்கு வழங்கிய தண்டனை தவறானது என்று ஐ.நா. மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த நல்லரத்தினம் சிங்கராசா என்ற நபருக்கு வழங்கப்பட்ட தண்டனையே தவறானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு இராணுவத்துக்கு எதிராகத் தாக்குதல் நடத்தினார் என்று இவர் குற்றஞ்சாட்டப்பட்டார். மேல் நீதிமன்றம் இவருக்கு 50 வருடகாலச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அவர் மனுச்செய்தார். அவர் சார்பில் சட்டத்தரணியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி நீதிமன்றில் ஆஜராகி வாதாடினார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் அவரது தண்டனைக் காலத்தை 35 ஆண்டுகளாகக் குறைத்துத் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பையும் எதிர்த்து அவர் உயர் நீதிமன்றத்தில் மனுச்செய்தார். அவர் சார்பில் அ.விநாயகமூர்த்தியும் கலாநிதி ரஞ்சித் பெர்னாண்டோவும் ஆஜராகி வாதாடினர். 3 நீதிய

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் இருந்து வவுனியா சென்ற இளம் குடும்பஸ்தரைக் காணவில்லை

### பிரஜைகள் குழுவிடம் முறைப்பாடு

மன்னார்,செப்.7

மன்னார், பேசாலை அகதிமுகாமிலிருந்து வவுனியாவுக்குச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஒருமாதகாலமாகியும் இன்னும் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஜெயபாலசிங்கம் கணேஷ் (வயது 27) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு காணாமற்போயிருப்பதாக மன்னார் பிரஜைகள் குழுவிடம் முறையிடப்பட்டிருக்கின்றது.

யுத்த சூழ்நிலையில் இடம்பெயர்ந்த இவர், மன்னார், பேசாலை முகாமில் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் வசித்துவந்துள்ளார். இலங்கை மின்சார சபையில் ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளியாகப் பணியாற்றி வந்த மேற்படி நபர், கடந்த மாதம் 4 ஆம் திகதி சம்பளம் பெறுவதற்காக வவுனியா சென்றிருந்தார். அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்று மனைவி பிரஜைகள் குழுவிடம் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தனது கணவர் பொலீஸாரால் கைதுசெய்

(16 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தமிழீழ மீட்புநிதி மீளளிப்புக்கான நடைமுறை குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.7

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புத் தொடர்பான நடைமுறைகள் குறித்து விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

நடைமுறைகள் வருமாறு:-

★ கடன் சான்றிதழாளர் நேரடியாக வருகை தந்து கடனை மீளப்பெற வேண்டும்.

★ ஒருவர் சார்பில் மற்றொருவர் கடனைச் செலுத்தியிருப்பின் இருவரும் வருகைதர வேண்டும்.

★ கடன் சான்றிதழாளர் இறந்திருப்பின் பின்வரும் ஆவணங்களைப் பின்னுரித்தாளர் கொண்டுவர வேண்டும்.

- ❖ இறப்புச் சான்றிதழ்
- ❖ இறப்புச் சான்றிதழின் படி (பிரதி)
- ❖ கடன் சான்றிதழ்
- ❖ பின்னுரித்தாளரின் அடையாள ஆவணம்
- ❖ பின்னுரித்தாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவையாளரின் கடிதம்.

★ கடன் சான்றிதழிலுள்ள முழுப்பெயரும் அடையாள ஆவணத்திலுள்ள முழுப்பெயரும் வேறுபடுமிடத்து இரண்டு பெயர்களும் ஒருவரையே குறிக்கின்றதென்பதை உறுதிப்படுத்தி கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட கடிதம்.

அ) மீளளிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் சான்றிதழாளர் தமது அடையாள ஆவணத்தைக் காண்பித்தே கடனை மீளப்பெற முடியும்.

ஆ) அடையாள ஆவணம் அற்றவர் தமது புகைப்படத்தின் (2.5அங்X2.0அங். அளவு) பின்புறத்தில் தமது பெயர், முகவரி, கையொப்பம் ஆகியவற்றை உதவி அரச அதிபரால் உறுதிப்படுத்திக் கையளிப்பின் அது ஏற்றுக்கொள்ளப்படும்.

- என்று நிதித்துறை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-3)

# மாகாண மட்ட கணித விஞ்ஞான வினாடி வினா போட்டி முடிவு

யாழ்ப்பாணம்,செப்.7

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் மாகாண மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கணித, விஞ்ஞான, வினாடி வினாப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

தமிழ்மொழி மூலப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

★ தரம் 6 - முதலாம் இடம்: எ.நிறோஜன் (முல்லைத்தீவு கோம்பாவில் விக்கினேஸ்வரன் வித்தியாலயம்), 2ஆம் இடம் : ஸ்ரீ கவிபிரியன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம்: எ.அபிலக்சன் (திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி).

★ தரம் 7 - முதலாம் இடம்: வி.நுறோஜன் (கல்முனை விபுலானந்தா மகாவித்தியாலயம்), 2ஆம் இடம்: கே.மைதிலி (மெதடிஸ்ற் பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை), எச்.சிவ்கியூ அகமட் (அக்கரைப்பற்று, அஸ்கிறாய் மகாவித்தியாலயம்).

★ தரம் 8 - முதலாம் இடம்: எஸ்.சாலினி (கல்முனை, இராமகிருஸ்ணா பெண்கள் கல்லூரி), 2 ஆம் இடம்: எ.நிதர்சன் (கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி), 3 ஆம் இடம்: பி.லக்சி (உடுவில் பெண்கள் கல்லூரி).

★ தரம் 9 - முதலாம் இடம்: எஸ்.சஞ்ஜெய் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), 2ஆம் இடம்: பி.நிருஜென் (மகாஜனக் கல்லூரி), 3ஆம் இடம்: எம்.எஸ்.எவ்.முவீஸ் (கல்குடா ஓட்டமாவடி மத்திய கல்லூரி).

★ தரம் 10 - முதலாம் இடம்: குணச்சந்திரன் தர்சினி (மெதடிஸ்ற் பெண்கள் கல்லூரி), 2 ஆம் இடம்: பரமானந்தன் நிரோசன் (யாழ். இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம்: சிவலிங்கம் தாட்சாயினி (புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்).

★ தரம் 11 - முதலாம் இடம்: தளயசிங்கம் அஜந்தன் (யாழ். இந்துக் கல்லூரி), 2 ஆம் இடம்: மாணிக்கராஜா முதலி ஸ்ரீசரவணா (கல்குடா, இந்துக் கல்லூரி, வாழைச்சேனை), 3ஆம் இடம்: சுபைர் அப்துல் கைதா (அக்கரைப்பற்று பைசா மகாவித்தியாலயம்).

ஆங்கில மொழிமூல போட்டி முடிவுகள் வருமாறு:-

★ தரம் 6 - முதலாம் இடம்: பி.கபிலன் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம்: ரி. அனோஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), 3 ஆம் இடம்: (யாழ். இந்துக் கல்லூரி).

★ தரம் 7 - முதலாம் இடம்: எஸ்.அரவிந்த் (ஹாட்லிக் கல்லூரி), 2 ஆம் இடம்: எம். துளஷி (யாழப்பாணக் கல்லூரி), 3 ஆம் இடம்: எ.ஆர்.எவ்.ஸபானா (கல்முனை மொகமட் பெண்கள் கல்லூரி).

★ தரம் 8 - முதலாம் இடம்: எம்.எம்.பாத்திமா நயா (அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி), 2 ஆம் இடம்: கே.பாத்திமா றுஸ்தா (கல்முனை மொகமட் பெண்கள் கல்லூரி).

(ஐ-202-118-173)

# புதிய வீதிகள், பொது மண்டபங்கள் வடமராட்சி கிழக்கில் திறந்துவைப்பு

வடமராட்சி கிழக்குப் பிரசேத்தில் மணல்காடு, குடத்தனை ஆகிய கிராமங்களில் புதிதாக அமைக்கப்பட்ட நான்கு வீதிகள், இளைப்பாற்று மண்டபம், பொது மண்டபம் என்பவனவற்றைக் கடந்த சனிக்கிழமை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் மக்களிடம் கையளித்து அவற்றின் சேவைகளை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

மணல்காடு சந்தைக்கு அருகில் பருத்தித்துறைப் பிரதேச சபையால் ஐந்தரை லட்சம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட இளைப்பாற்று மண்டபத்தை சபைச் செயலாளர் சி.பசுபதி தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து மணல்காட்டிலிருந்து குடத்தனை பொற்பதி வீதியையும், பொற்பதியிலிருந்து நாகாம்பனைக்குச் செல்லும் வீதியையும் யாழ். அரச அதிபரும், நடுக்குடத்தனை நாகதம்பிரான் வீதியை வடமராட்சிக் கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகனும், குடத்தனையிலிருந்து சூரியாம்புலத்துக்குச் செல்லும் வீதியை வடமராட்சி கிழக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் சி.பொன்னம்பலமும் திறந்துவைத்தனர்.

அடுத்து குடத்தனை தேவாலயத்துக்கு அருகில் நிகொட் நிறுவனத்தினால் குடத்தனை மரதர் சங்கங்கத்தின் அனுசரணையுடன் 6 லட்சம் ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்ட பொது மண்டபத்தையும் யாழ். அரச அதிபர் திறந்து வைத்தார். அங்கு தையல் பயிற்சி வகுப்பை யாழ்.செயலகத்தைச் சேர்ந்த முன்னாள் உத்தியோகத்தர் எஸ்.வேலும்மயிலும் ஆரம்பித்து வைத்தார்.

மீனவர் இளைப்பாற்று மண்டபம் யாழ். அரச அதிபர் நிதியிலிருந்து பருத்தித்துறைப் பிரதேச சபையாலும், நான்கு புதிய வீதிகளும் வடமராட்சிக் கிழக்கிலிருந்து அகழப்படும் மணல் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானத்திலிருந்து வடமராட்சி கிழக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு நிறுவனத்தாலும், பொதுமண்டபம் நிகொட் நிறுவனத்தின் நிதியிலிருந்தும் அமைக்கப்பட்டன.

இந்த அபிவிருத்தித் திட்ட ஆரம்ப அங்குரார்ப்பண நிகழ்வுகளில் மணல்காடு பங்குத் தந்தை அருட்திரு. றோய் பெர்டினன், நிகொட் நிறுவனத் திட்டப் பணிப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணன், யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளா சி.பத்மநாதன், வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் வி.பி. வேலாயுதபிள்ளை, புதிதாகப் பதவி ஏற்கவுள்ள உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன், பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் சி.பசுபதி, வடமராட்சி கிழக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் சி.பொன்னம்பலம், வடமராட்சிக் கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

மணல்காடு பொற்பதி வீதி திறக்கப்படாததால் இக்கிராமங்களுக்கு சுமார் எட்டு மைல் தூரம் சுற்றியே செல்லவேண்டியிருந்தது. புதிய வீதி திறக்கப்பட்டதன் மூலம் இக்கிராமங்களின் இடைத்தூரம் இரண்டு மைல்களாகக் குறைந்துள்ளது.

புதிய வீதி திறக்கப்பட்டதும் மணல்காடு கிராமத்தைச் சேர்ந்த சுமார் 20 இளைஞர்கள் மரதன் ஓட்டம் மூலம் மணல்காட்டிலிருந்து பொற்பதியைச் சென்றடைந்தனர்.

இத்திட்டங்கள் அனைத்தும் மொத்தம் 85 லட்சம் ரூபா செலவில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. (ஐ-173)

# தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு பற்றி நாடாளுமன்றில் பிரேரணைக்கு முயற்சி

கொழும்பு,செப்.7

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேணை ஒன்றைக் கொண்டுவருவதற்கு மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் முயற்சி மேற்கொண்டுள்ளார். இது தொடர்பாக சபாநாயகரிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி உயர்வுக்கு சம்பள உயர்வை வழங்காமல் ஒரு சில தொழிற்சங்கங்கள் மட்டும் துரைமார் சங்கத்துடன் செய்துகொள்ளும் ஒப்பந்தம் காரணமாக ஏனைய தொழிற்சங்கங்களில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்களின் அடிப்படை மனித வுரிமைகள் மீறப்படுகின்றன என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றம் இதுபோன்ற மனிதவுரிமை மீறும் செயலுக்குத் துணைபோய்விடக்கூடாது. துரைமார் சங்கத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் காலாவதியாகிப் போயிருக்கும் நிலையில் மீண்டும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்கு நாடாளுமன்றம் அனுமதிக்கக் கூடாது.

தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு தொடர்பாக ஜே.வி.பியினரும் அரசுக்கு தமது ஆலோசனையை வழங்கி இருக்கின்றனர் என்ற செய்திகள் வெளியிடப்பட்டிருக்கும் இச்சூழ் நிலையில் நாடாளுமன்றம் ஊடாகவே இதற்குத் தீர்வு காணப்படல்வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# இந்துப் பூசகர்களுக்கு கதிர்காமத்தில் இரண்டுவார கால வதிவிடப் பயிற்சி

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், விஷ்வ ஹிந்து பரிஷத் இலங்கைக் கிளையுடன் இணைந்து ஏற்பாடு செய்கின்ற அந்தணரல்லாத இந்துப் பூசகர்களுக்கான இரண்டுவார வதிவிடப் பயிற்சி எதிர்வரும் 26ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 11ஆம் திகதிவரை கதிர்காமம் தெய்வானையம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி வரை நடைபெற்ற முதலாவது தொகுதி பூசகர்களுக்கான பயிற்சி நெறியில் கலந்துகொள்ளமுடியாதுபோன பூசகர்கள் இரண்டாவது பயிற்சிநெறியில் கலந்து கொள்ளலாம் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப்பயிற்சியைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பித்த பூசகர்கள் எதிர்வரும் 25ஆம் திகதி கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியில் வந்து தம்மைப் பதிவுசெய்துகொள்ளுமாறு திணைக்களம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

பூசகர்களுக்கு பயிற்சி வழங்கும் துறையில் தேர்ச்சி பெற்றவரான இந்திய அறிஞர் வி.வி.சேஷாத்திரி அவர்கள் இப்பயிற்சியை வழங்கவுள்ளார்.

இப்பயிற்சியின்போது ஆலய பூசைமுறைகள், ஆகமக் கிரியைகள் மற்றும் இந்து சமய அடிப்படைத் தத்துவங்கள் போன்ற விடயங்கள் கற்பிக்கப்படவுள்ளன என இந்து கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார். (எ)

# தோட்டத் தொழிலாளர் சம்பளம் சம்பந்தமான கூட்டு ஒப்பந்தம் செய்வதில் இழுபறி நீடிப்பு

## தொழிற்சங்கங்களை விலைகொடுத்து வாங்கும் பேரம் இன்னும் படியவில்லை

கொழும்பு,செப்.7

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தத்தைச் செய்வதில் மீண்டும் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது. தோட்டத்துரைமார் சம்மேளனம், பிரதான தொழிற்சங்கங்களை விலை கொடுத்து வாங்க முயற்சிக்கின்றது. இந்த விடயத்தில் பேரம் படியாமல் ஏற்பட்ட முரண்பாடுகளினால் விடயம் அம்பலத்திற்கு வந்துள்ளது.

கூட்டு ஒப்பந்தத்தை உடைத்து எறிந்து விட்டு மீண்டும் சம்பள நிர்ணய சபை முன் செல்வதே மேல் என முற்போக்கு எண்ணம் கொண்ட தொழிற்சங்கப் பிரமுகர்கள் கருத்துக் கூறுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான முன்னைய கூட்டு ஒப்பந்தம் ஜூன் 30 ஆம் திகதியுடன் காலாவதியாகிவிட்டது.

கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தொழிற்சங்கங்களான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டி ஆகியன மலையக மக்கள் முன்னணி உட்பட ஏனைய தொழிற்சங்கங்களை இக்கூட்டு ஒப்பந்த விவகாரத்தில் தலையிடவிடாமல் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. அதேவேளை, தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டியில் அங்கம் வகிக்கும் சில தொழிற்சங்கங்கள் இதனை எதிர்க்கின்றன.

ஒப்பந்தக்காரர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலையை சாதகமாக்கிக் கூறிவிட்டது.

கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக துரைமார் சம்மேளனத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பேச்சுக்களும் எவ்விதமான இறுதி முடிவும் எடுக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (க)

# கள்ளநோட்டு மாற்றிய ஐவர் மஹியங்கனையில் கைது!

பதுளை,செப்.7

கள்ள ரூபாநோட்டுக்களை மாற்றிக்கொண்டிருந்தனர் என்று கூறப்படும் ஐவரை மஹியங்கனை ஹோட்டல் அறையொன்றிலிருந்து பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த ஒரு சில தினங்களில் மட்டும் இவர்கள் பதுளை, கண்டி, பண்டாரவளை, மஹியங்கனை ஆகிய பகுதிகளில் ரூபா 70 ஆயிரம் பெறுமதியான கள்ளநோட்டுக்களை மாற்றியுள்ளனர் என்று தெரியவந்துள்ளதாகப் பொலீஸார் கூறினர்.

இவர்களிடமிருந்து 24 ஆயிரம் ரூபா பெறுமதியான கள்ளநோட்டுக்கள் அடங்கிய பொதியொன்றையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். யூரோ நோட்டுக்கள் 220, டொலர் நோட்டுகள் 10 என்பனவும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. இவைகளும் கள்ளநோட்டுக்களே என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட ஐவரும் கொழும்பு, கண்டி, ரம்புக்கணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில் தலைவர் எனக் கருதப்படுபவரிடம் இருந்து இரு தேசிய அடையாள அட்டைகளையும் சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றையும் பொலீஸார் மீட்டுள்ளனர்.

மஹியங்கனை நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கள்ளநோட்டுக்களை மாற்றிக்கொண்டு ஹோட்டல் அறைக்குத் திரும்பிய இவர்களைப் பின் தொடர்ந்து சென்ற பொலீஸார் கைதுசெய்தனர்.

பதுளை அலுகொல்லையில் கள்ளநோட்டு அடிக்கப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இடம் ஒன்றில் இருந்து கள்ளநோட்டு அச்சடிக்கப் பயன்படுத்தப்படும் கடதாசிகள் 500 ஐப் பொலீஸார் மீட்டுள்ளனர். இதுதொடாபாக சந்தேகத்தின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பக்ஸ் இயந்திரம், தொலைக்காட்சிப் பெட்டி, விடுதலைப் புலிகளின் புகைப்படங்கள், 1,000 ரூபா கள்ளநோட்டு ஒன்று என்பனவற்றையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

நிகால் கருணாதிலக, தங்கவேலு திருச்செல்வம் ஆகிய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தவிர பெலியத்தைப் பகுதியில் வேறு ஒன்பது பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (க)

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் - திங்கட்கிழமை, செப்ரெம்பர்-06-2004

| சந்தைப்புள்ளி விவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1,425.54 | 1,412.63 | 12.91 | 0.91 |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2,127.61 | 2,111.19 | 16.42 | 0.78 |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) ASTRI - அனைத்துப் பங்குகள் | 1,474.74 | 1,461.37 | 13.37 | 0.91 |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2,210.15 | 2,193.10 | 17.05 | 0.78 |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 196.1 | 280.4 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 20.1 | 22.6 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 3.957 | 4.062 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 349.3 | 346.1 | | |

# ரஷ்யாவில் நேற்றும் இன்றும் துக்கதினங்கள்:

# இறந்தவர் எண்ணிக்கை 394ஆக உயர்வு!

மொஸ்கோ,செப்.7

ரஷ்யாவில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை 394ஆக உயர்வடைந்துள்ளது, இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என சந்தேகிக்கப்படுகிறது. கொல்லப்பட்டவர்களுக்கு நேற்றும், இன்றும் ரஷ்யாவில் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

360 பேர் கொல்லப்பட்டனர் என முன்னர் கூறப்பட்டது. பாடசாலைக் கட்டட இடிபாடுகளில் இருந்து நேற்றுமுன்தினம் மேலும் பல சடலங்கள் எடுக்கப்பட்டன. இதன்மூலம் பலியானவர்களின் எண்ணிக்கை 394ஆக உயர்ந்தது. பல உடல்கள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன. அடையாளம் காணமுடியாமல் உள்ளன. அந்த உடல்களில் இருந்து இரத்தம் மற்றும் முடி எடுக்கப்பட்டு பரிசோதனைகள் மூலம் அடையாளம் காண முயற்சிக்கப்படுகிறது. 260 மாணவர்களைக் காணவில்லை என்று அவர்களின் பெற்றோர்கள் இன்னும் கண்ணீருடன் தேடி வருகின்றனர்.

பாடசாலை மாணவர்களின் இறப்புச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று, வடக்கு ஒஸிடியா மாகாணத்தின் உள்துறை அமைச்சர் கஸ்பெக் சன்டியேவ் ராஜினாமாச் செய்தார். கொல்லப்பட்ட மாணவர்களுக்கு ரஷ்யாவில் நேற்றும் இன்றும் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. கொல்லப்பட்டவர்களில் 330 பேரின் உடல்கள் நேற்று அடக்கம் செய்யப்பட்டன.

இச்சம்பவம் குறித்து தொலைக்காட்சியில் உரையாற்றிய ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவிக்கையில் -

பாதுகாப்பு விஷயங்களில் போதிய கவனம் செலுத்தாமல் இருந்துவிட்டோம். எதிர்காலத்தில் இவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் - என்றார். (க)



மீட்பு நடவடிக்கையின்போது உயிரிழந்தவர்களின் சடலங்களுக்கு அஞ்சலி செலுத்தப்படுவதையும் சடலங்களைப் புதைப்பதற்கு இயந்திரங்களின் உதவியுடன் புதைகுழிகள் தோண்டப்படுவதையும் படங்களில் காணலாம்.

## ஈராக்கில் 500 பேர் கைது!

ஈராக்கிய தலைநகர் பக்தாத்திற்கு தெற்கில் உள்ள லத்லிபியா நகரில் நடத்தப்பட்ட ஒரு பெரிய பாதுகாப்பு நடவடிக்கையில், கிளர்ச்சிக்குழுவின் உறுப்பினர்கள் என்கிற சந்தேகத்தின் பேரில் சுமார் 500பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என உள்ளூர் அதிகாரிகள் கூறுகின்றனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் வெளிநாட்டுப் போராளிகள் இல்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர். அமெரிக்கர்கள் நடத்திய இந்த நடவடிக்கையில் ஈராக்கிய படையினரும் பங்குபற்றியிருந்தார்கள் என்றும் இதன்போது 12 பொலீஸார் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தாங்கிகளை அழிக்கவல்ல ரொக்கெட் குண்டுகளும், மோட்டார் குண்டுகளும், டைனமைட் குண்டுகளும் இந்த நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனிடையே, வடபகுதியில் மோசுல் அருகேயுள்ள தல்லாபர் என்கிற இடத்தில் நேற்று முன்தினம் சண்டை நடந்துள்ளது. இங்கு கடந்த சனிக்கிழமை நடந்த மோதல்களில் குறைந்த பட்சம் 13 பேர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## புதிய ரக நெல்வகை சீனாவில் கண்டுபிடிப்பு

பெய்ஜிங்,செப்.7

சீனாவில் கலப்பின நெல்வகைகளை உருவாக்கும் விஞ்ஞானிகள் புதிய ரக நெல் வகை ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

7,954 எனப் பெயரிடப்பட்டுள்ள அந்த நெல் ரகம் ஹெக்டெயருக்கு 18 ஆயிரம் கிலோ கிராம் விளைச்சலைத் தருகிறது. இதுவே உலகில் அதிக விளைச்சலைத்தரும் நெல் வகை என அந்நாட்டு வானொலியொன்று தெரிவித்தது. (க)

## ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தானில் மறைவு!

சாவதேச தீவிரவாதி பின்லேடனைப் பிடிக்க அமெரிக்கா வலைபோட்டுத் தேடிவருகிறது. ஆப்கானிஸதானை ஒட்டியுள்ள பாகிஸ்தான் பகுதிகளில் பழங்குடி இனத்தவர் வசிக்கும் பகுதிகளிலும் அவரைப் பிடிக்கமுடியவில்லை.

இந்தநிலையில் அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் பீட்டர்பெர்கன் என்பவர் பின்லேடன் பாகிஸ்தானில்தான் தலைமறைந்திருக்கிறாா. அவ்வப்போது அவர் பாகிஸ்தான் காஷ்மீர் பகுதிக்குச் சென்று வருகிறார் என்றும் பீட்டர் கூறியிருக்கிறார்.

பின்லேடனுக்கு எந்தவிதமான உடல் கோளாறும் இல்லை என்று உறுதியாக தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகள் மற்றும் தீவிரவாதச் செயல்கள் பற்றி இவர் ஆய்வுநடத்தும் நிபுணர் தனது கூட்டாளிக்கு அவ்வப்போது உத்தரவுகளை பின்லேடன் பிறப்பித்து வருவதாகவும் அந்தப் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

## ஈராக்கின் முன்னாள் இராணுவத் தளபதி கைதாகவில்லை எனத் தகவல்கள் தெரிவிப்பு

சதாம் ஹுசைனின் கீழ் மிக முக்கிய பதவி வகித்த இஷாத் இப்ராஹிம் அல் தௌரியைப் பிடிக்க ஈராக்கிய மற்றும் அமெரிக்கப் படைகள் பெரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை நடத்தியிருந்தன.

அவர் பிடிபட்டுவிட்டதாக முதலில் ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்தாலும் உண்மையில் ஈராக்கிய படைகளிடமோ அல்லது அமெரிக்கப் படைகள் வசமோ அவர் இல்லையென தற்போது தகவல்கள் தெரிவிக்கின்றன.

சதாம் ஹுசைனின் சொந்த ஊரான ஈராக்கின் வடபகுதி நகரான திக்ரித்தில் நடந்த பெரிய இராணுவ நடவடிக்கைகளின்போது சுமார் எழுபது பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் எண்பது பேர் பிடிக்கப்பட்டனர் எனவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

சதாம் ஹுசைன் படையில் அவருக்கு அடுத்ததாக இரண்டாவது நிலையில் தளபதியாக இருந்த இஷாத் இப்ராஹிம் அல்தௌரி என்று நம்பப்பட்ட ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன் அங்கே இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. ஆனால் அமெரிக்கப் படையினர் தங்கள் வசம் அல்தௌரி கிடையாதென்கின்றனர்.

அவரைப் பிடிக்க உதவுபவர்களுக்கு ஒரு கோடி டொலர் சன்மானம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

சதாம் ஹுசைனின் புரட்சிக் கட்டளைப் படையில் இரண்டாவது நிலையில் அல்-தௌரி 1998ஆம் ஆண்டு ஹலப்ஜா நகரில் பொது மக்கள் மீது இரசாயன ஆயுதம் பயன்படுத்தப்பட்ட சமயத்தில் வடக்கு ஈராக் பகுதியை நிர்வகித்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

உலக அரங்கில்

## ஜப்பானில் நிலநடுக்கம்!

ஜப்பானில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் கடல் அலைகள் வழக்கத்தை விட அதிக உயரத்துக்கு எழுந்தன. ரயில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.8 அளவு பதிவானது.

## பொடா சட்டத்தை வாபஸ் பெற விரைவில் அவசர சட்டம் வரும்

### பிரதமர் மன்மோகன் சிங் அறிவிப்பு

பொடா சட்டத்தை வாபஸ் பெறுவதற்காக விரைவில் அவசர சட்டம் பிறப்பிக்கப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்தார். மன்மோகன் சிங் பிரதமராகப் பொறுப்பு ஏற்ற பிறகு முதன்முறையாக சனிக்கிழமை டெல்லி விஞ்ஞான்பவன் கட்டடத்தில் சிறப்புப் பேட்டி அளித்தார்.

அப்போது செய்தியாளர்களின் சரமாரியான கேள்விகளுக்குப் பதில் அளித்து பிரதமர் மன்மோகன் சிங் கூறியதாவது:

பொடாவை வாபஸ் பெறுவதற்கான அவசர சட்டம் விரைவில் பிறப்பிக்கப்படும். இதற்கான சட்ட மசோதா கடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்றமுடியாமல் போனது உண்மையியே வருத்தம் அளிக்கிறது. நாடாளுமன்றத்தில் என்ன நடந்தது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே...?

பண வீக்கம் அதிகரித்து வருவது கவலை அளிக்கிறது. திறமையான நிர்வாகத்தின் மூலம் பணவீக்கத்தை கட்டுப்படுத்தமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது. தேவையான அளவுக்கு உணவு, தானியங்கள் கையிருப்பில் உள்ளன. நாட்டின் சில பகுதிகளில் நிலவிய வரட்சி அபாயம் மற்றும் சில இடங்களில் ஏற்பட்ட வெள்ள நிலைமைதான் பண வீக்க உயர்வுக்குக் காரணமாகும். சர்வதேச அளவிலான பெற்றோலியப் பொருள்கள் விலை உயர்வும் பண வீக்கத்திற்கு மற்றொரு முக்கிய காரணம்.



தீவிரவாதத்துக்கோ வன்முறைக்கோ இந்தியா ஒருபோதும் அடிபணியாது. அதற்காக எதையும் விட்டுக்கொடுக்கமாட்டோம். அதே நேரத்தில் காஷ்மீர் பிரச்சினையாக இருந்தாலும் வடகிழக்கு மாநிலப் பிரச்சினையாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட அனைத்துக் குழுவினருடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றோம்.

அதற்காக எந்த முன்நிபந்தனையும் விதிக்க மாட்டோம். ஆனால் அவர்கள் வன்முறையைக் கைவிட்டு அப்பாவிப் பொதுமக்களைக் கொலை செய்வதை நிறுத்த முன்வரவேண்டும். காஷ்மீர் மாநிலத்திற்கு விரைவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கின்றேன்.

பாகிஸ்தானுடன் அமைதிப் பேச்சைத் தொடர்ந்து நடத்த இந்தியா விரும்புகின்றது. படிப்படியாக முன்னேற்றம் ஏற்படும் விதத்தில் இந்தப் பேச்சு அமையவேண்டும். சிக்கல் நிறைந்த காஷ்மீர் பிரச்சினை குறித்து பாகிஸ்தானுடனும் தொடர்ந்து பேச்சு நடத்துவதில் உறுதியுடன் இருக்கின்றோம்.

இருநாடுகளுக்கும் இடையே உள்ள உறவை மேம்படுத்தும் நோக்கில் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தின்போது பாகிஸ்தான் அதிபர் முஷாரப்புடன் பேச்சு நடத்த உள்ளேன். முஷாரப் உறுதி அளித்தபடி பயங்கரவாதம் கட்டுப்படுத்தப்படாவிட்டால் பேச்சில் எந்த முன்னேற்றமும் இருக்காது. பயங்கரவாதம் மற்றும் எல்லைப் பகுதியில் ஊடுருவல் குறித்து இந்திய - பாகிஸ்தான் அதிகாரிகள் பேச்சின்போது விவாதிக்கப்படும் .

இந்திய - சீனா இடையேயான நீண்டகால எல்லைப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்படவேண்டும். சீனா செல்வதற்கு ஆர்வத்துடன் உள்ளேன்.

- இவ்வாறு மன்மோகன் சிங் கூறினார். (க)

## சீனாவில் தொடரும் வெள்ள அனர்த்தம் 60 இற்கும் மேற்பட்டோர் மரணம்

### இறந்தவர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அச்சம்

சிச்சுயான்,செப்.7

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் பெய்து வரும் பருவப் பெயர்ச்சி மழையினால் அந்தப் பிரதேசத்தில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், குறைந்தது 64 பேர் இறந்துள்ளனர். ஆனால், இது கண்டெடுக்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கையே. இன்னும் அதிக மானவர்களின் சடலங்கள் வெள்ளத்தில் அடிபட்டுச் சென்றிருப்பதால் இறந்தவர்களின் எண்ணிக்கையை துல்லியமாகக் கூறமுடியாதுள்ளது.

அத்தோடு, 70பேருக்கு மேற்பட்டோர்கள் காணாமற்போயுள்ளனர். இவர்களைத் தேடி மீட்புப் பணியாளர்கள் வலை விரித்துள்ளனர்.

சிச்சுயான் மாகாணம் மற்றும் சொன்ஜ்கிங் அருகிலும் வெள்ள பாதிப்பு மிக அதிகமாக ஏற்பட்டுள்ளது. இங்கு பெய்துவரும் மழையும், அடிக்கும் புயலும் இந்த வருடத்தில் இடம்பெற்ற மிகப்பெரிய இயற்கை அனர்த்தம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்தும் மழைபெய்யும் என சீன வானிலை அவதான நிலையம் தெரிவிக்கிறது. மலைப் பிரதேசங்களை அண்டிய கிராமங்களில் மண்சரிவும், வெள்ளமும் அதிகமாக ஏற்பட்டதனாலேயே இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.

சிச்சுயான் மாகாணத்தின் டஸஹு நகரிலேயே அதிக வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அந் நகருக்கான அனைத்துத் தரைவழிப் பாதைகளும் தடைப்பட்டுள்ளன. தரைமார்க்கமாக எந்தவிதமான போக்குவரத்துகளும் இடம்பெறவில்லை. இதனால், அங்குள்ள மக்கள் பெரும் அவதிப்படுகின்றனர்.

உள்ளூர் அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க சீன விமானப் படையினர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணப் பொருள்களை வழங்கியும் மற்றும் ஏனைய வசதிகளைச் செய்தும் வருகின்றனர்.

வெள்ளப்பெருக்கு நாளுக்கு நாள் அதிகரிப்பதால் பலர் இறக்கக்கூடிய அச்சம் எழுந்துள்ளதாக அங்கிருக்கும் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். தொடர்ந்தும் மழை பெய்தவண்ணமே உள்ளன. அங்கு பெய்துவரும் மழை மிக வேகமாகப் பெய்கிறது.

இவ்வாறான அடர்த்தியான மழையை நாங்கள் கண்டதில்லை என அங்கிருக்கும் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 500 வருடங்களில் சீனாவில் இதுவரை பெய்யாத மழை இப்போது பெய்து வருகிறது என உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த வியாழனன்று தொடங்கிய மழை ஆறாவது நாளாகவும் தொடர்ந்து பெய்கிறது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்கின்றனர். நூற்றுக்கணக்கான வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன. கடந்த மாதம் முதல் சீனா, இந்தியா மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் மாறிமாறி வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் அழிவுகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. (க)



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினால் நடத்தப்பட்ட சமாதான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிநிகழ்வில் கலந்துகொண்ட சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணி ஆகியவற்றின் வீரர்களை முதற்படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களில் ஒருபகுதியினரை இரண்டாவது படத்திலும் வெற்றிக் கிண்ணத்துடன் குதூகலிக்கும் சென்.பற்றிக்ஸ் அணி வீரர்களை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள் : வலி.வடக்கு செய்தியாளர்)

# மூன்றாம் இடத்துக்கான தெரிவு புதியமுறையில் இடம்பெற்றது

வலி.வடக்கு,செப்.7

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினால் நடத்தப்பட்ட சமாதான உதைபந்தாட்டப் போட்டியில் 3 ஆம் இடத்திற்கான அணித் தெரிவு புதியமுறையில் இடம்பெற்றது.

ஏழு அணிகள் கலந்துகொண்ட இந்தச் சமாதான உதைபந்தாட்டப் போட்டியில் இறுதிச் சுற்றுக்குத் தெரிவுசெய்யப்பட்ட இரு அணிகள் தவிர்ந்த ஏனைய ஐந்து அணிகளும் மீண்டும் விலகல் முறையில் விளையாட அனுமதிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 3 ஆம் இடத்திற்கான ஆட்டத்துக்கு இளவாலை சென்.கென்றீஸ் கல்லூரி அணியும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும் தெரிவுசெய்யப்பட்டன.

இரு அணிகளும் பெரும் எதிர்பார்ப்புடன் விளையாடிய போதிலும் இரு அணிகளுமே ஆட்டம் முடிவடையும் வரை கோல்கள் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

வெற்றிதோல்வியைத் தீர்மானிப்பதற்காக இரு அணிகளுக்கும் தலா 3 சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன.

ஆயினும், இரு அணிகளும் ஒவ்வொரு கோல்களைப் பெற்று சமநிலை பெற்றன.

இறுதியில் வெற்றிபெற்ற அணி நாணயச் சுழற்சியின் மூலம் தெரிவுசெய்யப்பட்டது. இதில் இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.(10-86)

# தொடரை வென்றது இங்கிலாந்து அணி; மூன்றாவது போட்டி இந்திய அணிக்கு



இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையே இங்கிலாந்தில் நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை இங்கிலாந்து அணி கைபற்றியுள்ளது.

தொடரின் முதல் இரு போட்டிகளிலும் இங்கிலாந்து அணி வெற்றியீட்டியதன்மூலம் ஏற்கனவே தெடரைக் கைபற்றியிருந்தது. ஆயினும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் இந்திய அணி 23 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது. இதன் மூலம் தனது தொடர் தோல்விகளுக்கு சிறிய ஆறுதல் தேடிக்கொண்டது இந்திய அணி. ஏற்கனவே தொடரை இழந்த நிலையில் இறுதிப் போட்டியில் விளையாடிய இந்திய அணியில் பாலாஜி, அகார்கர், றொகான் கவாஸ்கர் ஆகியோர் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக நெஹ்ரா, கும்ளே, தினேஸ் கார்த்திக் ஆகியோர் சேர்க்கப்பட்டிருந்தனர். அத்துடன் துடுப்பாட்டவரிசையும் மாற்றப்பட்டது. இதன்படி ஆரம்ப வீரர்களாக அணித்தலைவர் கங்குலியும் லக்ஸ்மனும் களமிறங்கினர்.

அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டபோதும் லக்ஸ்மனால் இங்கிலாந்து அணியின் வேகப் பந்து வீச்சுக்குத் தாக்குப்பிடிக்க முடியவில்லை அவர் 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதனையடுத்து ஆடவந்தவர் முகமட் கைப். அவர் 2 ஓட்டங்களைப்பெற்றிருந்த நிலையில் ரன் அவுட் ஆனதைத்தொடர்ந்து வந்த ஷேவாக் ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார். இதனால் 48 ஓட்டங்களுக்கு இந்திய அணி 3விக்கெட்டுக்களை இழந்தது. ஆனால் மறுபுறத்தில் அணித்தலைவர் கங்குலி நிதானமாக ஆடிக்கொண்டிருந்தார். இவருடன் ஜோடி சேர்ந்த துணைத்தலைவர் ட்ராவிட் பொறுப்பாக ஆடி இருவரும் தமக்கிடையே 93 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

இதன் மூலம் இந்திய அணி 49.3 ஓவர்களில் 204 ஓட்டங்களைப் பெற்றது. அணித்தலைவர் கங்கலி 90 ஓட்டங்களையும் ட்ராவிட் 51 ஓட்டங்களையும் எடுத்தனர். நீண்ட காலத்துக்குப் பின்னர் கங்குலியின் சிறந்த துடுப்பாட்டம் இதுவாகும். ஆயினும் 10 ஓட்டங்களில சத வாய்ப்பை இழந்தார் அவர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணியின் சார்பில் ஹாா்மிசன் 4விக்கெட்டுக்களையும் டெரன் கெவ், வோா்ப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்

மிகவும் இலகுவான 205 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணிககும் அதிர்ச்சி காத்திருந்தது. ஆரம்பப் பந்து வீச்சாளர்கள் பதானும், நெஹ்ராவும் அடுத்தடுத்து விக்கெட்டுக்களைக் கைப்பற்ற 19.1 ஓவரில் இங்கிலாந்து அணி 6விக்கெட்டுக்களை இழந்து 62 ஓட்டங்களை மாத்திரமே எடுத்திருந்தது. ஆயினும் அணித்தலைவர் வோகன் மறு புறத்தில் நிதானமாக ஆடிக்கொண்டிருந்தார். அவருடன் அடுத்து ஜோடி சேர்ந்த சுழற்பந்து வீச்சாளர் ஆஷ்லி கில்ஸ் அவருக்கு கைகொடுத்தார். இருவரும் தமக்கிடையே 92 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டனர். இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்ததை அடுத்து ஏனைய இரு விக்கெட்டுக்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் வீழ்ந்தன. இதனால் 48.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. 181 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது இங்கிலாந்து அணியால். அணித்தலைவர் வோகன் 74 ஓட்டங்களையும் ஆஷ்லி இல்ஸ் 39 ஓட்டங்களையும் எடுத்தனர். பிளின்டொம்பிற்குப் பதிலாக அன்ரனி மெக்ராத் அணியில் சேர்க்கப்பட்டிருந்தார்.

பந்து வீச்சில் இந்திய அணியின் சார்பில் நெஹ்ரா, ஹர்பஜன்சிங் ஆகியோர் தலை 3 விக்கெட்டுக்களையும் பதான் 2விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனான கங்குலியும் ஆட்டத்தொடர் நாயகனாக இங்கிலாந்து அணியின் ஹார் மிசனும் தெரிவுசெய்யப்பட்டனர். (10)

# சமாதான உதைபந்தாட்டப் போட்டியில் தெரிவான சிறந்த வீரர்கள் விவரம்

வட்டுக்கோட்டை, செப்.7

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினால் விளையாட்டின் மூலம் சமாதானம் என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட ஏழு கல்லூரிகள் கலந்துகொண்ட சமாதான உதைபந்தாட்டப் போட்டியில் பரிசில்களை வென்ற வீரர்கள் விவரம் வருமாறு:-

முதல் சுற்றில் இடம்பெற்ற ஒன்பது போட்டிகளிலும் சிறந்த வீரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

மன்னார் புனித சேவியர் கல்லூரியைச் சேர்ந்த கே.சியாந்தன், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்செல்வகுமார், கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரியைச் சேர்ந்த இண்டிக பிரியந்த சில்வா, சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கே.எல்.லியன், மன்னார் புனித சேவியர் கல்லூரியைச் சேர்ந்த கே.திலீபன், ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பி.வசந், சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த சி.விக்டர், கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரியைச் சேர்ந்த இண்டிக பிரியந்த சில்வா, மன்னார் புனித சேவியர் கல்லூரியைச் சேர்ந்த கே.சியாந்தன் ஆகியோர் பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர்.

அரையிறுதி ஆட்டத்தின் சிறந்த வீரர்களாக மன்னார் புனித சேவியர் கல்லூரியைச் சேர்ந்த கே.திலீபன், கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.எப்.ஜெனிந் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடரின் ஆட்டநாயகனாக தனது அணிக்காக ஏழு கோல்களைப் பெற்றுக் கொடுத்த மன்னார் புனித சேவியர் கல்லூரி அணியின் வீரன் கே.சியாந்தனும், தொடரின் சிறந்த கோல்காப்பாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.எம்.பிலிக் ஸ்ஸிம் தெரிவு செய் யப்பட்டனர்.

சமாதான உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொண்ட பாடசாலைகளின் சிறந்த விளையாட்டு வீரர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரியின் இண்டிக பிரியந்த சில்வா, பருத்தித்துறை ஹாட லிக் கல்லூரியின் பி.வசந் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியின் ரி.சி.அன்றூவ், இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியின் கே.கே.அன்ரனி றூனதாஸ், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ரி.கமலானந்தன் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் சி.விக்டர் மன்னார் புனித சேவியர் கல்லூரியின் றொசான்தன் பெர்னாண்டோ ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.(10-86-161)




# தெல்லிப்பழைக் கோட்ட உதைபந்தாட்டம் மகாஜனா, அருணோதயா மைதானங்களில்

வலி.வடக்கு.செப்.7

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

14,16,18 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

14 வயதுப் பிரிவில் ஒன்பது பாடசாலைகள பங்குபற்றுகின்றன. இப்பாடசாலைகள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

'ஏ' பிரிவில் அளவெட்டி அருணோதையாக் கல்லூரி, அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் ஆகியனவும் -

'பி' பிரிவில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் ஆகியனவும் -

'சி' பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வசாவிளான் குட்டியபுலம் வித்தியாலயம் ஆகியனவும் -

'டி' பிரிவில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், மல்லாகம் மகாவித் தியாலயம் ஆகியனவும் இடம் பெற்றுள்ளன.

16வயதுப் பிரிவில் 10 பாடசாலைகள் பங்குபற்றுகின்றன. இந்த அணிகள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

'ஏ' பிரிவில் அளவெட்டி அருணோதையாக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை கட்டுவன் புலம் வித்தியாலயம் ஆகியனவும் -

'பி' பிரிவில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம், அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் ஆகியனவும்-

'சி' பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மயிலிட்டி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகியனவும்-

'டி' பிரிவில் வசாவிளான் மகாவித்தியாலயம், மல்லாகம் மகாவித்தியாலயம் ஆகியனவும் கலந்துகொள்கின்றன.

18 வயதுப் பிரிவில் ஆறு பாடசாலைகள் கலந்துகொள்ளவுள்ளன. இந்த அணிகள் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் லீக் முறையில் இடம்பெறவுள்ளன.

'ஏ' பிரிவில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், தெல்லிபபழை மகாஜனாக் கல்லூரி, மலலாகம் மகாவித்தியாலயம் ஆகியனவும் -

'பி' பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.

இப்போட்டிகள் யாவும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானங்களில் இடம்பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் மு.லோகநாதன் மேற்கொண்டுள்ளார். (10-86)



யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு கடந்த 27ஆம், 28ஆம், 29 ஆம் திகதிகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் பயிற்சிமுகாமில் கலந்துகொண்ட ஒரு தொகுதி மாணவர்களையும் பயிற்சியில் கலந்துகொண்ட மாணவன் ஒருவருக்கு இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளர் பி.டி.சிறிசேன சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

உதயன்

## வாக்காளர் பதிவைத் தவறாது செய்க!

இலங்கைத் தீவு பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து சுதந்திரம் பெற்ற கையோடு ஈழத் தமிழர்களின் உரிமைக்கான குரல் கிளம்பத் தொடங்கிவிட்டது.

சுமார் மூன்று தசாப்த காலம் அகிம்சை வழியில் - சாத்வீக நெறியில் - எழுப்பப்பட்ட இந்தக் குரல் எழுபதுகளின் பிற்பகுதியில் ஆயுத வழிக்குத் திரும்பியது எல்லோரும் அறிந்ததே.

சாத்வீக நெறியில் உரிமைக்கான போராட்டம் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் மக்களின் வாக்குரிமை பலம் மிக்கதாகவும், முக்கியத்துவமுடையதாகவும் இருந்தது. ஜனநாயக நெறிமுறைகளுக்கு ஊடாகவும் தனது நடவடிக்கை நெறிகளைக் கொண்டுசெல்ல வேண்டிய தேவை - கட்டாயம் - சாதவதீகப் போராட்டமுறைக்கு இருந்தது. அதனால் தேர்தலுக்கும் வாக்குக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது.

ஆனால், தேர்தல் மூலம் ஜனநாயக வழியில் - வாக்குகளின் ஊடாக - சிறுபான்மை இனங்கள் பிரதிபலித்த அபிலாசைகளை, பெரும்பான்மை என்ற பலத்தை வைத்துக்கொண்டு போட்டு மிதித்து அவர்களை அடக்கும் வாய்ப்பையும், வசதியையும், அதிகாரத்தையும் ஜனநாயக முறைகள் பேரினவாதத்துக்கு வழங்கியதால், அந்த ஜனநாயக முறைகள் மீது நம்பிக்கை இழக்கவும் -

வேறு மாற்று மார்க்கங்களை நாடவும் -

வேண்டிய தேவை சிறுபான்மை இனத்தவருக்கு ஏற்பட்டது தவிர்க்க முடியாததாகவிட்டது. அந்த நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர்.

பெரும்பான்மையினருக்கு, ஜனநாயக வழிமுறை வழங்கிய அதிகாரமும், வலுவுமே தங்களை அடக்கி, ஒடுக்கி, தங்கள் உரிமைகளைப் பறிப்பதற்கான வசதியை வழங்குகின்றன என்பதை உணர்ந்துகொண்ட சிறுபான்மையினர், ஜனநாயக வழிமுறைகளுக்கு வெளியே வந்தேனும் அந்த அதிகாரத்தையும் பலத்தையும் முறியடிக்கும் சக்தியைத் தாங்களும் நாடிப் பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஜனநாயக நெறிமுறையிலிருந்து பிறழ்ந்து ஆயுத வழியில் தங்களைப் பலப்படுத்தவும், ஸ்திரப்படுத்தவும், இரத்தம் சிந்தும் போராட்ட முறைக்குத் தங்களுடைய விடுதலைப் பாதையைத் திருப்பவும் சிறுபான்மையினர் த்தள்ளப்பட்டதன் சுருக்க வரலாறு இதுதான்.

விடுதலைப் போராட்டப் பாதை ஜனநாயக வழியிலிருந்து மாற்றுவழிக்குத் திரும்பத் தொடங்கியதும் ஜனநாயகம், தேர்தல், வாக்களிப்பு, வாக்குரிமை என்ற விவகாரங்கள் மீது சிறுபான்மை மக்களின் நம்பிக்கையும் வெகுவாகக் குறைவடையத் தொடங்கியது.

ஆயுதப் போரட்டங்கள், மோதல்கள், சண்டைகள் ஆகியவற்றுக்கு மத்தியில் வெளிவேஷத்துக்கு நடத்தி முடிக்கப்பட்ட தேர்தல்களும் அவற்றின் முடிவுகளும் ஜனநாயகம், மீதும் தேர்தல் முறைகளின் மீதும் மக்களுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் கூட மேலும் சிதறடிக்க வைப்பனவாக அமைந்தன.

இன்றும்கூட அந்த நிலைமை முற்றாக மாறிவிட்டதாக இல்லை.

ஜனநாயகத் தேர்தல் முறைகளைக் கேலிக் கூத்தாக்கி, குளறுபடிகள் பண்ணி, சுத்துமாத்து முறையில், ஜனநாயகத்தைப் பயன்படுத்தி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, அதைத் தக்கவைத்து, பதவி, சுகம் அனுபவித்தவர்கள் - இப்போது யுத்தநிறுத்த சமயத்தில் மக்களின் அதிகளவான பங்களிப்போடு நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் தங்களது செல்வாக்கு என்னவென பது நிருபிக்கப்பட்ட நிலையில் - அந்த முடிவுகள் வேம்பாய்க் கசந்த நிலையில் - ஜனநாயகம், தேர்தல், வாக்களிப்பு என்பன குறித்துப் புதிய 'தத்துவம்' பேசுகின்றார்கள்.

எது, எப்படியோ ஆயுத வழிப்போராட்டத்தின் மத்தியில் ஜனநாயக வழிமுறையில் - சாத்வீக வழியில் - மக்கள் கருத்தையும் சர்வதேச மட்டத்தில் எடுத்தியம்பும் வாய்ப்பான சூழல் இப்போது சிறுபான்மையினருக்குக் கிட்டியிருப்பது நல்லதோர் சந்தர்ப்பம்.

இந்தச் சமயத்தில் ஒவ்வொரு பிரசையும் - சிறுபான்மையினரோ, பெரும்பான்மையினரோ - சிறுபான்மையினரில் தமிழரோ, முஸ்லீமோ, பறங்கியரோ - தமது கருததையும் விருப்பையும், அபிலாசையையும் வாக்கு மூலம் தவறாது வெளிப்படுத்த வேண்டிய கட்டாய - தவிர்கமுடியாத - சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அதிலும் குறிப்பாக சிறுபான்மையினருக்கு இந்தக் கடமை மிகமிக அத்தியாவசியமாகியுள்ளது.

இந்தச் சூழ்நிலையிலேயே இப்போது வாக்காளர் பட்டியலில் புதிதாக இணைய வேண்டியவர்களைப் பதியும் பணி நடக்கின்றது. இவ்வாரத்துடன் அந்த வேலை பூர்த்தியாகிவிடும்.

ஆகவே, வாக்காளர்களாகத் தம்மைப் பதிவு செய்யாதவர்கள் - குறிப்பாக அண்மைக்காலத்தில் 18 வயதை எட்டி, வாக்களிக்கும் தகுதியைப் பெற்றவர்கள் - இந்த வரலாற்றுக் கடமையை உணர்ந்து, தமது பெயர்களை வாக்காளர் பட்டியலில் பதியும் கடமையை சிரத்தையோடு நிறைவு செய்யவேண்டும் என வற்புறுத்துகிறோம்.

சமூகத்தில் மூத்தவர்கள், இப்பணியில் நமது இளைய சமூகம் ஊக்கத்துடன் பங்குபற்றுகின்றதா என்பதை சிரத்தை எடுத்துக் கவனித்து உறுதி செய்யவேண்டும்.

# தமிழ் மாணவர் ஒன்றிய செயலகம் நேற்று வைபவ ரீதியாகத் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள கம்பன் கோட்டத்திற்கு முன்பாகவுள்ள கட்டடத்தில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.குலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தலைமைச செயலகக் கட்டடத்தை வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத் தலைவர் வணபிதா. கருணாரட்ணம் அடிகளா நாடா வெட்டித் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஆலோசகர் எஸ். வரதராஜன், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.தீசன் மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமார் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

மாவீரன் பொன் சிவகுமாரன் மற்றும் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் ஆகியோருடைய திருவுருவப் படங்களுக்கான ஈகச்சுடரினை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன், யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியச் செயலாளர் எஸ். அர்ச்சுனன் ஆகியோர் ஏற்றினர்.

திருவுருவப் படங்களுக்கான மலர் மாலையினை தென்மராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சிவநாத் அணிவித்தார்.

தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி.நளனும், யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியக் கொடியை தமிழ் மாணவர் ஒன்றியப் போசகர் எஸ்.நிலக்ஷனும் ஏற்றிவைத்தனர்.

செயலகத்தின் பெயர்ப் பலகையினை யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் திரைநீக்கம் செய்துவைத்தார்.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத் தலைவர் வணபிதா . மா.கருணாரட்ணம் அடிகளார் ஆகியோரும் - சிறப்புரைகளை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வக்குமார், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், தமிழ் மாணவர் ஒன்றிய ஆலோசகர் எஸ்.வரதராஜன் மற்றும் தமிழ் மாணவர் ஒன்றியப் போசகர் எஸ்.நிலக்ஷன் ஆகியோரும் நிகழ்த்தினர்.

பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(ஐ-5-86)




யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் நல்லூர் கோயில் பின் வீதியில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் தலைவர் வணபிதா கருணாரட்ணம் அடிகளார் நாடாவெட்டிச் செயலகத்தைத் திறந்துவைப்பதையும், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் செயலகத்தின் பெயர்ப்பலகையினைத் திரைநீக்கம் செய்துவைப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

## பீடாரோஹண விழாவில் நூல் வெளியீடு

நல்லை ஆதனத்தில் திருக்கார்த்திகை தினமான நேற்றுமுன்தினம் 38 ஆவது பீடாரோஹண விழா நடைபெற்றது. ஆதீனத்தை ஸ்தா பித்தவரான முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குருமூர்த்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப பெருமானின் சிவலிங்க உருவத்திற்கு காலையில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. வேத, தேவார பாராயணம் நடைபெற்று, இரண்டாது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளுக்குச் கொலு பூசை நடைபெற்று சோடசோபசாரம் இடம்பெற்றது. பின்னர் முதலாவது குருமஹா சந்நிதானதன் வாழ்க்கை வரலாற்று நூலான 'நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம்' வெளியீடு இடம்பெற்றது. சுவாமிகளிடமிருந்து நூலின் முதற்பிரதியை சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை பெற்றுக் கொண்டார்.

இந்த நூலினை இராசையா ஸ்ரீதரன் தொகுத்துள்ளார். தொடர்ந்து சுவாமிகளின் பட்டணப் பிரவேசம் நடைபெற்றது.

(10-202)

## புதிய பீடாதிபதி இரா.சிவச்சந்திரன்

யாழ். பல்க லைக்கழகத்தின் புதிய கலைப்பீடா திபதியாக புவியி யற்றுறைத் தலை வர் பேராசிரியர் இரா சரத்தினம் சிவசசந் திரன் தெரிவாகி யுள்ளார். கடந்த புதன்கிழமை துணைவேந்தர் தலைமையில இடம்பெற்ற தேர்தலில் அதிக வாக்குக ளைப் பெற்று கலைப்பீடாதிபதியாக நியமிச் கப்பட்டுள்ள இவர் புவியியற்றுறைத் தலை வராகக் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேல பணியாற்றியுள்ளார். கலை, இலக்கியத் துறை, இதழியல் கலை என்பவற்றில் ஆர்வமுள்ள இவர், எமது பிரதேசத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு அபிவிருத்திக்கும் மேம்பாட்டுக்காகவும் உழைத்துவருபவர்.

அத்துடன், பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளராகப் பத்து வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றிவருகின்றார்.

(10-202)

## நிர்வாக சேவையின் பயிற்சியை நிறைவுசெய்த எண்மருக்கு நியமனம்

யாழ்ப்பாணம்,செப்.7

இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து ஒருவருட காலப் பயிற்சியைப் பூர்த்திசெய்த எட்டுப் பேருக்கு யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குரிய நியமனங்கள் கடந்த முதலாம் திகதி முதல் வழங்கப்பட்டுள்ளன. இந்த எட்டுப்போரில் 4 பேர் உதவிப் பிரதேச செயலர்களாகவும் மூவர் உதவி அரச அதிபர்களாகவும். ஒருவர் நிர்வாக உத்தியோகத்தராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி உதவிப் பிரதேச செயலராக எஸ்.தேவாந்தினியும், உடுவில் உதவிப் பிரதேச செயலராக ரி.மஞ்சுளாதேவியும், சங்கானை உதவிப் பிரதேச செயலராக வை.பரந்தாமனும், தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலராக எஸ்.முரளிதரனும நியமிக்கப்பட்டுள்ளனர்.

மருதங்கேணி உதவி அரச அதிபராக ஆர்.ரி.ஜெயசீலனும், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபராக கே.ஸ்ரீமோகனும் யாழ். செயலக உதவி அரச அதிபராக எம்.பிரதீபனும் நியமிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், எம்.பற்றிக் நிரஞ்சன் நெடுந்தீவு உதவி அரச அதிபர் அலுவலக நிர்வாக உத்தியோகத்தராக நியமனம் பெறறுள்ளார்.

இதேவேளை -

மருதங்கேணி உதவி அரச அதிபராக கடமையாற்றி வந்த வி.பி.வேலாயுதபிள்ளை மற்றும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோர் யாழ். செயலகத்திற்கு இடமாற்றம் செயயப்பட்டுள்ளனர். (10-5-202-203)

### நாளை

ஆவணி 23

புதன்கிழமை

(08.09.2004)

திதி : நவமி

பிற்பகல் 1.14 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம்

காலை 7.16

சுபநேரம்: 4.34 - 6.04

ராகுகாலம்: 12.4 - 1.34

(பழைய நேரப்படி)

## வைத்தியசாலைத் தேவைகள் குறித்து ஆராய்வதற்கு ஜப்பானியக் குழு

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ்.போதனா வைத்தியசாலைக்குத் தேவைப்படும் உதவிகள் தொடர்பாக ஆராய்வதற்கென ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனத்தைச் சேர்ந்த 6 பேர் அடங்கிய குழுவொன்று கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை யாழ். வந்துள்ளது.

இவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று யாழ். போதனா வைத்தியசாலையின் தேவைகள குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குழுவினர் கடந்த 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை யாழ். வைத்தியசாலையில் வைத்தியசாலை அதிகாரிகள் மற்றும் வைத்திய நிபுணர்களுக்கு ஜப்பான் அரசின் வேலைத்திட்டம் தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை நடத்தினார்கள். இதன்போது யாழ் வைத்தியசாலையின் உடனடித் தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

வைத்தியசாலைக்குத் தேவையான உதவிகள் தொடர்பான திட்டம் ஒன்றைத தயாரித்து வைத்தியசாலை நிர்வாகம் இக்குழுவினரிடம் கையளிக்கவுள்ளது.

(8-7-15)

### உதயவாக்கு

மனிதகுணம் அவனது மனம், புத்தி ஆகியவற்றைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

49 - தொடர் இலக்கமுள்ள DL 135 மொடல் உழவு இயந்திரம் பெட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.42, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P. 0777 170069. (36165)

சைவக்கடை அரவை மிசின், வில்கோ இஞ்சின் என்பவை எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/4, கிழக்குப் புகையிரத ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P. 4590581. (36151)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

அழகிய சிறிய இன பொம்மேரியன் 1½ வயது ஆண் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மா.பவளலிங்கம், கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு. (36156)

## காணி விற்பனைக்கு

கொடிகாமத்தில் கண்டி வீதியில் இருந்து 250 யார் தூரத்திலும் கச்சாய் வீதியாலும் போகக்கூடிய மின்சார வசதியும் தென்னை வரும்படியும் உள்ள 50 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: V.N.சோமசுந்தரம் இல.393/17, கோயில் வீதி, நல்லூர் T.P. 021 222 6461. (36027)

## காணி தேவை

நல்லூர்க் கோயிலுக்கு மிக அண்மையில் நல்ல சுற்றாடலில் ஒன்று முதல் ஒன்றரைப் பரப்புக் காணி விலைக்குத் தேவை. தொடர்பு: 071 - 4078976, 0777 - 355061. (சி-37477)

## பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. சகல வசதிகளும் அளிக்கப்படும். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். தொடர்பு: S.தியாகராஜா, 175/8, கைலாய பிள்ளையார் பின் வீதி, நாவலர் வீதி, (சொக்கன் கடை அருகில்) யாழ்ப்பாணம். (36162)

## தவறிவிட்டது

கடந்த மூன்று வாரங்களுக்கு முதல் Dr. Jaganathan, Govt. Hospital P.Town Hatton என்பவருடைய வாகன சாரதிப்பத்திரம் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து Mr. M. Mariyanayagam, Food and Lodge, New Rest House, 19, Somasundram Avenue, Chundukkuli, Jaffna எனும முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (36161)

## இலகு திருமண சேவை

1973ஆம் ஆண்டு பிறந்த, கேட்டை நட்சத்திரம், செவ்வாயற்ற, கிரகபாவம் 25, ஜேர்மனியில் பிரஜாவுரிமையுடன், மனேச்சராகத் தொழில்புரிபவருக்கு படித்த, அழகிய, மணமகள் தேவை. மணமகன் விரைவில் வரவுள்ளார். தொடர்பு: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(36149)

1975 ஆம் ஆண்டு பிறந்த, சதய நட்சத்திரம், செவ்வாய் 2, U.K. வதிவிட பிரஜாவுரிமை பெற்ற Accountant மணமகனுக்கு Accountancy படிக்கின்ற, அழகான மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (36149)

## திருமண சேவை

74ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா சிற்றிசன் R.C. மணமகனுக்கும் 63ஆம் ஆண்டு சொந்தத தொழில் செய்யும் மணமகனுக்கும் மணமகள்கள் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பதிவுகள் யாவும் இலவசம்.
(36158)

**கொழும்பு MOON BEAUTY CARE இன் DIPLOMA IN BEAUTY CULTURE AND ADVANCE DIPLOMA COURSE**
**புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.**

★ தென்மராட்சி : ஏசியன் கல்வி நிறுவனம். புத்தூர் சந்தி, மீசாலை.
காலம்: 2004.09.08 நேரம் 4.30 (பு.நே.)

★ யாழ்ப்பாணம் : இல. 94. பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி.
காலம்: 2004.09.07 நேரம் 4.00 (பு.நே.)

★ ஏற்கனவே பதிவை மேற்கொண்டவர்களும் புதிதாகச் சேர விரும்புகிறவர்களும் தொடர்புகொள்ளவும்.
★ Facials மட்டும் படிக்க விரும்புவோரும் Facials செய்யவிரும்புவோரும் தொடர்புகொள்ளவும்.
★ Hair Care (தலைமுடி சம்பந்தமான அனைத்தும்) பயிலவிரும்புவோரும், சேவை பெற விரும்புவோரும் தொடர்புகொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:
**0777 570138, 021 2263365**
**திருமதி B.அகிலா**
(அழகுக்கலை நடன ஆசிரியை)
(36101)(33-42-16-17)

## சிறுவர் விளையாட்டு விழா

வலிகாமம் - தெற்கு, செப்.7

மானிப்பாய் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் நடத்தப்படும் கட்டுடை முன்பள்ளி பாடசாலையினரின் வருடாந்த விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் பி.விக்டர் கலந்துகொள்வார். (ஜ-152)

## தேவை

1. எமது கணனி மயப்படுத்தப்பட்ட நவீன மருத்துவ ஆய்வு கூடத்தில் தகுந்த பயிற்சியின் பின் சேவையாற்றுவதற்கு க.பொ.த. (உயர் தரம்) விஞ்ஞானப்பிரிவில் சித்தியடைந்தவர்கள் தேவை.
2. கணனி வேலையில் ஆற்றலுள்ள கணனி இயக்குநர் தேவை.

ஆர்வம் உள்ளவர்கள் 08.09.2004 புதன் கிழமை நண்பகல் 12.00மணிக்கு சொந்தக் கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பத்துடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

**சன்றைஸ் மெடிக்கிளினிக்,**
388, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ்நிலைய வைரவர் கோயில் முன்பாக),
யாழ்ப்பாணம்.
(36157) (21-39-16-15)

**இணையத் தளம் ஊடாக**
**24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது**

WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி

இணைய முகவரி: WWW.Wtrfm.com
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க
நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
26 உற்சவ நாள்களிலும்
(ஒகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்).

**உலகத் தமிழர் வானொலியுடன்**
நேரடியாக இணைய
MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969
(சி-36863)

**உலகத் தமிழர்களின் உறவுப் பாலமாக**
**உலகத் தமிழர் வானொலி**
ஊடக அனுசரணை:- 'உதயன்'


இளைஞர் யுவதிகளின் கனவுகளை நனவாக்கும்

**இளம் பருவத்தினரின் சேமிப்புக் கணக்கு**



18 plus Youth Savings Account
இளம் பருவத்தினருக்கு அன்புடன்

ஒரு லட்சம் ரூபா வரையிலான சுகாதாரக் காப்புறுதி

முதல் குழந்தைக்கு ரண் கெகுளு கணக்கு

உயர் கல்விக்கான புலமைப்பரிசில்

உயர் வட்டி

திருமணநாளில் ஒரு பவுண் தங்கப்பரிசு

ரூபா. 5 லட்சம் வரையிலான ஆயுள் காப்புறுதி

VISA Electron & Credit Card

வங்கிக் கடன் வசதி

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

Twin Advertising

# மண்ணின் பண்பாட்டு எழுச்சிக்கு எமது மக்கள் கைகொடுக்க வேண்டும்

## பண்டாரவன்னியன் விழாவில் முல்லைத்தீவு அரச அதிபர் உரை

ஒட்டுசுட்டான்,செப்.7

எம்து மண்ணின் பண்பாட்டு எழுச்சிக்காக மக்கள் கைகொடுத்து உதவவேண்டும். அப்போதுதான் நாம் எமது பாரம்பரிய கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் பண்டாரவன்னியன் அறங்காவற் கழகத் தலைவரும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபருமான திருமதி இமெலடா சுகுமார்.

பண்டாரவன்னியனின் 201 ஆவது நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு சொன்னார்.

அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த வன்னி மண்ணின் பாரம்பரிய உலகம் அறிய எழுச்சிகொள்ளவேண்டும். ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் உலகப் புகழ்பெற்ற ஆலயமாக விளங்கிவருகின்றது. அத்தோடு, பண்டார வன்னியனின் வரலாறு படைத்த உலகப் புகழ்பெற்ற பிரதேசமாகவும் இது விளங்குகிறது.

நாம் இந்தப் பிரதேசத்தை மட்டுமல்ல இந்த மாவடடத்தில் எங்களுடைய கலை, கலாசாரங்களை வளர்ப்பதில் மிகவும் அக்கறை காட்ட வேண்டும்.

அறிவாளிகள், கல்விமான்கள் இந்த விடயத்திலே கவனமெடுத்துக் கொள்ளவேண்டும். கலைஞர்கள் ஒன்றுபடவேண்டும்; கலைகள் அழியாத வகையிலே பராமரிக்கப்பட வேண்டும்; பாதுகாக்கப்படவேண்டும்; மக்கள் பண்பாட்டு எழுச்சிக்காக கைகொடுக்கவேண்டும். இன்று கல்வி கலாசார, பண்பாட்டைப் பேண தமிழீழ விடுதலைப் புலிகளின் பண்பாட்டுப் பிரிவு மிகவும் சிறந்தசேவையை வழங்கிக் கொண்டிருக்கின்றது. மிகவும் சிறந்த முறையிலே ஆய்வுகளை அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கி எங்களுடைய பழைய பாரம்பரிய கலாசாரங்களைப் பாதுகாக்கவேண்டும்.

தற்போது பட்டப்படிப்புக்களை மேற்கொண்டு வருகின்ற இளைஞர்கள், மாணவர்கள வன்னி மண்ணின் பாரம்பரியங்களை மூதாதையரிடமிருந்து கற்று எழுத்துவடிவம் கொடுப்பார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற மாணவர்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். அவர்கள் அறிவை வளர்த்துக்கொள்வது மட்டுமல்ல இந்த மாவட்டத்திற்கு அவர்கள் செய்கின்ற கலை, கலாசாரம் தொடர்பான ஒரு பெருங் கைங்கரியம் என்று நாங்கள் கருதுகின்றோம் - என்றார்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச. கனகரத்தினம் தெரிவிக்கையில்:-

எவரும் பண்டாரவன்னியனின் பணியினைத் தொடராததினால் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்பு எமது தேசியத் தலைவர் இந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். வன்னியிலே உள்ள மக்கள் போராட்டத்திற்கு வலுவூட்டி எத்தனையோ போராளிகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் பண்டாரவன்னியனின் வரலாறுகள் தான் காரணமாக அமைந்துள்ளது.

இந்த மண்ணின் மைந்தர்கள் எமது மக்களுக்காக போராடுகின்றார்கள். எல்லாம் பண்டாரவன்னியன் காட்டிக்கொடுத்த வித்தைதான் இங்கு நடைபெறுகிறது. எனவே, பண்டாரவன்னியன் போராடி வெற்றியடைந்த நாளைக் கொண்டாடிகொண்டு இருக்கின்றோம். அவனும் வன்னி மண்ணிலே பிறந்தபடியால்தான் அவனுக்கு இந்த வீரஉணர்வு.

இதேபோன்று எத்தனையோ தளபதிகள், போராளிகள் வீரச்சாவு அடைந்துள்ளார்கள். இதுபோன்ற நிகழ்வுகளை அவர்களுக்கும் செய்யவேண்டும் - என்றார்.

(8-341)

# புளியம்பொக்கணையில் மிகப்பெரிய நெற் களஞ்சியம்

பரந்தன்,செப்.7

'வேல்ட் விசன்' (உலக தரிசனம்) நிறுவனத்தின் நிதிஉதவியுடன் 14 லட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவில் கிளிநொச்சி மாவட்ட கமக்காரர் அமைப்பு சம்மேளனத்தினால் நெற்களஞ்சியம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

புளியம்பொக்கணை சந்தியிலுள்ள கமநலசேவை நிலையத்திற்கு பின்புறமாக வுள்ள காணியிலேயே நெற்களஞ்சியம் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புளியம்பொக்கணை சந்தியில் முன்பு இருநத மிகப்பெரிய நெற்களஞ்சியம் ஸ்ரீ லங்கா இராணுவ நடவடிக்கையின்போது முற்றாக அழிக்கப்பட்டது.

இதனால், கண்டாவளைப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்லைக் களஞ்சியப் படுத்துவதற்கு உரிய இடம்இல்லாது விவசாயிகள் பெரிதும் கஷ்டத்தையும், பாதிப்பையும் எதிர்நோக்கி வந்தனர்.

தற்போது, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் அமைக்கப்பட்டு வரும் நெற்களஞ்சியத்தால் கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள விவசாயிகள் பெரிதும் நன்மையடைவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.(8-352)

### கிளிநொச்சிக் கல்வி அலுவலகத்தில் பொது அறிவு வினா வங்கி

வட்டக்கச்சி,செப்.7

ஜீ.சி.ஈ. உயர்தரப் பொதுச் சாதாரண பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பொது அறிவு வினா வங்கியொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு நடைமுறை பொது அறிவு சம்பந்தமான 25 வினாக்களை ஒவ்வொரு மாதமும் அனுப்பிவைக்குமாறு கல்விப் பணிப்பாளர் பாடசாலைகளைக் கேட்டுள்ளார்.

இம்முறை வெளியான ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறுகளில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்ற சில மாணவர்கள் பொதுச் சாதாரண பரீட்சையில் சித்தி பெறாமையை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(8-405)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் பற்சிகிச்சைப்பிரிவு திறந்துவைப்பு

வட்டக்கச்சி,செப்.7

'யுனிசெவ்' நிறுவன நிதியுதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பற்சிகிச்சைப் பிரிவு கடந்த 25ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வு பிராந்திய பற்சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி. மா.தவராசா தலைமையில் நடைபெற்றது. பற்சிகிச்சைப் பிரிவினை 'யுனிசெவ்' நிறுவனப் பிரதிநிதி பெனிபுறூண் அம்மையார் திறந்துவைத்தார். இந்நிகழ்வில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்திய மூர்த்தி, மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சிவானந்தன் ஆகியோரும் வைத்திய அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இச்சிகிச்சைப்பிரிவுக்குத் தேவையான நவீன உபகரணங்களும் 'யுனிசெவ்' நிறுவனததினால் வழங்கப்படடுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(8-405)

## வரட்சி நிவாரணம்

வட்டக்கச்சி,செப்.7

வரட்சி காரணமாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் பயிர்ச்செய்கை பாதிப்புற்றோருக்கான நிவாரணத்தை வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான பதிவுகள் கிராம சேவகர்களூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, பாதிக்கப்பட்டோர் தமது பிரிவுக் கிராமசேவகரின் மூலம் பதிவினை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (8-405-201)




## நியாப் திட்டத்தின் கீழ்

# புனரமைக்கப்பட்ட பொன்னாவெளிக் கிராமம் கிராம அமைப்புக்களிடம் கையளிக்கப்பட்டது

பூநகரி, செப்.7

'நியாப்' திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்ட பொன்னாவெளிக் கிராமம் கிராம அமைப்புக்களிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பொன்னாவெவி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.குமாரசாமி தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக பொன்னாவெளியில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் மாணாக்கரால் ஸ்தாபிக்கப்பெற்ற திருவெண்ணாமலைச்சிவாலயம் புனரமைப்புச் செய்வதற்காக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அடிக்கல்லை நாட்டினார்.

பின்னர் 'நியாப்' திட்டத்தன் கீழ் அமைக்கப்பெற்ற பொதுநோக்கு மண்டபத்தில் புனரமைப்புச் செய்யப்பட்ட திட்டங்கள் கையளிக்கும் நிகழ்வு ஆரம்பமாகியது. இதில் மங்கள விளக்கினை அரச அதிபர் தி.இராசநாயகம் ஏற்றிவைக்க தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழன் ஏற்றிவைத்தார்.

பொதுநோக்கு மண்டபத்தினை அரச அதிபர் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

தொடர்ந்து முழங்காவில் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சுந்தரமூர்த்தி தலைமையில் புனரமைப்புச் செய்யப்பட்ட கிராஞ்சிக்குடாக் குளம் வேரவில் கமக்கார அமைப்பின் தலைவர் செ.குழந்தைவேலிடம் கையளிக்கப்பட்டது. அத்தோடு புனரமைப்புச் செய்யப்பட்ட வீதிகள் பொன்னாவெளிக் கிராம அபிவிருத்திச் சங்கத்திடமும் பொதுநோக்கு மண்டபம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திடமும் கையளிக்கப்பட்டன.

(8-403)



தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியுதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் மணியங்குளம் வீடமைப்புத் திட்டத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் நடைபெற்றது.

அடிக்கல்லை அப்பகுதிக் கிராம அலுவலர் கே.மகேந்திரன் நடுவதைப் படத்தில் காணலாம். *(படம்: ஸ்கந்தபுரம் செய்தியாளர்)*

## ஆசிரியர்தினப் போட்டிகள்

வட்டக்கச்சி,செப்.7

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை ஆசிரியர்களிடையே கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகிய போட்டிகளை கிளிநொச்சி கல்வி வல யத்தின் தமிழ்த்துறை நடத்தவுள்ளது.

கவிதை 300 சொற்களுக்குக் குறையாமலும், கட்டுரை, சிறுகதை ஆகியன 500 சொறகளுக்குக் குறையாமலும் இருத்தல வேண்டும். ஆசிரியர் பணி, சமூக எதிர்பார்ப்பு, ஆசிரியத்துவத்தின் உயர்வு, சிறப்பு, பெருமை, ஆசிரியத்துவம் எதிர்கொள்ளும் சவால்கள் போன்ற எண்ணக்கருக்களை அடிபபடையாகக்கொண்டு தலைப்புகள் போட்டி நடைபெறும்போது வழஙகப்படும்.

இதற்கான விண்ணப்பங்களை அதிபரூடாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கேட்டுள்ளார். (8-405)

## தண்ணீருக்குத் தட்டுப்பாடு

பரந்தன்,செப்.7

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கோரக்கன்கட்டு கிராமத்தில் குடிதண்ணீருக்குத் பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால், இங்கு வசித்துவரும் சுமார் 450 குடும்பங்கள் குடிதண்ணீர் மற்றும் பாவனைக்கான தண்ணீர் வசதி இன்றி அவலப்படுகின்றனர்.

கோரக்கன்கட்டு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் பௌசர் மூலம் தண்ணீர் வழங்கி வந்தனர். ஆனால், தற்போது இந்நீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதால், காலநடைகள் மற்றும் மனித தேவைகளுக்கான நீரையும் பெறமுடியாதுள்ளதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (8-352)

## அறிவுறுத்தல் செயலமர்வு

வட்டக்கச்சி,செப்.7

கிளிநொச்சி வலயப் பாடசாலை அதிபர்கள மற்றும் தகவல் தொழில்நுட்பப் பாட ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல் செயலமர்வு ஒன்று இன்று 7 ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை கிளிநொச்சி மகாவித்தியாலத்தில் நடைபெறுகிறது.

(8-405-201)

## அபிவிருத்திப் பணிகள் பூர்த்தியாகின்றன

வட்டக்கச்சி,செப்.7

வட்டக்கச்சி மாயவனூர் கிராமத்தில் 'நியாப' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப்பணிகள் பூர்த்தியாகி வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பு மற்றும் பொதுநோக்கு மண்டப அமைப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே பூர்த்தியாகியுள்ளன.

மேலும் தற்போது அமைக்கப்பட்டுவரும் பொதுக்கிணறுகள் இரண்டினதும் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுப் பொதுஅமைப்புக்களிடம் கையளிக்கப்படவுள்ளன. (8-405-201)

## 7 முன்பள்ளிகளுக்கு கதிரைகள் வழங்கப்பட்டன

பரந்தன்,செப்.7

பளை - பச்சிலைப்பள்ளி தேசிய எழுச்சிப பேரவையின் அனுசரணையுடன் பச்சிலைப பள்ளி பிரதேசத்தில் உள்ள 7 முன்பள்ளிகளின் ஆசிரியருக்கான கதிரைகள் கடந்த மாதம 4 ஆம் திகதி பளைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் வின்சனினால் வழங்கப்பட்டன.

மாவீரர் கருணன், மாவீரர் கீர்த்தி, மாவீரர் கணபதி, மாவீரர் சென்.பீற்றர், மாவீரர் றெபேக்கா, மாவீரர் ரஞ்சித், மாவீரர் இளம்பிறை ஆகிய முன்பள்ளிகளுக்கான ஆசிரியர் கதிரைகள் பளை அரசியல்துறைச் செயலகத்தில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பளைபகுதிக்கான இணைப்பாளர் இளங்கோவிடம் வழங்கப்பட்டன. (8-352)

## கட்டாக்காலி நாய்கள் அதிகரிப்பு

வட்டக்கச்சி,செப்.7

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகின்றன. வீதிகளில் பெருமளவான நாய்கள் கட்டாக்காலிகளாக அலைந்து திரிகின்றன.

அண்மையில் வட்டக்கச்சி சில்வா வீதிப் பகுதியில் இருவர் விசர் நாய்க்கடிக்கு உள்ளாகி தற்போது வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.


(8-405)

## ஒட்டுசுட்டானில் முல்லை. மாவட்ட கூ.சங்கக் கிளை

ஒட்டுசுட்டான்,செப்.7

ஒட்டுசுட்டானில் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவுக் கிளை திறப்பதற்கான அனுமதியினை கூட்டுறவு உதவி ஆணையாளர் வழங்கியுள்ளார்.

ஒட்டுசுட்டானில் மாவட்டக் கூட்டுறவுக் கிளை திறக்கப்படவேண்டும் எனப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்ததையடுத்து ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் அதற்கான காணியினை வழங்கி கட்டடப் பணிகளை ஆரம்பிக்குமாறு கூட்டுறவு உதவி ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார். (8-341)


அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் கடந்த சனியன்று வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன. நிகழ்வில் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையுரை நிகழ்த்துவதை முதலாவது படத்தில் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்ட சைவப்புலவர் வ.கந்தசாமி, சைவப்புலவர் ஏ.அனுசாந்தன், பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ணஐயர், நல்லை ஆதீன முதல்வர் மற்றும் சைவப்புலவர் சங்க உறுப்பினர்கள் அடுத்துள்ள படங்களில் உள்ளனர்.

# சைவப்புலவர் சங்க ஆண்டுவிழா சனியன்று சிறப்புற நடைபெற்றது

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை, வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சிறப்புற நடைபெற்றன.

சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் கலந்துகொண்டு பட்டங்களை வழங்கிக் கௌரவித்தார்.

ஆசியுரையினை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் நிகழ்த்தினார்.

தொடர்ந்து 'உண்மை விளக்கம்' என்ற சித்தாநத சாஸ்திர நூல் வெளியீடு இடம்பெற்றது.

நூலின் வெளியீட்டுரையை தமிழ் நாடு திருவாவடுதுறை ஆதீனசமயப் பிரசாரகர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் நிகழ்த்தினார்.

நூலின் முதற்பிரதியை சைவபரிபாலன சபைப் பொருளாளர் வ.தயாபரன் பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதிகளை சைவப்புலவர் மற்றும் பிரமுகர்கள் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளாக 'இன்றைய வாழ்வியலில் சைவம்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் தலைமையில் கருத்தரங்கும், சைவப்புலவர் ஆ.தங்கமயில் தலைமையில் 'யாரொடு நோகேன்' என்னும் பொருளில் சிறப்புக், கவியரங்கும் நடைபெற்றன. (எ-202 204)

## வீதியால் சென்றவர் தாக்கப்பட்டார்

வீதியில் நடந்து சென்ற நபர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட சம்பவம் சனி இரவு இடம்பெற்றது. மீசாலை வடக்கைச் சேர்ந்த சுப பிரமணியம் இராமகிருஷ்ணன் (வயது 58) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியாசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.(3-117)


## நல்லதொரு வாய்ப்பு

**Institute of Computer Studies**
**கணனிக் கல்வி நிறுவனம்**

Main Street, Pandateruppu. — I.C.S — பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

**Certificate Courses**
Micro soft Windows
Micro soft Excel
Micro soft Power Point
Micro soft Word
Micro soft Access

**சிறுவர்களுக்கான**
Micro soft Kids Programme

உங்கள் கணனித் தொழில்நுட்பத்தை வளர்த்துக்கொள்ள எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள். (35994)(38-14-16)

பிரத்தியேக ஆங்கில வகுப்புகள் ஒழுங்கு செய்யப்படும்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 03 - 06 - 1924 | இறப்பு 21 - 08 - 2003

**அமரர் டாக்டர் ஆறுமுகம் முருகேசு** (திதி: 7.9.2004)

செப்பமுடன் வளமாக வாழ்ந்து எம்மை வாழ
வைத்த எம் அன்புத் தெய்வமே!
ஓராண்டு என்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்களை மறக்கவே மாட்டோம்!
'ஐயா' என அழைத்து துயர்பகிர்ந்து அமைதி பெற்றோம்
எமக்கு நல் வழிகாட்டியாயிருந்து விட்டு இன்று
தனித்து எம்மைத் தவிக்கவிட்டு எங்குதான் சென்றீர்?
ஓடோடி வாருமையா பக்கத்தில் நாம் பார்க்க
நினைவழியா நாள்களுடன் நால்லூரான் பாதம் பணிகின்றோம்
உங்களது ஆத்மா சாந்தி அடைந்திடவே.

இன்று (07.09.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மஞ்சவனப்பதி கோயில் வீதி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*
(35979)(33-38-17-18)

மகன் - தனபாலன் (நோர்வே) குடும்பம்
மகள் - மாலினி, பவானி, பேரன்மார்.

## அங்கத்துவம் அவசியம்

யாழ்.மாநகரசபை பொது நூலகத்தில் பத்திரிகைகள், நூல்களைப் பயன்படுத்தச் செல்பவர்கள் அங்கத்தவர்களாக இருந்தால் மட்டுமே பார்வையிடமுடியும்.

யாழ். மாநகரசபைக்கு சொந்தமான பொது நூலகத்தினுள் பத்திரிகை படிக்கச் சென்றவர்களிடம் அங்கத்தவர்களாக இருந்தால் மட்டுமே பத்திரிகை படிக்க முடியும் என கூறப்பட்டதைத தொடர்ந்து பலர் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.

பத்திரிகைகள் படிப்பவர்கள் ஐம்பது ரூபா வருடாந்தம் செலுத்தவேண்டும் எனவும் அந்தப் பணம் செலுத்தியவர்கள் மட்டுமே நூலகத்தைப் பயன்படுத்தலாம் எனவும் கூறப்பட்டு வருகின்றது.

இதேநேரம் யாழ்.பொது நூலகத்தில் நூல்களை இரவலாகப் பெறுவதாக இருந்தால் அனுமதிக்கட்டணமாக முன்னூறு ரூபாவும் வருடாந்தம் சந்தாவாக முன்னூறுரூபாவும் செலுத்த வேண்டும் என்பதும் அண்மைக்கால விதியென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விடயங்களை யாழ்.மாநகர ஆணையாளர் மீள்பரிசீலனை செய்யவேண்டும் என வாசகர்கள் பலரும் எதிர்பார்க்கின்றார்கள் எனவும் கூறப்பட்டது. (9-86)

## மிதிவெடி வெடித்து பணியாளர் காயம்

மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த, சமயம் மிதிவெடி வெடித்துச் சிதறியதில் 'ஹலோ ட்ரெஸ்ட்' நிறுவனத்தில் பணிபுரியும் இளைஞர் ஒருவர் தோள்பட்டையில் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் இருபாலைப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயமே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வேம்பிராய் சந்தி சாவகச்சேரியைச் சேர்ந்த அருணாசலம் கபிலன் (வயது 24) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார். காயமடைந்தவர் யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (6-15)

## சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்கு

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் இன்று முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் சுகாதார விழிப்புணர்வு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில், ஊர்காவற்றுறை, காரைநகர், எழுவைதீவு, அனலைதீவு பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரைப் பங்குபற்றுமாறு பிரதேச சபையின் செயலாளர் கேட்டுள்ளார். (3-16)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



**அமரர் முருகேசு சிறிஸ்கந்தராசா**

அன்னாரின் அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்வுகள் நாளை (08.09.2004) புதன்கிழமை காலை 5.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். ஆகவே, இந்த நிகழ்வுகளில் கலந்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, நண்பகல் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தயவு செய்து இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*தாமரைக்குளத்தடி,*
*துன்னாலை, கரவெட்டி.* (சி-37483)(39-38-17-18)
- குடும்பத்தினர்.

## 10ஆம் வருட நினைவலையில்



**அமரர் விக்கினேஸ்வரி கனகசுந்தரம்**
(குரும்பசிட்டி)
திதி: அட்டமி

தோற்றம் 22-02-1946 | மறைவு 29-08-1994

ஆண்டுகள் பத்தில் ஆறாத்துயருடன்...

*60, மணல்தரை ஒழுங்கை.*
*கந்தர்மடம்.*
(36090)(39-38-17-18)
கணவர்.செ.கனகசுந்தரம்.


**தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர்களே!**

வெளிநாடுகளுக்கான
CONECTING CALL
(மிகக்குறைந்த கட்டணம்)

விவரங்களுக்கு :-
குட்வில் கொமினிக்கேசன்,
T.P.: 0212223332
48, செள். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-37363)(38-17-18)


## நீங்காத நினைவில் ஓராண்டு



தோற்றம் 26 - 11 - 1953 | மறைவு 21 - 09 - 2003

**திருமதி சிவசுப்பிரமணியம் பத்மாதேவி**
திதி: (08.09.2004)

எண்ணத்தில் உன் நினைவு
ஆழமாய்ப் பதிந்துவிட
மண்ணிலத்தில் வாழ்ந்திட்ட
காலம் போதுமென்று
விண்ணகத்தில் வீற்றிருக்கப்
புறப்பட்ட எம் தாயே!
ஆண்டொன்று முடிந்த பின்பும் ~ நாம்
அழுது துடிக்கின்றோம்.
...... அம்மா ......

நாளை (08.09.2004) புதன்கிழமை நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

புதுவளவு,
சுன்னாகம்.
(36134)(39-38-17-18)
-குடும்பத்தினர்.

# தமிழீழ மீட்புநிதி மீளப்பெறுவோர் விவரம் - 2004

யாழ்ப்பாணம், செப். 7

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்போரில் யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவு விவரங்கள் நேற்று வெளியாகியிருந்தன. சாவகச்சேரி, காரைநகர், கரவெட்டி (ஒரு பகுதி) உதவி அரச அதிபர் பிரிவுகளில் தெரிவானோர் விவரம் வருமாறு:-

### சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

சா/ 86 திரு. சுந்தரம் நடராசா
சா/ 146 திரு. சரவணமுத்து சங்கரப்பிள்ளை
சா/ 159 செல்வி. கலாநிதி சுப்பிரமணியம்
சா/ 171 திரு. சரவணமுத்து இராசஇரத்தினம்
சா/ 178 திரு. செல்லப்பா சுப்பிரமணியம்
சா/ 235 திரு. காசிநாதர் சின்னத்தம்பி
சா/ 347 திரு. சோமசுந்தரம் விக்னேஸ்வரன்
சா/ 444 திரு. சங்கரப்பிள்ளை இராசரத்தினம்
சா/ 515 திரு. செல்லப்பா தங்கராசா
சா/ 557 திரு. கந்தையா டானியல் சச்சிதானந்தம்
சா/ 567 திரு. கந்தையா டானியல் சச்சிதானந்தம்
சா/ 583 திருமதி. நாகமுத்து சடாசிவம்
சா/ 682 திரு. முத்தையா பொன்னுத்துரை
சா/ 762 திரு. அருளம்பலம் சிவசிங்கம்
சா/ 764 திருமதி. பூரணம் வயித்தி
சா/ 780 திருமதி. நல்லம்மா கந்தசாமி
சா/ 782 திரு. தம்பிராசா கதிர்காமநாதன்
சா/ 808 திருமதி. நல்லம்மா முருகேசு
சா/ 809 திரு. சின்னத்தம்பி தளையசிங்கம்
சா/ 811 திருமதி. பொன்னம்மா சுப்பையா
சா/ 939 திருமதி. கலாவல்லி உருத்திரன்
சா/ 1126 திரு. நாகமுத்து சின்னத்துரை
சா/ 1130 திரு. நாகமுத்து செல்லத்துரை
சா/ 1145 திரு. வைத்திலிங்கம் சரவணமுத்து
சா/ 1152 திரு. சின்னட்டி கந்தன்
சா/ 1161 திரு. நல்லதம்பி கந்தையா
சா/ 1180 திருமதி. புஸ்பவதி இராசதுரை
சா/ 1204 திருமதி. சிவனேஸ்வரி விசாகரத்தினம்
சா/ 1217 திரு. சரவணமுத்து செல்லப்பா
சா/ 1225 திரு. கந்தையா கனகசபாபதி
சா/ 1244 திரு. சங்கரப்பிள்ளை யோகநாதன்
சா/ 1287 திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
சா/ 1317 திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
சா/ 1386 திரு. சரவணமுத்து கைலாயநாதன்
சா/ 1393 திரு. தில்லையம்பலம் சரவணமுத்து
சா/ 1482 திரு. தம்பு சின்னையா
சா/ 1489 திரு. துரையப்பா சோதிலிங்கம்
சா/ 1516 திரு. வல்லிபுரம் சிவப்பிரகாசம்
சா/ 1519 திரு. வீரகத்தி மாணிக்கவாசகர்
சா/ 1574 திரு. சந்திரசேகரம் நடேசபிள்ளை
சா/ 1582 திரு. ஞானசெல்வம் கிரிஸ்ரி பிரேமகுமார்
சா/ 1678 திருமதி. தங்கம்மா ஆறுமுகம்
சா/ 1684 திருமதி. தங்கரத்தினம் சதாசிவம்
சா/ 1686 செல்வி. நளாயினி குமாரசாமி
சா/ 1705 செல்வி. பிறேமாதேவி முருகேசு
சா/ 1706 திரு. பத்மநாதன் கிரிதரன்
சா/ 1708 திரு. சுப்பையா இளையதம்பி
சா/ 1767 திரு. அம்பலவாணர் சுப்பிரமணியம்
சா/ 1800 திரு. கதிரேசு கந்தசாமி
சா/ 1841 திரு. சின்னத்தம்பி பண்டாரம்
சா/ 2057 திரு. சுப்பையா துரைசிங்கம்
சா/ 2090 திரு. சபாபதிப்பிள்ளை குமரையா
சா/ 2094 திரு. இராசையா ரவீந்திரன்
சா/ 2106 திரு. இளையப்பா சபாநாதன்
சா/ 2142 திரு. சுப்பையா முருகேசு
சா/ 2171 திரு. நல்லதம்பி தர்மராசா
சா/ 2227 திரு. இராசையா முருகையா
சா/ 2237 திரு. வல்லிபுரம் நடராசா
சா/ 2448 திரு. வேலுப்பிள்ளை வதனதீசன்
சா/ 2461 செல்வி. ராஜினி சண்முகநாதன்
சா/ 2551 திருமதி. சியாமளா கந்தசாமி
சா/ 2555 திரு. காசித்தம்பி கதிரேசு
சா/ 2567 திரு. கந்தையா சரவணமுத்து
சா/ 2683 திரு. வைத்திலிங்கம் சின்னத்தம்பி
சா/ 2714 திரு. சின்னக்குட்டி இராசன்
சா/ 2755 திரு. சுந்தரம் சின்னத்தம்பி
சா/ 2779 திருமதி. வள்ளிப்பிள்ளை சின்னத்துரை
சா/ 2798 திரு. சின்னையா கந்தசாமி
சா/ 2820 திரு. சின்னவர் கந்தையா
சா/ 2836 திரு. கணபதி செல்லன்
சா/ 3024 திரு. வல்லிபுரம் நாகலிங்கம்
சா/ 3073 திரு. நல்லதம்பி சுவாமிநாதன்
சா/ 3093 திரு. வேலுப்பிள்ளை துரைராசா
சா/ 3158 திருமதி. இராசநாயகி நவரத்தினம்
சா/ 3185 திருமதி. இராஜேஸ்வரி சிவநாதன்
சா/ 3211 திரு. முதலித்தம்பி செல்லத்துரை
சா/ 3223 திரு. முருகேசு கணபதிப்பிள்ளை
சா/ 3225 திருமதி. நீலாம்பிகை பாலசிங்கம்
சா/ 3261 திரு. சின்னப்பு காங்கேஸ் குலசேகரம்
சா/ 3325 திரு. தம்பு இராமலிங்கம்
சா/ 3327 திரு. கனகர் செல்லையா
சா/ 3329 திரு. கதிரவேலு ஐயாத்துரை
சா/ 3394 திரு. வைத்திலிங்கம் நடராசா
சா/ 3395 திரு. செல்லையா கதிர்காமு
சா/ 3435 திருமதி. நல்லம்மா மயில்வாகனம்
சா/ 3437 திரு. கந்தையா ஆறுமுகம்
சா/ 3512 திரு. விநாசித்தம்பி தம்பிப்பிள்ளை
சா/ 3535 திரு. கந்தையா கணபதிப்பிள்ளை
சா/ 3552 திரு. இளையதம்பி முருகுப்பிள்ளை
சா/ 3614 திரு. வாரித்தம்பி சிதம்பரப்பிள்ளை
சா/ 3659 திரு. சின்னக்குட்டி தம்பு
சா/ 3662 திரு. பெரியதம்பி மயில்வாகனம்
சா/ 3716 திருமதி. மங்கையர்க்கரசி துரைராசா
சா/ 3776 திரு. கணபதிப்பிள்ளை குமாரலிங்கம்
சா/ 4124 திரு. ஆழ்வான் சின்னத்துரை
சா/ 4149 திருமதி. தங்கேஸ்வரி இராமநாதன்
சா/ 4247 திரு. வேலன் செல்வராசா
சா/ 4286 திரு. கந்தர் தம்பிப்பிள்ளை ஞானப்பிரகாசம்
சா/ 4298 திரு. ஆறுமுகம் யோகராசா
சா/ 4313 திரு. சின்னையா கார்த்திகேசு
சா/ 4377 திரு. சின்னையா செல்லத்துரை
சா/ 4456 செல்வி. சிவகௌரி செல்லையா
சா/ 4514 திரு. சரவணமுத்து சுப்பிரமணியம்
சா/ 4632 திருமதி. சின்னப்பிள்ளை வயிரன்
சா/ 4648 திரு. வீரசிங்கம் விக்கினேஸ்வரன்
சா/ 4783 திரு. அம்பலவாணர் நமசிவாயம்
சா/ 4785 திரு. தம்பையா பாலேந்திரன்
சா/ 4812 திரு. பத்தலோமை யோசேப்
சா/ 4832 திரு. பேதுறுப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை
சா/ 5078 திரு. சின்னத்தம்பி இரத்தினசிங்கம்
சா/ 5188 திரு. விஸ்வநாதக்குருக்கள் வேதமணவாளன்
சா/ 5217 திரு. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை
சா/ 5219 திருமதி. பூரணம் கனகசபை
சா/ 5229 திரு. தம்பு ஆறுமுகம்
சா/ 5269 திரு. தாமு கணபதிப்பிள்ளை
சா/ 5381 திரு. காத்திப்பிள்ளை கனகசபை
சா/ 5396 திரு. சண்முகம் சங்கரமுத்து
சா/ 5410 திரு. சண்முகம் சரவணமுத்து
சா/ 5433 திரு. சின்னத்தம்பி இராமலிங்கம்
சா/ 5477 திரு. தியாகராசா சூரியகுமார்
சா/ 5480 திரு. உடையாபிள்ளை திருநாவுக்கரசு
சா/ 5518 செல்வி. சத்தியவதனி கந்தையா
சா/ 5575 திரு. சின்னத்தம்பி முருகேசு
சா/ 5589 திரு. சின்னத்தம்பி இராசேந்திரம்
சா/ 5595 திரு. வீரகத்தி நடராசா
சா/ 5597 திரு. வேலுப்பிள்ளை கனகலிங்கம்
சா/ 5599 திரு. மருதன் கதிரவேலன்
சா/ 5785 திருமதி. சின்னச்சிப்பிள்ளை கிருட்டினர்
சா/ 5944 திரு. கணபதி வேலுப்பிள்ளை
சா/ 5964 திரு. டானியல் ஜேம்ஸ் பொன்னுத்துரை
சா/ 6007 திரு. ஸ்ரீவின் நல்லையா நவரட்ணம்
சா/ 6058 திரு. கதிரன் சிலம்பு
சா/ 6153 திரு. சின்னப்பு தாமோதரம்பிள்ளை
சா/ 6170 திரு. கணபதிப்பிள்ளை உமாமகேஸ்வரன்
சா/ 6185 திரு. கணபதிப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை
சா/ 6247 திரு. குமரசாமி கிருஸ்ணசாமி
சா/ 6289 திரு. சின்னத்தம்பி படைவீரசிங்கம்
சா/ 6375 திருமதி. சுந்தராம்பாள் சோமசுந்தரம்
சா/ 6490 திரு. தருமலிங்கம் பாலசுப்பிரமணியம்
சா/ 6502 திரு. இளையவன் கந்தையா
சா/ 6610 திருமதி. சின்னக்குட்டி கந்தன்
சா/ 6652 திரு. சுப்பன் கணபதி
சா/ 6698 திருமதி. சின்னம்மா நமசிவாயம்
சா/ 6717 திரு. தளையசிங்கம் அகத்தியர்
சா/ 6726 திரு. ஜோசப்நாயகம் ஞானப்பிரகாசம்
சா/ 6746 திரு. வெற்றிவேலு சிவப்பிரகாசம்
சா/ 6785 திரு. அப்பாக்குட்டி தாமோதரம்பிள்ளை
சா/ 6822 திரு. கந்தையா தில்லையம்பலம்
சா/ 6880 திரு. மாதன் தம்பையா
சா/ 6887 திரு. பாலசிங்கம் பாலதாஸ்
சா/ 6938 திருமதி. பரிமளம் கணபதிப்பிள்ளை
சா/ 6945 திரு. முருகேசு சரவணமுத்து
சா/ 6985 திரு. கந்தையா ஆறுமுகம்
சா/ 6999 திரு. செல்லத்துரை ஆனந்தராசா
சா/ 7054 திருமதி. பொன்னம்மா தம்பிராசா
சா/ 7148 திரு. பொன்னன் சிங்கராசா
சா/ 7155 திருமதி. சீதா கருணாகரன்
சா/ 7198 திரு. வேலுப்பிள்ளை இரத்தினம்
சா/ 7263 திருமதி. தங்கம்மா ஐயாத்துரை
சா/ 7273 திரு. கதிராமு கந்தையா
சா/ 7301 திருமதி. அன்னம்மா பாலசுப்பிரமணியம்
சா/ 7346 திரு. காசிநாதர் சுப்பிரமணியம்
சா/ 7369 திரு. வயிரவன் செல்லன்
சா/ 7397 திருமதி. புவனேஸ்வரி சின்னத்தம்பி
சா/ 7465 திரு. நடுவிலான் வைரவன்
சா/ 7467 திரு. முத்தர் தம்பையா
சா/ 7578 திரு. சின்னத்தம்பி சிவராசா
சா/ 7601 திரு. சின்னையா கந்தையா
சா/ 7605 திரு. அப்பாச்சாமிகுருக்கள் விசுவநாதஐயர்
சா/ 7620 திரு. வைத்திலிங்கம் நடராசா
சா/ 7643 திரு. கைலாயபிள்ளை சிவலிங்கராசா
சா/ 7647 செல்வி. யசோதா அப்பாத்துரை
சா/ 7652 திரு. கந்தர் காசிநாதர்
சா/ 7676 திரு. சின்னத்தம்பி தம்பையா
சா/ 7695 திருமதி. பூரணம் சின்னத்துரை
சா/ 7717 திரு. பழனி மகாதேவன்
சா/ 7738 திரு. வீரசிங்கம் இளையதம்பி
சா/ 7765 திரு. சீனிக்குட்டி செல்லப்பா
சா/ 7797 திருமதி. பொன்னம்மா ஐயாத்துரை
சா/ 7803 திரு. சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
சா/ 7882 திரு. தம்பு சிதம்பரப்பிள்ளை
சா/ 7883 திரு. மூத்ததம்பி சண்முகம்
சா/ 7886 திரு. சின்னப்பு சுப்பிரமணியம்
சா/ 7907 செல்வி. பரமேஸ்வரி சுந்தரம்
சா/ 7942 திரு. சுவாமிநாதர் சிவப்பிரகாசம்
சா/ 7953 திரு. வல்லிபுரம் நாகமுத்து
சா/ 7955 திரு. சரவணமுத்து மகாலிங்கசிவம்
சா/ 7964 திரு. இரத்தினம் ஜெகநேசன்
சா/ 7970 திரு. முருகேசு சண்முகநாதன்
சா/ 7979 திரு. நமசிவாயம் வைரமுத்து
சா/ 8016 திருமதி. தங்கமுத்து சிவசம்பு
சா/ 8056 திருமதி. சிவகாமி கந்தையா
சா/ 8097 செல்வி. கமலாட்சி சரவணமுத்து
சா/ 8099 திருமதி. அன்னபூரணம் தியாகராசா
சா/ 8121 திரு. சின்னப்பா சுப்பு
சா/ 8255 திருமதி. சங்கரப்பிள்ளை நல்லதம்பி
சா/ 8261 திருமதி. லில்லி பாக்கியநாதன்
சா/ 8300 திரு. சின்னத்தம்பி தியாகராசா
சா/ 8307 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
சா/ 8325 திரு. கந்தையா ஆசைப்பிள்ளை
சா/ 8326 திரு. விநாயகமூர்த்தி சுப்பிரமணியம்
சா/ 8328 திரு. பண்டாரி ஆழ்வான்
சா/ 8330 திருமதி. பாக்கியம் வைரவன்
சா/ 8348 திரு. இன்னாசிமுத்து ஜெயசூரியா
சா/ 8368 திரு. கதிரித்தம்பி திருஞானம்
சா/ 8380 திரு. இராயப்பு அன்ரன்ஜெயரட்ணம்
சா/ 8391 திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
சா/ 8444 திரு. அப்பையா காசிநாதர்
சா/ 8474 திரு. குமாரவேலு அப்புத்துரை
சா/ 8476 திரு. வெள்ளையன் இளையவன்
சா/ 8481 திரு. காசி சின்னையா
சா/ 8491 திரு. வேலாயுதர் வித்தியானந்தன்
சா/ 8494 திரு. பொன்னையா குலராசசிங்கம்
சா/ 8501 திரு. முத்து வினாசித்தம்பி
சா/ 8503 திரு. தோமஸ் போஜ்கனற்
சா/ 8534 திரு. வைத்திலிங்கம் புவிதாசன்
சா/ 8545 திரு. கந்தையா நமசிவாயம்
சா/ 8649 திரு. சோமசுந்தரம் ஜெயரத்தினம்
சா/ 8668 திரு. தம்பிஐயா வெற்றிவேலு
சா/ 8670 செல்வி. நாகம்மா சிதம்பரன்
சா/ 8681 திரு. முருகர் வேலுப்பிள்ளை
சா/ 8699 திரு. செல்லன் கார்த்திகேசு
சா/ 8722 திரு. கந்தையா ஐயாத்துரை
சா/ 8862 திருமதி. தனபாக்கியம் யோகநாதன்
சா/ 8907 திருமதி. பொன்னி பொன்னன்
சா/ 8999 திருமதி. தங்கம்மா இராசரத்தினம்
சா/ 9038 திரு. சின்னத்துரை அழகராசா
சா/ 9109 திருமதி. சாரதாதேவி தனபாலசிங்கம்
சா/ 9161 திருமதி. நாகரத்தினம் கதிரித்தம்பி
சா/ 9250 திரு. கந்தர் முருகேசு
சா/ 9320 திரு. பொன்னையா யோகநாதன்
சா/ 9391 திரு. சண்முகநாதன் பாலகிருஷ்ணன்
சா/ 9407 திருமதி. தங்கம் குஞ்சன்
சா/ 9504 திருமதி. மாணிக்கம் சுப்பிரமணியம்
சா/ 9512 திரு. ஆறுமுகம் பேரம்பலம்
சா/ 9513 திரு. மயில்வாகனம் மகேந்திரன்
சா/ 9641 திரு. கந்தையா மகாலிங்கம்
சா/ 9643 திருமதி. தெய்வானைப்பிள்ளை இரத்தினம்
சா/ 9719 செல்வி. மேரிமெக்டலீன் அருளப்பு
சா/ 9752 திரு. பொன்னையா மார்க்கண்டு
சா/ 9779 திரு. நாகமுத்து சிவஞானம்
சா/ 9803 திருமதி. மகேஸ்வரி கதிரவேலு
சா/ 9825 திரு. தாமு இளையதம்பி
சா/ 9855 திரு. செல்லப்பா செல்லத்தம்பி
சா/ 9895 திருமதி. புவனேஸ்வரி யோன்
சா/ 10053 திரு. வீரகத்தி சந்திரசேகரம்
சா/ 10067 திரு. ஆறுமுகம் சின்னத்தம்பி
சா/ 10097 திரு. சின்னத்தம்பி பொன்னம்பலம்
சா/ 10184 திரு. பொன்முடி கோபாலன்

### காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு

கா/ 47 திரு. துரைச்சாமி சுப்பிரமணியம்
கா/ 157 திரு. அம்பலவாணர் கணபதிப்பிள்ளை
கா/ 160 திருமதி. நாகேஸ்வரி பொன்னம்பலம்
கா/ 172 திரு. ஆறுமுகம் கந்தையா
கா/ 175 திருமதி. செல்லம்மா திருநாவுக்கரசு
கா/ 201 திருமதி. மகேஸ்வரி இராசதுரை
கா/ 283 திரு. வேலுப்பிள்ளை மாரிமுத்து
கா/ 288 திரு. கனகநாயகம் நல்லதம்பி
கா/ 334 திருமதி. சிவக்கொழுந்து முருகேசப்பிள்ளை
கா/ 402 திரு. பொன்னம்பலம் நடராசா
கா/ 433 திரு. பரமநாதர் சிவராசா
கா/ 472 திரு. வேலு நாகமுத்து
கா/ 490 திரு. விநாசித்தம்பி வேலுப்பிள்ளை
கா/ 502 திரு. கந்தையா ஆறுமுகம்
கா/ 539 திரு. கணபதிப்பிள்ளை குமரகுரு
கா/ 635 திரு. சோமநாதர் அம்பலவாணர்
கா/ 673 திரு. செல்வரத்தினம் செல்வராஜா
கா/ 675 திரு. கனகரத்தினம் இராசரத்தினம்
கா/ 686 திரு. தம்பர் காசிப்பிள்ளை கந்தசாமி
கா/ 735 திருமதி. இராசம்மா விநாசித்தம்பி
கா/ 740 திரு. குழந்தைவேலு இராசலிங்கம்
கா/ 742 திரு. ஐயம்பிள்ளை தம்பிராசா
கா/ 977 திரு. வேலுப்பிள்ளை குமாரசாமி
கா/ 1034 திரு. முருகேசு ஐயம்பிள்ளை
கா/ 1038 திருமதி. பொன்னம்மா வயித்திலிங்கம்
கா/ 1046 திரு. விசுவலிங்கம் வேலாயுதபிள்ளை
கா/ 1070 திரு. சின்னப்பு நவரத்தினம்
கா/ 1182 திரு. இராமநாதர் ஆறுமுகம்
கா/ 1188 திருமதி. சரஸ்வதி கதிரவேலு
கா/ 1276 திரு. அம்பலவாணர் கனகசுந்தரம்

### கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

க/ 8 திரு. சின்னையா வைத்திலிங்கம்
க/ 51 திரு. கந்தர் தாமோரம்பிள்ளை
க/ 68 திரு. வல்லிபுரம் சின்னையா
க/ 84 திரு. வீரகத்தி கதிரித்தம்பி
க/ 102 திரு. சிற்றம்பலம் பொன்னையா
க/ 330 திரு. சிதம்பரம் சின்னத்துரை(வேலாயுதம்)
க/ 338 திருமதி. லீலாவதி தர்மலிங்கம்
க/ 424 திருமதி. பொன்னம்மா கந்தப்பு
க/ 634 திரு. முருகேசு கந்தையா
க/ 646 திரு. சபாபதிப்பிள்ளை இராசசிங்கம்
க/ 669 திரு. விசுவர் பொன்னையா
க/ 686 திரு. வல்லிபுரம் தம்பையா
க/ 689 திரு. முருகேசு தம்பிஐயா
க/ 717 திரு. வயிரமுத்து வடிவேலு
க/ 731 திருமதி. கனகம்மா நாகரத்தினம்
க/ 744 திரு. வேலுப்பிள்ளை இராமலிங்கம்
க/ 861 திரு. சின்னத்தம்பி சிற்றம்பலம் செல்லையா
க/ 868 திருமதி. பத்தினிப்பிள்ளை சிவகுரு
க/ 869 திரு. நாகலிங்கம் செல்லையா
க/ 870 திரு. நாகலிங்கம் செல்லையா
க/ 871 திரு. சிதம்பரப்பிள்ளை கனகசபை
க/ 941 செல்வி. சரோஜினிதேவி சோமசுந்தரமூர்த்தி
க/ 966 திரு. கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்
க/ 1025 திரு. பொன்னுத்துரைஐயர் சிறீரங்கக்குருக்கள்
க/ 1029 திருமதி. இரத்தினம் தங்கவேலு
க/ 1066 திரு. தியாகராசா பாலசுப்பிரமணியம்
க/ 1069 திருமதி. செல்வமணி சின்னத்துரை
க/ 1073 திருமதி. கமலாதேவி இராசதுரை
க/ 1094 திருமதி. கமலாதேவி கந்தசாமி
க/ 1104 திருமதி. கமலாதேவி இராமலிங்கம்
க/ 1140 திருமதி. சிவதேவரத்தினம் தவபாலசிங்கம்
க/ 1154 திரு. வேலுப்பிள்ளை வடிவேலு இரத்தினம்
க/ 1228 திருமதி. மீனாட்சியம்மா தங்கவடிவேல்
க/ 1259 திரு. சிதம்பரப்பிள்ளை கனகசபை

(வளரும்)

# ஏனைய கட்சிகளுடன் பேசும் ஜனாதிபதியின் முடிவு காலத்தை இழுத்தடித்து - ஏமாற்றும் செயல்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,செப்.7

விடுதலைப் புலிகள் பேச்சுக்களை ஆரம்பிக்கத்தயாராக இருக்கும் நிலையில் ஏனைய கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்போவதாக ஜனாதிபதி அறிவித்திருப்பதானது காலத்தை இழுததடிக்கும் - பேய்க்காட்டும் செயல் என்று தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக கட்சிகளுடனும் குழுக்களுடனும் கலந்துரையாடல்களை நடத்தப்போவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளமை குறித்துக் கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

பேச்சுக்களை ஆரம்பிக்கத் தாங்கள் தயார் என விடுதலைப் புலிகள் அறிவித்துவிட்டனர். பேச்சு ஆரம்பிப்பதற்கான தமது நிலைப்பாட்டையும் அவர்கள் தெரிவித்துவிட்டனர்.

இந்நிலையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதைத் தாமதித்து வந்த ஜனாதிபதி இப்போது புதுக்கதை ஒன்றை விட்டுள்ளார். பேச்சு ஆரம்பிப்பது தொடர்பாக ஏனைய கட்சிகளுடனும் குழுக்களுடனும் பேசப்போகின்றேன் என்றும் விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வருவார்கள் என நம்புகின்றேன் - என்றும் இப்போது ஜனாதிபதி கூறுகின்றார்.

தொண்டமானின் ஆதரவு கிடைத்ததை அடுத்து பெரும்பான்மையைப் பெற்றுவிட்டார். ஜனாதிபதி. பேச்சுக்களை ஆரம்பிக்க ஆதரவு தருவோம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி அறிவித்துவிட்டது.

இந்நிலையில் உடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பாகும். அதை விடுத்துப் புதுக்கதைகளை விடுகிறார் அவர். காலத்தை இழுத்தடிக்கும் - எங்களைப் பேய்க்காட்டும் செயலாகவே இது அமைகிறது - என்றார் அவர்.



(எ-3)

## கலையரங்கை புனரமைக்க நிதி

சாவகச்சேரி,செப்.7

மட்டுவில் கமலாசினி வித்தியாலய வளாகத்தில் உள்ள சுப்பையா ஞாபகார்த்த கலையரங்கை மீளப் புனரமைக்க ஒரு லட்சம் ரூபாவை அமரர் சுப்பையாவின் குடும்பத்தினர் பாடசாலை அதிபர் எஸ்.பேரின்பநாதனிடம் வழங்கியுள்ளனர். (எ-31)

## வவுனியாவில் பேரணி

சமாதானத்தின் தேவையை வலியுறுத்தி வவுனியாவில் நேற்றுமுன்தினம் பேரணியும் பிரார்த்தனையும் இடம்பெற்றன.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து திரண்ட நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ இளைஞர்கள் பேரணியில் கலந்துகொண்டனர்.

கடந்த மூன்று நாள்களாக வுனியாவில் தங்கியிருந்த இந்த இளைஞர்கள் சமாதானத்தை வலியுறுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். இந்த ஒன்றுகூடலின் இறுதிநாளான நேற்றுமுன்தினம் அவர்கள் சமாதானப் பேரணியையும பிரார்த்தனையையும் நடத்தினர்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் இருந்தும் இளைஞர் யுவதிகள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர். பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான இளைஞர்களும் இதில் பங்கேற்றனர்.

"இப்போது நாட்டில் சமாதானம் இல்லை. அதற்கான அறிகுறியும் இல்லை. மீண்டும் யுத்தம் வந்துவிடுமோ என்ற அச்சம்தான் தோன்றுகின்றது. கொலைகளும் இடம்பெற்று வருகின்றன எனவேதான், நாம் சமாதானத்திற்காக இவவாறான ஒன்று கூடலையும் பேரணியையும் நடத்துகின்றோம்" - என்று மன்னார் மாவட்ட ஆயர் ராயப்பு யோசப் தெரிவித்தார்.

(க-3)

# அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றின் மூலம் அரசு-புலிகள் ஒப்பந்தத்தை ரத்தாக்கலாமே?

## அதற்கு ஏன் நீதிமன்றம் போகவேண்டும் எனக் கேட்கிறது ஐ.தே.க.

கொழும்பு,செப்.7

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் செய்துகொண்ட புரிந்துணர்வு யுத்த நிறுத்த உடன்படிக்கையை இந்த அரசு ரத்துச் செய்யுமா? அதற்கான தைரியம் அவர்களுக்கு உண்டா?

- இவ்வாறு கேள்வி எழுப்புகின்றது ஐ.தே. கட்சி.

இந்த அரசின் அதி முக்கிய பங்காளிகளாகவும் அமைச்சரவை உறுப்பினர்களாகவும் இருக்கும் ஜே.வி.பியினரும் மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினரும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைச் செல்லுபடியற்றதாக்க வேண்டும் என உயர் நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளனர். இதற்கு நீதிமன்றம் செல்ல வேண்டிய அவசியமே இல்லை.

இந்த அரசை தாமே உருவாக்கியவர்கள் என்கின்றனர் ஜே.வி.பியினர். அவர்கள் அமைச்சரவையிலும் இருக்கின்றனர். இவர்களுடைய கோரிக்கையை அமைச்சரவையில் சமர்பித்து அமைச்சரவையின் தீமானத்தின் மூலமே முனனாள் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான ஒப்பந்தத்தை ரத்து செய்துவிடமுடியுமே?

இத்தைரியம் ஜே.வி.பியினருக்குக் கிடையாது. போஸ்டர் ஒட்டவும் மேடைகளில் பேசவும் மட்டுமே தெரிந்தவர்கள் அவர்கள். எனவே அந்தப் பாணியைத்தான் அவர்கள் பின்பற்றுவார்கள் என்று கிண்டலடிக்கின்றார் ஐ.தே.கட்சியின் களுத்துறை மாவட்ட எம்.பியான டாக்டர் ராஜித சேனரத்ன.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ராஜித சேனாரத்ன இப்படிக் கூறினார்.

ஜே.வி.பியின் விமல் வரவன்ஸ ஒரு வெத்து வேட்டு ஆசாமி. அரசியல் ஞானமோ, பொருளாதார அறிவோ கொஞ்சம்கூட இல்லாதவர். அப்படியே அவரது நண்பரான அமைச்சர் மங்கள சமரவீரவும்.

சில தினங்களின் முன் இவர்கள் இருவரும் ரூபவாஹினியில் தனிக் கச்சேரி ஒன்றை நடததினர்.

உதவி வழங்கும் நாடுகளினால் வழங்கப்படுவதாக உறுதி அளிக்கப்பட்ட 450 மில்லியன டொலர்களும் கிடைத்துவிட்டன என்கிறார் மங்கள சமரவீர.

அதேவேளை, இலங்கை நாணயப் பெறுமது வீழ்ச்சிக்கு மத்திய வங்கியின் உயர் அதிகாரி ஒருவரே காரணம். அவர்தான் ஐ.தே.கவுடன் சேர்ந்து கொண்டு அரசுக்கு எதிராக சூழ்ச்சி செய்கிறார் எனக் குற்றஞ் சுமத்துகின்றார் விமல் வீரவன்ஸ.

இப்பொழுது பொருள்களின் விலை பத்து வீதத்தால் குறைந்துள்ளது என்றும் மங்கள சமரவீர கதைவிட்டார்.

ஆனால், தினசரி வாழ்க்கைச் செலவு அதிகரித்துக்கொண்டே போகிறது. உணவுப் பொருள்களின் விலை விஷம் போல் ஏறுகின்றது. இந்த நிலை தொடர்ந்தால் அமைச்சர்கள் ஆடைகட்டிக்கொண்டு வீதியில் போகமுடியாது என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே.

நாட்டு நடப்புத் தெரியாத விமல் வீரவன்ஸவும் மங்கள சமரவீரவும் ரூபவாஹினியில் தனியாக வந்து நாட்டு மக்களைத் திசை திருப்ப முனைகின்றனர்.

நண்பர் பந்துல குணவர்த்தன இவர்களுடன் தன்னந்தனியாக விவாதம் நடத்தத் தயார். அதற்கு இவர்களுக்குத் தைரியம் உண்டா? என்று கேட்டார் டாக்டர் ராஜித சேனாரத்ன.

(க)

# சபாநாயகருக்கு எதிராக அரசுத்தரப்பு நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## அறுதிப் பெரும்பான்மை கிடைத்ததால் அதிக உஷார்

இதுவரை தொங்கு நாடாளுமன்றத்தில் சிறுபான்மையாக இருந்த அரசாங்கம் இ.தொ.கா. ஆதரவளிக்க முன்வந்ததுடன் பெரும்பான்மையைப் பெற்றுவிட்டது.

பெரும்பான்மையைப் பெற்றவுடன் முதற்கட்டமாக எதிர்க்கட்சியைச் சார்ந்தவரான சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டாரவின் மீதே தனது பலப்பரீட்சையைக் காட்ட அது தயாராகிவருகின்றது எனக் கூறப்படுகின்றது.

நாளை நாடாளுமன்றம் கூடும்போது சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை முன்வைப்பது குறித்து அரசுத்தரப்பு தீவிரமாகப் பரிசீலித்து வருவதாக அரசதரப்பு வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

13ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகர் தெரிவின்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து லொக்குபண்டாரவுக்கு வாக்களித்து அவரின் வெற்றியை உறுதிப்படுத்தியது.

ஆனால், அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கப்போவதாகத் தற்போது அறிவித்துள்ள இ.தொ.கா., சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படும் பட்சத்தில் எந்தப் பக்கம் நிற்கும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இவ்விடயம் தொடர்பாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ராஜித சேனாரத்னவிடம் கேட்டோம்.

"இவ்விடயத்திற்கு எதிர்க்கட்சிகள் முகம் கொடுக்கத் தயாராகவே இருக்கின்றன. ஆறுமுகன் தொண்டமான் தக்க சமயத்தில் நல்ல முடிவை எடுப்பார். இ.தொ.கா., அரசுக்கு ஆதரவைத்தான் வழங்கி உள்ளது. அரசுடன் இணைந்துவிடவில்லை. எனவே, கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. - என்றார் ராஜித சேனாரத்ன.

(க)

# கல்வியியற் கல்லூரி அனுமதி; விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், செப்.7

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2005ஆம் கல்வியாண்டில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கல்வியமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

ஆரம்பக்கல்வி, விஞ்ஞானம், கணிதம், உடற்கல்வி, உணவுத் தொழில்நுட்பம், ஆங்கிலம், சமயம், விவசாயம், தொழில்நுட்பக்கற்கை, நூலக விஞ்ஞானம், விசேட கல்வி, சித்திரம், நடனம், சங்கீதம், நாடக அரங்கியல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடநெறிகளுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 2005-01-01இல் 25 வயதிற்கு மேற்படாதவராகவும் 2003இல் ஜி.சீ.ஈ. உயர்தரப பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில சித்தி பெற்றிருப்பதோடு ஜி.சீ.ஈ. (சா.த) 6பாடங்களில் சித்திபெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பம் தொடர்பான மேலதிக விவரங்கள் 2004.09.03ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளனு, (எ-152)

# தேசியத்தின் நிலைப்பாட்டை விளக்க கூட்டமைப்பு எம்.பிக்கள் கிழக்கே செல்வர்

கொழும்பு,செப்.7

தமிழ்த் தேசியத்தின் நியாயப்பாட்டையும் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் கிழக்கு மக்களுக்கு விளக்கமளிக்கும் பணியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைபு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த வார இறுதியில் ஆரம்பிக்கவுள்ளனர்.

மாவை சேனாதிராசா எம்.பி. தலைமையில் செல்லும் கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

எதிர்வரும் 11ஆம் திகதி திருகோணமலையில் இந்தப் பணி ஆரம்பமாகின்றது. தொடர்ந்து மூன்று தினங்கள் அங்கு தங்கியிருக்கும் கூட்டமைப்பு எம்.பிக்கள் கூட்டங்களை நடத்துவதுடன் கிராமம் கிராமாகச் சென்று மக்களுடன் நேரடியாகக் கலந்துரையாடுவர்.

மக்களின் வாழ்க்கை நிலை தொடர்பாகவும் மக்களின் அனறாடப் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்கள் கேட்டறிவர்.

திருகோணமலையில் பணிகளை முடித்துக் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அடுத்தகட்டமாக மட்டக்களப்புக்குச் செல்லவுள்ளனர். (எ-3)

# மீண்டும் வேலைநிறுத்தத்துக்கு ரயில்வே ஊழியர்கள் முஸ்தீபு!

ரயில்வே அதிகாரசபைக்கு உட்பட்ட 38 தொழிற்சங்கங்கள் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

அரசு தமக்கு வழங்குவதாக உறுதியளித்த 70 வீத சம்பள உயர்வை வழங்காமை, கடந்த அரசுக் காலத்தில் உருவாக்கபட்ட ரயில்வே அதிகாரசபையைக் கலைத்துவிட்டு அதனைத் திணைக்களமாக மீண்டும் மாற்றி அமைக்காமல காலத்தை இழுத்தடிக்கின்றமை போன்ற விடயங்களைச் சுட்டிக்காட்டி, ஐந்துகோரிக்கைகளை முன்வைத்து, வேலை நிறுத்தத்தில் குதிக்க இத்தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி, பிரதமர் போக்குவரத்து அமைச்சர் ஆகியோருக்குத் தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதங்கள் அனுப்பப்பட்டும் தமது கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காமல் காலம் இழுத்தடிக்கப்படுவதை ரயில்வே ஊழியர்களின் கூட்டுத் தொழிற்சங்கச் சம்மேளனம் கண்டித்துள்ளது.

அடுத்தவாரத்துக்குள் தமது கோரிக்கைகளுக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்திலும் வேலை நிறுத்தத்திலும் ஈடுபடப்போவதாகவும் அது எச்சரித்துள்ளது.

ஒருவாரகாலம் அரசுக்கு அவகாசம் வழங்கியுள்ள தொழிற்சங்கங்கள் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி ஆராய நாளை மறுதினம் கூடவுள்ளன.

(க)

# மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நவோதயா பாடசாலை வாரம்

வலிகாமம் தெற்கு,செப்.7

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் இம்மாதம் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை "நவோதயா பாடசாலை வாரம்" கொண்டாடப்பட இருப்பதாக அதிபர் மு.அருணாசலம் தெரிவித்துள்ளார்.

'நவோதயா' துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும் இணைக்கப்பட்டுள்ளது.

இதனை வரவேற்றுக் கொண்டாடும் நோககுடன் இந்த வாரத்தை நவோதயா பாடசாலை வாரமாகக் கொண்டாடத் தீர்மானித்திருப்பதாக அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்வாரத்தில் சமூக பங்கேற்பு தினம், மாணவர் தலைவர் தினம், சமயம் சார்ந்த விழுமியங்கள் என பல நிகழ்வுகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பாடசாலைகள், தேசத்தின் முன்னேற்றத்துக்கு முழுமையான பங்களிப்புச் செய்யக் கூடிய மாணவர் சமுதாயம் ஒன்றினை உருவாக்கும் நோக்கத்துடன் நவோதயா துரித அபிவிருத் தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(ஜ-152)

# தென்னந் தோட்டங்களில் ஊடுபயிர்ச்செய்கை...

தென்னைச் செய்கையாளர்கள் தென்னை மீள்நடுகை செய்யும் காலம் இது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலே இன்று அதிக அளவிலான தென்னை மரங்கள் அழிக்கப்பட்டும், பட்டுப்போயும் காணப்படுகின்றன. அவற்றைப் புனரமைப்புச் செய்யும் நோக்குடன் தென்னைமர மீள்நடுகைகள் இடம் பெற்றுவருகின்றன.

தென்னந்தோட்டங்களில் அழிந்துபோகும் தென்னை மரங்களுக்காகப் புதிய மரங்களை மீள்நடுகை செய்யும் அதேவேளையில், தென்னையின் கீழ் நடுகையை மேற்கொள்வதன் மூலம், வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

முதிர்ந்த, பழைய தென்னைமரங்களை அழித்துப் புதிய தென்னைகளை வளர்ப்பதன்மூலம் கூடிய பயனைப் பெற்றுக் கொள்ளமுடியும். முதிர்ந்த மரங்களை நீண்ட காலத்துக்குத் தறியாமல்விட்டால் இளம் தென்னை மரங்களின் வளர்ச்சிக்கு அவை தடையாக அமையலாம். எனவே, முதிர்ந்த தென்னை மரங்கள் அழிக்கப்படவேண்டியவையே.

இவ்வாறு முதிர்ந்த மரங்களை அழிக்கும்போது அதனால் ஏற்படக்கூடிய நட்டத்தைத் தோட்டக்காரர்களுக்கேற்படும் வருமான இழப்பை ஈடுசெய்யத்தக்க வகையில்



மேற்கொள்ளப்படக் கூடிய ஒரு செயலாக ஊடுபயிற் செய்கை அமைகின்றது.

### ஊடு பயிர்ச்செய்கை

தென்னந்தோட்டங்களில் கீழ் நடுகை - ஊடுபயிர்ச் செய்கைப் பயிர்களாக முதல் ஐந்து வருட காலத்திற்கு மரக்கறிப் பயிர்களைப் பயிரிடலாம் வருடா வருடம் (ANNUAL) அல்லது குறிப்பிட்ட காலத்துக்கு மட் டும் (SEMI PERENNIAL) பயிரிடக்கூடிய பயிர்களை நடுகை செய்து பயன்பெறலாம்.

ஊடு பயிர்ச்செய்கையானது தேவையான அளவு வருமானத்தைத் தருவதுடன், முதிர்ந்த மரங்களைத் தறிக்கும் போது ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்யக்கூடிய வகையிலும்

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

அமைகிறது.

வருடாவருடம் வருமானம் பெறக்கூடிய வகையிலான சிறுதானியங்கள், மரக்கறி வகைகள், மிளகாய், இராசவள்ளி, இஞ்சி, மஞ்சள் போன்ற பயிர்களை ஊடுபயிர்களாக மேற்கொள்ளலாம்.

குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் செய்கை பண்ணக் கூடிய வாழை, பப்பாசி, அன்னாசி போன்ற பயிர்களை ஊடு பயிர்களாகச் செய்கை பண்ணலாம்.

வெப்ப நிலைப் பிரதேசங்களில் மழைக்காலம் முடிவடைந்த பின்னர் சிறுதானியப் பயிர்களையும் அவரை இனப் பயிர்களையும் நடுகை பண்ணலாம்.

மேலும் பொருத்தமான வருடாவருடம் குறிப்பிட்ட காலம் வரை அல்லது எல்லாக் காலத்திலும் செய்கை பண்ணக்கூடிய பயிர்களைத் தென்னைச் செய்கையாளர்கள் அவ்வப் பகுதிகளில் நிலவும் சுவாத்தியம், கால நிலைகளைப் பொறுத்துத் தெரிவுசெய்து கொள்ளவேண்டும்.

தென்னந்தோட்டங்களில் செய்கை பண்ணப்படும் தென்னை மரங்களின் வேர்கள் அங்கு காணப்படும் மண்ணில் 25 சதவீதத்தினை மட்டுமே பயன்படுத்துகின்றன. மிகுதி 75 சதவீதமான மண் எந்தப் பயன்பாடுகளுமின்றி வெறுமனே விடப்படுகின்றது.

ஊடு பயிர்ச்செய்கையைத் தவிர இத்தோட்டங்களில் கால்நடை வளர்ப்பை மேற்கொள்வதன் மூலமும் வருமானத்தைப் பெறமுடியும்.

தென்னந்தோட்டங்களில் மேற்கொள்ளப்படும் ஊடு பயிர்ச்செய்கை (INTER CROPPING), கலப்புப் பயிர்ச்செய்கை (MULTI - CROPPING) மற்றும் கால்நடை வளர்ப்புப் போன்றவற்றினால் தென்னந்தோட்டத்தில் இருந்து கிடைக்கும் வருமானத்துடன் மேலதிக வருமானத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

தென்னங்கன்றுகளை நடும்போது அகலமான செவ்வக முறையில் மேற்கொண்டால் அவற்றுக்கிடையில் ஊடு பயிர்ச் செய்கை பண்ணுவது சுலபமாக இருக்கும்

### நீர்ப்பாசனம்

தென்னை மரங்களுக்குத் தொடர்ச்சியாகத் தண்ணீர் தேவை. மழை காலமாக இருந்தால் தென்னை மரங்களுக்கும் அவற்றின் கீழ் செய்கை பண்ணப்படும் ஊடு பயிர்களுக்கும் போதிய அளவு ஈரலிப்புக் கிடைக்கும். ஈரலிப்புத் தொடர்ச்சியாகக் கிடைக்காவிட்டால் தென்னையில் தேங்காயின் உற்பத்தியும் குறைவடையும். பொதுவாக ஊடு பயிர்ச்செய்கையானது ஈரவலயங்களிலும், இடைநிலை வலயங்களிலும் மேற்கொள்வதற்கு வசதியும் வாய்ப்பும் இருப்பினும் கூட, வரண்ட வலயங்களிலும் நீர்ப்பாசனம் செய்யக்கூடிய வசதிகள் இருந்தால் இதனை மேற்கொள்ளலாம்.

### கவனிக்க வேண்டியவை

ஊடு பயிர்களுக்குச் சூரிய ஒளி அவசியமானதாகும். எனவே, போதுமான அளவு சூரியஒளி பயிர்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும். ஊடு பயிர்களுக்குப் பொதுவாக முதல் ஐந்து வருடங்களுக்கு போதியளவு சூரிய ஒளி கிடைப்பதாக இருக்கவேண்டும்.

தென்னை மரங்களுக்கும் ஊடு பயிர்களுக்குமிடையில் ஈரலிப்புத் தன்மையில் போட்டி ஏற்படாமல் இருப்பதையும உறுதி செய்துகொள்ளவேண்டும்.

மண்ணின் வளம் பாதிக்கப்படாமல் இருக்கவும், பயிர்கள் சிறப்பாக வளரவும் மண்ணின் வகைகளுக்குப் பொருத்தமான பயிர்களைத் தெரிவு செய்து கொள்ளவேண்டும்.

எல்லாப் பயிர்களுக்கும் தேவையான போதிய அளவு பசளை கிடைப்பதையும் உறுதி செய்துகொள்ளவேண்டும். ஊடு பயிர்களுக்குத் தேவையான பசளை இடப்படாது விடின் அவை தென்னை மரங்களுக்கு இடப்பட்ட பசளைகளை உறிஞ்சி எடுப்பதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும்.

ஊடு பயிர்களைப் பொருத்தமாகத் தெரிவு செய்யாமையால்தான் அநேகமான பயிர்கள் நன்றாக வளர்ந்து பயன் தராமல் போகின்றன.

### நன்மைகள்

கீழ்நடுகை அமைப்பில் ஊடு பயிர்ச்செய்கையை மேற்கொள்வதன்மூலம் பல நன்மைகளைப் பெறமுடியும்.

★ சேதனக் கழிவுகளை மண்ணில் மீதமாக விடுவதனால் மண்ணின் வளம் அதிகரிக்கிறது.
★ மண்ணில் படியும் வெப்பநிலை குறைக்கப்படுகிறது.
★ மண் அரிப்புகள் தடுக்கப்படுகின்றன.
★ களைகள் வளர்வது தடுக்கப்படுகிறது.
★ மேலதிக வருமானத்தைப் பெறக்கூடியதாகவுள்ளது.
★ மக்களின் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்படுகின்றன.
★ தேங்காயின் விலைத் தளம்பலால் ஏற்படும் கஷ்டங்களை ஈடுசெய்யக்கூடியதான வருமானத்தை அதிகரிக்கமுடிகிறது.

### ஊடுபயிர் தெரிவு

மண்ணின் வகை, மண்ணின் ஆழம், மழை வீழ்ச்சி என்பவற்றை அடிப்படையாக வைத்து தென்னந்தோட்டங்களிலே கீழ்நடுகை செய்யப்படும் பல்வேறு பயிரினங்கள் தெரிவுசெய்யப்படுகின்றன.

தென்னந்தோட்டங்களில் கன்றுகள் நட்ட பின்னர் முதல் ஐந்து வருடங்களில் வருடா வருடம் செய்கை பண்ணக் கூடியதாக அவரை இனப்பயிர்கள் மற்றும் இராசவள்ளி, மரவள்ளி, வத்தாளை, இஞ்சி, மஞ்சள், மிளகாய் ஏனைய மரக்கறி வகைகள் என்பனவும் குறுகியகாலப் பயிர்களான அன்னாசி, பப்பாசி, கொடித்தோடை, வாழை, போன்ற பயிர்களும் அமையலாம்.

**விஸ்வபரி**

அதேபோல 25-45 வருடங்கள் வரையான காலங்களில் இராசவள்ளி, இஞ்சி, மஞ்சள் போன்றவற்றைப் பயிரிடலாம்.

ஊடுபயிர்களைத் தெரிவு செய்த பின்னர் ஒழுங்கான நடுகைமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

ஊடுபயிர்களைச் சரியான இடைவெளிகளில் வரிசையாகவும், தென்னை மரத்தின் அடியில் இருந்து ஆறு அடி தூரத்துக்கு அப்பாலும் நடவேண்டும். கன்றுகளுக்குப் போதிய சூரிய ஒளியும் வெயில் தாக்காத முறையில் நிழல் பாதுகாப்பும் செய்யப்படவேண்டும். போதியளவு பசளைகளை இட்டுப் பீடைகள் பூச்சித் தாக்கங்களில் இருந்து பயிர்களைப் பாதுகாக்க வேண்டும்.

அன்னாசி, எலுமிச்சை, மரவள்ளி, இஞ்சி, வத்தாளை, நிலக்கடலை, பயறு, கௌபி போன்ற பயிர் வகைகளைப் பயிரிட்டால் போதிய வருமானத்தைப் பெறலாம்.

ஊடுபயிர்ச் செய்கைமூலம் பயனற்றுக் கிடக்கும் 75 சதவீதமான மண்ணைப் பயனுள்ளதாக்கி நல்ல வருமானத்தைத் தேடிக்கொள்ள பல தென்னந்தோட்டச் செய்கையாளர்கள் தவறுவது வேதனைக்குரிய ஒன்றாகும். ★

## கல்விச்சாலைக் காட்சிகள்



வரணி தென்னிந்தியத் திருச்சபைப் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 22ஆவது வருடாந்த விளையாட்டு விழாவில் சிறார்கள் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.
(படம் : வரணிச் செய்தியாளர்)



கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கவின்கலை மன்றத்தின் சித்திரக் கண்காட்சியினை கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் காணப்படுகின்றார்.
(படம்:வலி. கிழக்குச் செய்தியாளர்)



புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கிணங்க எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தில் புதிய வகுப்பறைக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றபோது. தீவகக் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.சிவபாதம் மங்கள விளக்கேற்றுவதையும் படத்தில் காணலாம். எழுவைதீவு ஆயுளவேத மருத்துவ உத்தியோகத்தர் க.ரவீந்திரன், தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுவைதீவு, அனலைதீவு அரசியல்துறைப் பொறுபபாளர் சுடர், தீவகக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் வி.தனிநாயகம், பொறுப்பாசிரியர் எஸ்.முகுந்தன் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.
(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)



கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய முன்பள்ளி விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.தெற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் மாணவர் ஒருவருககுப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். முன்பள்ள நிலையத்தின் தலைவர் அ.தற்பரானந்தன், சிறப்பு விருந்தினர் ஆ.சி.கணேசவேல் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.
(படம்: வலி.தெற்குச் செய்தியாளர்)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால்

**யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான பிறிமா கிறீன் மா**

**கேள்வி கோரல்** மே, ஜூன் 2004

1) யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு 1,500 மெற்றிக் தொன் பிறிமா கிறீன் மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 2004 மே | 2004 ஜூன் |
| 1500 MT | 1500 MT |

கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2004.09.07 ஆம் திகதி தொடக்கம் 2004.09.21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2) கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள்முறி - Bid Bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01 Mt.) ரூபா நானூறுப் படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).

3) பூரணப்படுத்திய இருகேள்விப் படிவத்தினை *தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் ( அரச அதிபர், யாழ்ப்பாணம்)* என முகவரியிட்டப்பட்ட நீளத் தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 2004.09.22 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்பாகச் சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப. 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

4) நீளத் தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் *"பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி"* என எழுதப்படவேண்டும்.

5) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கக்கூடிய வைப்பாக (செயற்படுத்தல் முறிக்காக - Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விவரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

6) கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் மே மாதத்திற்கு 30 நாள்களுக்குள்ளும் ஜூன் மாதத்திற்கு 60 நாள்களுக்குள்ளும் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்,**
**தலைவர்/அரச அதிபர்**
**மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(சி37493)(34-19-26-11) **06.09.2004.**


COMPUTER SALES



நெல்லியடி உ.
Warranty 3 Years warranty
புத்தம் புதிய அதிநவீன கணனிகள்
AMD/Intel P4 Computers
39,000 /= onwards
மேலும் அனைத்து கணனி உதிரிப்பாகங்கள்
MICRO PC SYSTEMS
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893



**Sept. 11ஆம் திகதி புதிய வகுப்பு ஆரம்பம்**

**நேரடி அறிவிப்பாளர் பயிற்சி**

**M.M.I.C**
இல.15,சிறாம்பியடி ஒழுங்கை,
(மணியம் பில்டிங்)
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(C/37487)

இதுவரை பதிவு செய்யாதவர்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்
(தகைமை G.C.E. O/L சித்தியுடன் தமிழ் பாடத்தில் சிறப்புச் சித்தி)
Call : 0777 316258.



**விற்பனையாளர்கள் தேவை**

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர்களும் பழக விரும்புபவர்களும் உடனே தேவை.
*சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.*
தொடர்பு:
**விள.இல. 2368, மே/பா, உதயன்.**
(சி-37492)


## சமய சந்நிதிகளில

வடமராட்சி,செப்.7

கற்கோவளம் ஸ்ரீ கும்பிமுருகன் கோயில் வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

இரதோற்சவம் எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமையும் தீர்த்தோற்சவம் மறுநாள் 16ஆம் திகதி வியாழக்கிழமையும் இடம்பெறும்.

(ஐ-173)

## வாக்காளர் இடாப்பில் பெயர் பதிய அறிவுறுத்து

வடமராட்சி,செப்.7

வாக்காளராகப் பதிவு செய்வதற்கு இன்னமும் சில நாள்களே இருப்பதால் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தம்மை வாக்காளராக தத்தம் பகுதிக் கிராம சேவையாளர்களிடம் தவறாது பதிந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை கேட்டுள்ளது.

கடந்த காலங்களில் வாக்காளராகப் பதிவுசெய்ய தகுதி பெற்றிருந்த பெருந்தொகையானோர் தம்மை வாக்காளராகப் பதிவு செய்யத் தவறிவிட்டனர். எதிர்கால அரசியல்நிலைவரத்தைக் கருத்தில் கொண்டு 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் தம்மை வாக்காளராக அவசியம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ-173)

## உதவி அரச அதிபர் கடமையைப் பொறுப்பேற்றார்

வடமராட்சி,செப்.7

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு புதிய உதவி அரசாங்க அதிபராக நியமனம் பெற்ற ஆர்.ரி.ஜெயசீலன் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளார்.

முன்னர் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றிய வி.பி.வேலாயுதபிள்ளை இளைப்பாறிச் சென்றுள்ளார். (ஐ-173-182)

# வேலணை பிரதேச சபை அறிவித்தல்

## சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத் திருவிழா - 2004

01. சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலய வருடாந்த திருவிழா 2004.09.09 முதல் 2004.09.18 ஆம் திகதிவரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இப்பகுதியில் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபாரம் செய்யவிரும்புவோர், வேலணை பிரதேச சபையின் அனுமதியினைப் பெற்றுப் பொதுச் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் வியாபாரம் செய்தல் வேண்டும்.
02. விற்பனைக்குரிய பண்டங்கள் எங்கு உற்பத்தி செய்யப்படுகிறதோ அவ்விடம் அமைந்துள்ள உள்ளூராட்சி சபையினால் வழங்கப்பட்ட 2004 ஆம் ஆண்டுக்குரிய உற்பத்தி/வியாபார உரிமப்பத்திரம் கொண்டு வருதல் வேண்டும்.
03. தற்காலிக உணவுச்சாலை அமைப்போர் அடிப்படை நிபந்தனைகளைத் திருப்தி செய்யக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
04. வழமைபோல் பிரதேச சபையினால் வெற்றுக்காணிகள் வாகனத் தரிப்பிடங்களாக பாவிக்கப்பட்டு வரி அறவீடு செய்யப்படும். வாகன உரிமையாளர்கள் உரிய கட்டணத்தைச் செலுத்தி ஒத்துழைக்கும் வண்ணம் வேண்டப்படுகிறீர்கள்.
05. விழாக்காலத்தில் ஆலய சூழலைச் சுத்தமாக வைத்திருக்கவும் மதுபான, மாமிச பாவனையைத் தவிர்க்கவும் என வேண்டப்படுகிறீர்கள்.

*உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி.*

**திரு.செ.சண்முகராஜா,**
செயலாளர்,
வேலணை பிரதேச சபை, வேலணை.

(சி-37490)(39-19-26)


**யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன்**

**ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு**

விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள், அரச, தனியார் அலுவலர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், வீட்டுப்பெண்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் அனைவருக்கும்

**முற்றிலும் புதிய முறையில்**
**முழுமையாகக் கதைப்பதற்கான வகுப்புகள்**

இன்னும் 5 நாள்கள் மட்டுமே!
**11.09.2004 வரை சலுகைக் கட்டணத்துடன்**
ஆங்கில நேரடி வகுப்பு ரூபா 3000/=
சிங்கள நேரடி வகுப்பு ரூபா 2000/=

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு, மானிப்பாய், சாவகச்சேரி, ஆவரங்கால், பருத்தித்துறை உட்பட யாழ்ப்பாணத்தில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் வகுப்புகள் இடம்பெறும்.

நாடு தழுவிய பொதுப் பரீட்சை **October 30, 2004**

**மேலதிக விவரங்கள்:**
யாழ்.கொழும்பு தலைமையகத்தில் அல்லது வகுப்புக்கள் நடைபெறும் இடங்களில்!

**SAAMSTECH**
**Psalm Institute of Engineering and Technology**
Colombo Head Office: 22 -1/4, Galle Road, Dehiwala. 0115540200
Jaffna Head Office: 841, Hospital Road, Jaffna. T.P.No. 077 3068968.


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

*அன்புடையீர்,*

நிகழும் தாரண வருடம் ஆவணி மாதம் 24ஆம் திகதி (09~09~2004) வியாழக்கிழமை இரவு 7.22 மணி தொடக்கம் 8.34 மணி வரையுள்ள மீன இலக்கின சுபவேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**மயூரன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**விஜிதா**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் நல்வரவை விரும்பும்:*

திரு.வை.பத்மநாதன் (நாதஸ்வர வித்துவான்), திருமதி ப.இராஜேஸ்வரி, உடுப்பிட்டி.

திரு.ஆ.தர்மலிங்கம் (தவில் வித்துவான்), திருமதி த.பத்மா, முருகமூர்த்தி வீதி, நெல்லியடி.

(இரு வீட்டார் அழைப்பு)

(சி-37491) தயவுசெய்து தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும். (26-19)

# மந்திகை வைத்தியசாலைக்கு மீண்டும் மகப்பேற்று நிபுணர்

நீண்டகாலமாக மகப்பேற்று வைத்திய நிபுணர் இல்லாத நிலையில் இயங்கிவரும் மந்திகை மாவட்ட வைத்தியசாலையில் வெகுவிரைவில் மகப்பேற்று நிபுணர் ஒருவர் பணியாற்றவுள்ளார்.

சுமார் 17 வருடங்கள் மந்திகை மாவட்ட வைத்தியசாலையில் மகப்பேற்று நிபுணராகப் பணியாற்றிவந்த டாக்டர் குழந்தைவேல் கடந்த நான்கு வருடங்களுக்கு முன் புத்தளம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இவர் மாற்றலாகிச் சென்றதை அடுத்து மகப்பேற்று நிபுணருக்கான வெற்றிடம் நிரப்பப்படாத நிலையிலே இதுவரைகாலமும் இருந்து வருகிறது.

இதனால் வடமராட்சி வாழ் மக்கள் மகப்பேறு தொடர்பான சிகிச் சையில் பல அவலங்களைச் சந்திக்கும் நிலை உருவாகியிருந்தது.

புத்தளம் வைத்தியசாலையில் பணிபுரிந்துவந்த மகப்பேற்று நிபுணர் டாக்டர் குழந்தைவேல் அப்பணியிலிருந்து ஓய்வுபெற் றுக்கொள்வதுடன், ஒப்பந்த அடிப்படையில் மீள்நியமனம் பெற்று மந்திகை மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றவுள்ளர்.

இவர் விரைவில் தனது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-15)

# பொது மண்டபத்திறப்பு விழா

யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் 'நிக்கொட்' கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பொது மண்டபம் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை துன்னாலை ஆட்டுப்பட்டிக் கிராமத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் நிக்கொட் நிறுவனத்தின் யாழ். மாவட்ட உதவித்திட்டப் பணிப்பாளர் கே. நவரட்ணராஜா யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

அகவணக்கத்தைத் தொடர்ந்து மண்டபம் திறந்துவைப்பு சிறப்புரைகள், விருந்தினர் உரைகள் மற்றும் மண்டபத்தை பொது அமைப்பிடம் ஒப்படைக்கும் நிகழ்வு என்பன இடம்பெறும். (10-6)

# வாழ்வகத்தில் அனுமதி

உடுவில் கிழக்கு வாழ்வகம் விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லம் பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கவுள்ளது. பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளைச் சேர்க்க விரும்புவோர் உடுவில் கிழக்கு சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள மேற்படி வாழ்வகத்தில் உரிய விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைத்து அப்பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (10-152)


## நல்லைக் கந்தன்ஆலய மஹோற்சவத்தில்

## இன்று 18 ஆம் திருவிழா



ஞானவடி வேலவனே சரணம் சரணம்
வள்ளி தேவ சேனாதிபதியே வா! வா!
பகல் திருவிழா காலை 10.30 மணிக்கு
இரவுத் திருவிழா மாலை 5.30 மணிக்கு

முத்துப்போன்ற சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்
மிதப்புப் பற்களுக்கு "கிளிப்" போட்டுக் கொள்ளவும்
அழகிய பிறேம்களை மலிவாகப் பெற்றுக்கொள்ளவும்





இன்றே நாடுங்கள்

துர்ஷா

பல் மூக்குக் கண்ணாடியகம்

544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
T.P. : 021 222 3461, 0777 150032.

(c/37484)




## சேவற் கொடியோன் திருவடியைச் சிந்திப்பீர்

### வெண்பா

பாவம்போம் பொல்லாப் பழிபோகும் பாருலகிற்
சேவற் கொடியோன் திருவடியைச் சாமளவுஞ்
சிந்திப்பீர் செல்வஞ் செறியிலங்கை நன்னாட்டீர்
வந்திப்பீ ரென்றும் மகிழ்ந்து

காமமுத லாறுங் கடிந்து கடிகமழுஞ்
சேமந் தருந்திவ்ய பாதத்தை ஆமளவும்
போற்றிப் புகழுவீர் பொன்னிலங்கை நன்னாட்டீர்
மாற்றிப் பிறக்க மருந்து

புன்னுனி மேல் நீர்போல் நிலையாத பொய்யுடலை
என்னினிநீர் எண்ணி வருந்துவீர் - மண்ணுலகில்
ஆறுமுகன் பாதத்தை யன்பா யிலங்கையீர்
கூறு மதுவே குணம்

இளமை நிலையா தெனவறிந்து வேலன்
பழமை தருமடியைப் பற்றும் - எழுமையும்
இன்பந்தருமே யிலங்கைமா நன்னாட்டீர்
அன்பிற் பணிவீ ரறிந்து

அறிவுக் கறிவாகி யப்பாற்கப் பாலாய்ச்
செறியும் முருகன் திருத்தாள் - நெறியுடனே
பற்றிப் பணிந்திடுவீர் பல்கா லிலங்கையீர்
வெற்றிதரு மென்றும் விளைவு

விளையுமிச்சை யெல்லாம் வெறுத்தேயெஞ் ஞான்றும்
இளையோன் திருப்பாத மேத்த மழைபோற்
கருணை வருமே கருதிலங்கை நாட்டீர்
கருண மிகுகண்டீர் தான்

- யோகர்சுவாமிகள்.

# உயர்தர மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி

வலிகாமம் தெற்கு,செப்.7

கல்வி கலாசார மனிதவள அமைச்சு மற்றும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் ஆகியவற்றுடன் இலங்கை சட்டத்தரணிகள் சங்க சட்ட உதவி மன்றம் இணைந்து கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர மாணவர்களிடையே தேசிய ரீதியிலான கட்டுரைப் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது.

"மனித விழுமியங்களை மேம்படுத்துவதன் ஊடாக, முழு நிறைவான மனிதர்களை உருவாக்குவோம்" என்ற தலைப்பில் ஆக்கப் பட வேண்டிய இக்கட்டுரைப்போட்டி தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் தனித் தனியாக நடைபெறவுள்ளன.

மாணவர்கள் தங்கள் ஆக்கங்களை இம் மாதம் 30ஆம் திகதிக்குமுன் தத்தம் பாடசாலை அதிபர்கள் ஊடாக உறுதிப்படுத்தி, தலைவர், சட்டத்தரணிகள் சங்க சட்ட உதவி மன்றம், 153, மிருந்து மாவத்தை, கொழும்பு - 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-152)

# பயனாளிகள் கௌரவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,செப்.7

நல்லூர் பல நோ.கூ.சங்கத்தினூடாக ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் சுழற்சி முறைக்கடனைப் பெற்று தவணை தவறாது பணத்தை மீளச் செலுத்தியவர்களும் சிறந்த தொழில் முயற் சியில் ஈடுபட்டவர்களுக்குமான 10 பயனாளி கள் அண்மையில் பரிசு வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர்.

இந்த நிகழ்வு நல்லூர் பல நோ.கூ.சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் பெ.கனக சபாபதி தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில சங்கப் பணியாளர்கள், ஐ.நா. அபிவிருத்தி திட்ட அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (10-204)

# அதிகளவில் பயணிகளை ஏற்றுவதற்குத் தடை

செம்பியன்பற்று,செப்.7

வடமராட்சி கிழக்கில் பஸ்களில் அதிக அளவு பயணிகளை ஏற்றுவதும் மிதி பலகையில் பிரயாணம் செய்வதும் மோட்டார் சைக்கிளில் மூன்றுபேர் பிரயாணம் செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளன. தமிழீழ காவல்துறையினரால் மேற்படி நடவடிக்கைகள் யாவும் தடை செய்யப்பட்டுள்ளன.

இவற்றை மீறுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழீழ காவல்துறையினர் அறிவித்துள்ளனர். (10-36)

# பாடசாலைக் கட்டடங்கள் புனரமைப்பு

தென்மராட்சி,செப்.7

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க.பாடசாலை வகுப்பறைக் கட்டடங்களைப் புனரமைக்க சுவிஸ்அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் முன் வந்துள்ளது.

அண்மையில் பாடசாலைக்கு வருகைதந்த கூட்டுத்தாபன அதிகாரிகள் புதிய வகுப்பறைக் கட்டடங்கள் அமைக்கவும், உடைந்த கட்டடங்களைப் புனரமைத்துத் தருவதாகவும் கூறியதுடன் விரைவில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிப்பதாகவும் தெரிவித்தனர்.

2000 ஆம் ஆண்டு தொடக்கம் இப் பாடசாலை மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10-117)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,செப்.7

நல்லூர்க் கந்தன் ஆலய பெருந்திருவிழாவை ஒட்டி இந்து கலாசார திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு நந்தினி மகாதேவசர்மாவின் வயலின் கச்சேரி இடம்பெறவுள்ளது. (ஐ-6)

யாழ்ப்பாணம்,செப்.7

நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை ஒட்டி நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றுவரும் கம்பராமாயனத் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா் சூர்ப்பனகை என்னும் காட்சி பற்றி உரை நிகழ்த்துவார். (ஐ-6)

யாழ்ப்பாணம்,செப்.7


நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த பெருந் திரு விழாவை ஒட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினர் துர்க்கா மணி மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று வாஸஸ்பதி ரஜீந்திரனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியக் கலைஞர்களாக பாக்கியலட்சுமி நடராசா (வயலின்), ரி.வரோதயன் (மிருதங்கம்), எம்.லோகேந்திரன் (கடம்) ஆகியோர் பங்கேற்பர். (ஐ-6)

# நல்லூர்க்கந்தன்

## பெருந்திருவிழாக் காலச் சிறப்பிதழ்

### (18 ஆம் திருவிழா)



## கதிர்வேலாயுதனே வருக

நல்லைதனில் ஜனித்த கந்தனே வருக!
துயர்தனைக் களைய நீ ஓடோடி வருக!
எந்துனை இன்னலையும் நீக்கவென வருக!
எக்காலம் தனிலும் நீ உறையவென வருக!

கந்தா கடம்பா கதிர்வேலா வருக!
கற்பனை நாயகனே இன்புடனே வருக!
களவுகளை வேரறுக்க ஓடோடி வருக!
எதிரிகளை துரத்தவென விரைவினிலே வருக!

நல்லாரை வாழவைக்க இன்புடனே வருக!
தீயோரை அழிக்கவென வேலுடனே வருக!
இன்பத்தை வழங்கவென ஓடி நீ வருக!
துன்பத்தை துரத்த நீ உக்கிரமாய் வருக!

நிம்மதியைக் கொண்டுவர இனியவனே வருக!
வெம்பகைதனை நீக்க விருப்புடனே வருக!
வாழ்வாரை சிறக்க வைக்க வேலவனே வருக!
என்றுமெனைக் காக்க நீ துணைவனாய் வருக!

சங்கத்தானை. சாம்பவி.

## என்றும் எம்மைக் காக்கும் எழில்நல்லூர் பதி

இராகம்: இந்தோளம் தாளம்: ஆதி

பல்லவி

செந்தமிழ்குமரன் சிவசக்தி பாலனின்
சேவடி நினை மனமே - தினமே...
(செந்)

அனுபல்லவி

தேவர் சிறை மீட்ட தேவசேனாபதி
என்றும் எமைக் காக்கும் எழில் நல்லூர் பதி
(செந்)

சரணம்

பைந்தமிழ் மலர் பாமாலை சூடி
வந்தித்து அவன் பதி வலம் வந்து துதித்தால்
செங்கையில் வேலேந்தும் தெய்வ சிகாமணி
முந்தை வினையறுத்து முத்தியும் தருவான்
(செந்)

கொக்குவில். திருமதி ம.நவரத்தினம்.

## துயர்தீர்க்கும் நல்லை முருகன்

நல்லைக் கந்தன் விழாக்கான
நாடே இன்று கூடுகின்றது
தொல்லை வினைகள் தொலைந்திட
தொடர்ந்தும் நாமே வழிபடுவோம்
எல்லை இல்லா இன்னருளை
எமக்கே தருவான் முருகனவன்
நல்லைக் கந்தன் அருளாலே
நமது நாடு நலம் பெறுமே!

தொன்று தொட்டு நாமிங்கே
தொழுது வந்த வேலனவன்
என்றும் அவனின் அருளுண்டு
ஏற்றம் தரும் பெருமையுண்டு
நன்று செய்ய நல்லூரில்
நாயகனாக விளங்கும் அறுமுகனே
குன்றில் நின்று காத்திடுவான்
குமரன் குறத்தி மணவாளன்

வள்ளி தெய்வானை சமேதராய்
வலமாய் வரும் நாளிதுவே
துள்ளி விளையாடும் எமதுள்ளம்
தூய்மையாய் வழிபடும் வேளையிது
மல்லிகை மலர்கிரீட மணவாளன்
மால்மருகன் எங்கள் கந்தனவன்
துல்லியமாய் துதிபாடும் காலமிது
துயர்தீர்க்கும் முருகன் நேரமிது.

நல்லூர். செ.சண்முகலிங்கம்.

## எங்கள் இடர் தீர்க்க

நல்ல கனிக்கு நன்கு வாதாடி
பழனிமலை யேறிய பழனியப்பா
ஔவைப் பாட்டிக்குச் சுட்ட பழத்திற்கு
அருமைக் கருத்துரைத்த ஐயனே!
மந்திரத்தின் பொருளை யறியாப் பிரமாவை
மறியல் வைத்த மால் மருகா
தந்தைக்கு உபதேசம் செய்த தனயனே
சுவாமி நாதனே, நல்லை நாதனே
எங்கள் இடர் தீர்க்க
இன்னுமேன் தாமதமையா.

அரியாலையூர். திருமதி தி.நாகேஸ்வரி.

## ராவய ஆசிரியரின் உரிமை மீறல் வழக்கு

# இலங்கை அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்து ஐ.நா.உரிமைக்குழு தீர்ப்பு



பத்திரிகை ஆசிரியர் ஒருவரின் கருத்து சுதந்திரத்தை தொடர்ச்சியாக அவர் மீது அவதூறு குற்றச்சாட்டுக்களை முன்னெடுத்ததன் மூலம் இலங்கை அரசு கட்டுப்படுத்தி வந்துள்ளது என்று ஐ.நா மனித உரிமைகள் குழு கடுமையாக விமர்சித்த தீர்ப்பொன்றை வெளியிட்டுள்ளது.

ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன நான்கு வருடங்களுக்கு முன்னர் (1999) ஜெனிவாவில் இருந்து செயற்படும் ஐ.நா. மனித உரிமைகள் குழுவிடம் செய்துகொண்ட முறைப்பாடு ஒன்றின் மீது அண்மையில் வழங்கிய தீர்ப்பொன்றின் மூலமே இலங்கை அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்துள்ளது அந்த நடுவர் குழு.

அரசாங்கத்துக்கு எதிராக செயற்படும் பத்திரிகை ஆசிரியர்கள், பத்திரிகை வெளியீட்டாளர்களுக்கு எதிராக குற்றவியல் வழக்குகளைத் தாக்கல் செய்வது என்று அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது அரசும் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவது என்று பத்திரிகையாளர்களின் குழுக்கள் எடுத்திருந்த தீர்மானங்களையடுத்து ராவய ஆசிரியர் இந்த முறைப்பாட்டினை ஐ.நா. மனித உரிமை குழுவிடம் தாக்கல் செய்திருந்தார். இந்த முறைப்பாட்டை விரிவாக ஆராய்ந்துள்ள 12 உறுப்பினர்களைக்கொண்ட ஐ.நா.மனித உரிமைகள் நடுவர் குழு, ராவய ஆசிரியருக்கு தகுந்த இழப்பீட்டினை வழங்க வேண்டுமென்றும் குழுவின் விமாசனக் கருத்துக்களை பொதுமக்கள் அறியக் கூடியதாக வெளியிட வேண்டும் என்றும் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளது. மேலும் குழுவின் தீர்ப்பினை செயல்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி 90 நாள்களுக்கு முன்அறியத்தரும்படியும் வற்புறுத்தியுள்ளது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளில் ஒன்று என்ற முறையில் இலங்கை அரசாங்கத்துடனும், முறைப்பாட்டளராக ஆசிரியருடனும் ஐ.நா.மனித உரிமைகள் குழு நடத்திய பல்வேறு கடிதத் தொடர்புகளையடுத்து இந்தத் தீர்ப்பு வெளிவந்துள்ளது.

ஐ.நா. சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திடும் நாடுகள் ஐ.நா.மனித உரிமைக்குழுவின் தீர்மானங்களுக்கு கட்டுப்பட்டாக வேண்டும்.

இலங்கை உயர் நீதிமன்றத்தீர்ப்பொன்றை எதிர்த்து சர்வதேச நடுவர் மன்றம் ஒன்றில் இலங்கைப் பிரஜையொருவர் முறைப்பாடுசெய்திருந்த முதல் சம்பவமாகவும் விக்டர் ஐவனின் முறைப்பாடு அமைந்திருந்தது. அவர் தமது முறைப்பாட்டில் அப்போதைய இலங்கை சட்டமா அதிபர்கள் ஒருதலைப்பட்சமாகவே நடந்து கொண்டார்கள் என்பதையும் எடுத்துக்காட்டியிருந்தார். உயர் அரசுத்தலைவர் ஒருவர் முறைப்பாடு செய்தவுடன் அப்போதைய சட்டமா அதிபர்கள் தன்னை தெரிவுசெய்து அவதூறு வழககுகளில் மாட்டிவிட்டார்கள் என்றும் அவ்வாறு செய்ததின் மூலம் அவர்கள் கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தும் சர்வதேச ஒப்பந்தத்தின் 19ஆவது அத்தியாயத்தை மீறியிருக்கிறார்கள் என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த விசாரணையின் ஆரம்பக் கட்டத்தில் விக்டர் ஐவனின் முறைப்பாடுகள் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தின் இலங்கை அரசாங்கம் கையெழுத்திடுவதற்கு முற்பட்ட சம்பவம் என்ற நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் முன்வைத்திருந்தது. மேலும், உயர் நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியுள்ள நிலையில், முறையீட்டாளர் அத்தீர்ப்பை ஆட்சேபித்து முறைகேள் அதிகாரியிடம் (ஒம்புட்ஸ்மன்) அல்லது தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்வதற்கான சந்தர்ப்பங்கள் அற்றுப்போய்விடவில்லையென்றும், அரச தரப்பில் எடுத்துக்கூறப்பட்டது. அத்துடன், ஆள்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகவிருந்தது என்றும் கூறப்பட்டது.

ஆனால், இந்த வாதங்கள் அனைத்தையும் ஐ.நா. நடுவர்குழு நிராகரித்துவிட்டது. ஐவனின் உரிமைகள் மீறப்பட்ட செயலானது தொடர்சியான மீறல்களாக இருந்துள்ளனவென்று குழு சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன், அரசாங்கம் சர்வதேச ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பிறகும் மீறல்கள் தொடர்ந்து இடம்பெற்றுள்ளன என்பதைக்குழு வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கம் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஐ.நா. சர்வதேச ஒப்பந்தத்தின் அத்தியாயம் 14(3)(C) மற்றும் அத்தியாயம் 19 உம் அத்துடன் இணைந்த அத்தியாயம் 2 (3) உம் மீறிச் செயயப்பட்டிருப்பதாக நடுவர் குழு கருத்து வெளியிட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான உரிமைமீறல் இடம்பெறாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்வது அரசாங்கத்துக்குரிய கடைமைப்பாடு என்றும் தெரிவித்துள்ளது. (ப)


# மனமுவந்த வாழ்த்துக்கள்!




JICA திட்டத்தின் கீழ் அகில இலங்கை ரீதியில் விஞ்ஞான, கணித பாடங்களின் தர மேம்பாட்டில் யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை இரண்டாம் இடத்தையும் தமிழ்மொழி மூலமான பாடசாலைகளில் முதலாம் இடத்தையும் பெற்றமையைப் பாராட்டி வழங்கப்பெற்ற விருதுகள்.

இத்திட்டத்தில் அகில இலங்கை ரீதியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை சிறந்த அதிபருக்கான விருதையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் வெற்றிபெற உழைத்த அதிபர், ஆசிரியர்கள், திட்ட இணைப்பாளர், தரக்கல்வி வட்டத்தினர் மற்றும் அனைவரையும் மனமுவந்து வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்,
பாடசாலைச் சமூகமும்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.
(சி-37497)(30-14-16)



## கண்ணீர் அஞ்சலி

### சுந்தரம் வடிவேலு

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு.வ.துவாரகன அவர்களின் அன்புத் தந்தையார் சுந்தரம் வடிவேலு அவர்களின் மறைவுச் செய்த அறிந்து அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சண்டிலிப்பாய்
இந்துக்கல்லூரி,
சண்டிலிப்பாய். (36169)(30-14-16)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
16 - 11 - 1928



மறைவு
08 - 08 - 2004

அமரர் வேலுப்பிள்ளை கதிரவேலு

*அன்பாய் பாசமாய் பண்பாய் வாழ்ந்து மறைந்திட்டீர்!*
*ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (07.09.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*துரைஐயா அவெனியு,*
*சந்நிதி கோயில் வீதி,*
*அச்சுவேலி.* (36171)(30-14-16)

- குடும்பத்தினர்.


## பழ நெடுமாறனின் மகளின் திருமணத்துக்கு ஈழவேந்தன் வாழ்த்துச் செய்தி

ஈழத்தமிழர்களுக்காகக் குரல் எழுப்பிவரும பழ நெடுமாறனின் மகள் பூங்குழலியின் திருமணததுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை தமிழக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் அனுப்பியுள்ளார்.

அச்செய்தியில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இமைப்பொழுதும் ஈழத்தமிழர் நெஞ்சில் நீங்காது இடம்பெற்றுள்ள பழ நெடுமாறனும், அவரின் வாழ்க்கைத் துணைவி பார்வதியும் பெற்றெடுத்த புகழ்பூத்த செல்வி பூங்குழலிக்கும் எம் இதயம் நிறைந்த செல்வன் இளம்கிள்ளிக்கும் நடைபெறும் திருமணத்தை நெஞ்சம் நிறைநது வாழ்த்துகிறோம்.

"எம் தம்பி பிரபாகரன்" மடியில் செல்லக்குழந்தையாக வளர்ந்த பூங்குழல் தன் கணவனோடு இனிது இல்லறத்தை நடத்தி உள்ளத்தால் ஒன்றுபட்ட மணமக்களாய் உலகத்தார் உள்ளமெலாம் நிறைந்து உவப்போடு வாழ்கவென உளம் குளைநது வாழ்த்துகின்றோம் - என்று அதில் உள்ளது. (எ-3)

## நல்லூர் திருவிழாவுக்குச் சென்ற இளைஞர்களது சைக்கிள்கள் திருட்டு!

யாழ்ப்பாணம்,செப்.7

நல்லூர்க் கந்தன் ஆலய கார்த்திகைத்திருவிழா பார்க்கச் சென்ற இரு இளைஞர்களினது சைக்கிள்கள் நேற்றுமுன்தினம் களவாடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் நல்லூர் ஆலயத்தில் நடைபெற்ற கார்த்திகைத் திருவிழாவைப் பார்வையிட வந்த இரு இளைஞர்கள் தமது சைக்கிள்கள் இரண்டையும் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் தரிக்கவிடாது ஆலயத்தின் அருகில் உள்ள ஒழுங்கை ஒன்றினுள் விட்டுப் பூட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.

கார்த்திகைத்திருவிழா முடிந்து இரவு 8.30 மணியளவில் சைக்கிளகளை எடுக்கச்சென்ற சமயம் அவை களவாடப்பட்டிருந்தமை தெரியவநதுள்ளது.

நல்லூர் வடக்கு சந்திர சேகரப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்நத சண்முகலிங்கம் தனேசன், கோப்பாய் தெற்கைச் சேர்ந்த தங்கராசா சதீஸ் ஆகியோரே சைக்கிள்களைப் பறிகொடுத்துள்ளனர்.

இது தொடர்பாக நல்லூர் ஆலய வீதியில் உள்ள சிறப்புச் செயலணி மற்றும் பொலிஸ்நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்யபபட்டுள்ளது.

(ஐ-6-86)

## இன்று நாடாளுமன்றம்

கொழும்பு,செப்.7

இன்று நாடாளுமன்றத்தில் வெளிநாட்டவர்கள் காணி கொள்வனவு செய்யும்போது நூறு வீத வரி அறவிடுவது தொடர்பான நிதிக் கட்டளைகள் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதம் நடைபெறும.

வழமையாக காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் நாடாளுமன்ற அமர்வுகள் இன்று முதல் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். மாலை 4.30 மணிக்கு நிறைவுபெறும். வெள்ளிக்கிழமைகளில் காலை 9.30 மணி முதல் பி.ப. 1.30 மணி வரை மதியபோசன இடைவேளை இன்றி நடைபெறும். நாடாளுமன்ற அமர்வு நேரங்கள் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதால் இந்த நேரமாற்றங்கள். அதே வேளை, மதியபோசன இடைவேளைக்கான நேரம் 30 நிமிடங்களால் குறைக்கப்பட்டுள்ளது, (க)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
16 - 10 - 1952



மறைவு
04 - 09 - 2004

அமரர் அருணாசலம் யோகானந்தா

(உதவிக் கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி வலயம் - பௌதிகவியல் ஆசிரியர்)

*பணிமுடித்து எமைப்பிரிந்த மாண்பு மிகு ஆசானே!*
*பசுமரத்து ஆணியாக பௌதிகம் போதித்து*
*ஏணியாக இருந்து எம்மை ஏற்றிவைத்த உமது*
*நெடுங்கனவை நனவாக்க நாம் நேரம் பார்த்திருக்க*
*கரம்பற்றி கரைசேர இன்னும் இளையவர்கள் காத்திருக்க*
*வாழ்வியலின் உண்மையினைப் போதிக்கும்*
*உம்மறைவு மட்டும்*
*புரியாத பாடமாக சிந்தையைச் சிதைக்கின்றது!*

அன்னாரது பிரிவால் மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினர், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பொறியியல் பீட மாணவர்கள்,
மொறட்டுவ பல்கலைக்கழகம்.
(36173)(43-14-16-30)



## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி கல்வி வலய
உதவிக்கல்விப் பணிப்பாளர்
அருணாசலம் யோகானந்தா

அவர்கள் 04.09.2004 அன்று இயற்கையெய்தியதையிட்டு எமது இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கினறோம்.

கணித, விஞ்ஞான ஆசிரியர் சங்கம்,
தென்மராட்சி கல்வி வலயம்.
(சி-37489)(30-12-14-16)



## மரண அறிவித்தல்

### இராசதுரை கனகலிங்கம்
(சிட்டு படப்பிடிப்பாளர்)



நாலாம்கட்டை லேன், கோப்பாயை வசிப்பிடமாகக்கொண்ட இராசதுரை கனகலிங்கம் நேற்று (06.09.2004) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை - இராசுரததினம் அவர்களின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் சுரேஸ்குமார் (பிரான்ஸ்), சதீஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பவ்யன் (பிரான்ஸ்), குயனி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் சபின், சர்மி, நேசன், நியசியா ஆகியோரின் பேரனும் அமரசிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி (கனடா) மற்றும் கமலேஸ்வரி, யோகேஸ்வரி (லண்டன்), சண்முகலிங்கம், காலஞ்சென்ற மகேஸ்வரி, ரெட்ணசிங்கம் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் விஜயகுமார், செல்வராணி, ஜெயக்குமார், றோசி (ஜேர்மனி), பிறேம்குமார், வரலக்சுமி (பிரான்ஸ்), ராஜ்குமார், பாமினி (பிரான்ஸ்), குமுதா, ரவி (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*நாலாங்கட்டை லேன்,*
*கோப்பாய்.* (36168)(30-14-16)

தகவல்:
த.இராமலிங்கம் (மருமகன்)

# காணாமற்போனோரின் விசாரணை 9ஆம் திகதி முதல் பொலீஸ் பிரிவுகளில்

யாழ்ப்பாணம்,செப்.7

குடாநாட்டில் 96-97 காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை எதிர்வரும் 9ஆம் திகதிமுதல் மேற்கொள்ளவிருக்கின்றனர்.

சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் 9ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையும் -

யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தில் 13ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையும் -

இந்த விசாரணைகள் இடம்பெறவிருக்கின்றன.

கீழ்க்குறிப்பிடப்படும் காணாமற்போனோரின் பெற்றோர், பாதுகாவலர் அல்லது முறைப்பாட்டுக்காரர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

பொலீஸ் நிலையங்கள் ரீதியாக விசாரணைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

**சாவகச்சேரி**

சந்திரசேகரம் செல்தீபன்-இல.220, மீசாலை கிழக்கு மீசாலை, (கோவை. இல.68), வசந்த குமார்-இல.38, சின்னலன்காடு ஒழுங்கை, அரியாலை (கோவை.இல.477), ரி.ராமலிங்கநாதன், மீசாலை வடக்கு, மீசாலை (கோவை இல.639), தயாகுணம் தயாபரன், அரியாலை சந்தி, சுதுமலை வீதி, யாழ்ப்பாணம் (கோவை இல.685), வினாசித்தம்பி கோணேஸ்வரன், அரியாலை, சாவகச்சேரி (கோவை இல.756), ராமலிங்கம் தயாபரன் - இல.404, சப்பச்சிமாவடி, சாவகச்சேரி (கோவை இல.58), எஸ்.லோகேஸ்வரன் -கைதடி கிழக்கு, கைதடி (கோவை இல.635), சுப்பிரமணியம் தவசெல்வம்-வலம்பூரி, கைதடி மேற்கு, கைதடி (கோவை இல.461), சத்தியடோசன் வினாயகதம்பி - மீசாலை கிழக்கு, மீசாலை (கோவை இல.498), மாணிக்கம் தயாபரன் - அமிர்தா வீதி, நாவற்குழி சந்தி, கைதடி (கோவை இல. 686), கண்ணன் அருள்பிரகாசம் - வாகையடி வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி (கோவை இல.190), முருகன் ஜயரத்தினம் (முருகன் சிவராசா-மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி, முறைப்பாட்டுக்காரர் சின்னத்தம்பி முருகன் (கோவை இல. 3, 4)

**யாழ்ப்பாணம்**

அமிர்தநாதர் கிருஷ்டி ஜயநாதன் - கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் (கோவை இல.11), என்.உதயகுமார் - அண்ணா கோவிலடி, யாழப்பாணம் (கோவை இல.350), பாக்கியநாதன் ஜுலியன்-குருநகர், யாழ்ப்பாணம் (கோவை இல.350), பட்குணசிங்கம் ராஜேந்திரன்- நல்லூர், யாழ்ப்பாணம் (கோவை இல.369), ரீகன் ரோஹன் -கோவில் வீதி,யாழ்ப்பாணம், (கோவை இல.456), சதாசிவம் சந்திரசேகரம் - கண்டி வீதி, அரியாலை (கோவை இல.494), சதீஸ்வரன் பரமசோதிபத்திர கோவிலடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (கோவை இல.495), சதீஸ்வரன்பத்திர கோவிலடி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (கோவை இல.496), சட்குணராசா பழனி நெடுங்குளம்வீதி, கொழும்புத்துறை (கோவை இல.500) செல்லதுரை ஞானசம்பந்தன்-இல.16/5, சீனியர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (கோவை இல 509), செல்லதுரை செல்வராஜா - இல.586, சென. செபஸ்தியன் வீதி,யாழ்ப்பாணம் (கோவை இல.513), செல்வநாயகம் தனபாலசிங்கம் - அரியாலை, யாழ்ப்பாணம் (கோவை இல 524), செல்வராஜா ரகுநாதன் - மூதனவாடி, நல்லூர், யாழ்ப்பாணம் (கோவை இல 531), சுமதி சுரேஸ்வரன் - இல 451, நெடுங்குளம் வீதி, கந்தர் மடம் மேற்கு, யாழ்ப்பாணம் (கோவை.இல.632), தவராசா சிவரூபன் - இல.979, துண்டி வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் (கோவை இல.682), திருவள்ளுவர் வெல்லயன்-நல்லூர், யாழ்ப்பாணம் (கோவை இல.703), யோகன்-இல.50/8, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் (கோவை இல.765), செல்லையா கந்தசாமி - அளவெட்டி (கோவை இல.73), செந்தமிழ்செல்வன் பழனி - மூளாய் தெற்கு,சுழிபுரம் (கோவை இல.540), சின்னத்தம்பி முகுந்தன் - சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் (கோவை இல.566), யோகேஸ்வரன் சுந்தரலிங்கம்-தொல்புரம் கிழக்கு, சுழிபுரம் (கோவை இல.764), செல்வநாயகம் மகேந்திரன் - உரும்பிராய் (கோவை இல.523). (ஐ-3)

## சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.7

'கொட்டுக் கடப்பு' என்ற சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

முகமாலை சேகர் எழுதிய இந்தச் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா வலிகாமம் கல்விவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் வரவேற்புரையினை யாழ்பல்கலைக் கழக மாணவன் கி.ஐங்கரனும் ஆசியுரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் மற்றும் யாழ். பல்கலைக்கழக மெய்யியற்றுறை வருகை விரிவுரையாளர் வண.பிதா இரா.ஸ்ராலின் அடிகள் ஆகியோரும், வாழத்துரையினை யாழ்பல்கலைக் கழக மெய்யியல்துறைப் பேராசிரியர் நா.ஞானகுமாரனும், வெளியீட்டுரையினை யாழ்பல்கலைக் கழக மெய்யியல்துறை முதுநிலை விரிவுரையாளர் க.சிவானந்தமூர்த்தியும் நிகழ்த்துவர்.

நூல் ஆய்வுரையினை யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) மற்றும் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் ஆகியோரும் நன்றியுரையினை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் மேலாளர் ஓ.கே. குணநாதனும் நிகழ்த்துவர்.

இந்த நூலினை மட்டக்களப்பைத் தலைமையகமாகக்கொண்டு இயங்கும் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வெயிடுகின்றது.(எ-9)

## வேம்படி மகளிரில் இன்று பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,செப்.7

'ஜெக்கா' திட்டதத்தின் கீழ் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட விஞ்ஞான, கணித பாடங்களில் தர மேம்பாட்டில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை பெற்ற வெற்றிகளைப் பாராட்டி, விழா ஒன்று இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடாசலையில் இடம்பெறவுள்ளது.

இத்திட்டதத்தின் கீழ் அகில இலங்கை ரீதியில் இப்பாடசாலை அதிபர் சிறந்த அதிபருககான விருதையும், தமிழ்மொழி மூலமான பாடசாலைகளில் முதலாம் இடத்தையும், அகில இலங்கை ரீதியில் 2ஆம் இடத்தையும் பாடசாலை பெற்றதையும் பாராட்டி இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாடசாலை அபிவிருத்திச் சபையினரும் மற்றும் பாடசாலை சமூகத்தினரும் ஏற்பாடு செய்துள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்துகொள்கிறார். (எ-3)


## ஒட்டகப்புல அமலோற்பவமாதா ஆலயம் முக்கிய அறிவித்தல்

இம்மாதம் மாதாவின் பிறந்ததினத்தை சிறப்பாகக் கொண்டாடும் முகமாக 08-09-2004 புதன்கிழமை ஒட்கப்புலம் அமலோற்பவ மாதா ஆலயத்திற்குச் செல்வதற்குத் தீர்மானித்துள்ளோம். அந்தவகையில், செல்லவிரும்பும் மாதாவின் பக்தர்கள் அனைவரும் அன்றைய தினம் (08-09-2004) காலை 7.00 மணிக்கு (புதிய நேரம) யாழ். புனித யுவானியார் ஆலய முன்றிலில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு: ★ வாகன வசதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இலவசம்)
★ மேற்படி ஆலயம் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ளதால் தேசிய அடையாள அட்டை கொண்டுவரவும்.

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 021 - 222 3302, 077 - 6012995

- நிர்வாகம்.
(36178)(43-14-17)

## சாட்டிமாதா கோயில் திருவிழா கடைகளுக்கான கூறல்

சாட்டி புனித சித்தாத்திரை மாதா வருடாந்தக் திருவிழா 17,18 புரட்டாதி 2004 இல் இடம்பெறும். மேற்படி மாதாகோயில் திருவிழாவை முன்னிட்டு வியாபாரிகளுக்கான கூறல (10-09-2004) வெள்ளிக்கிழமை காலை 9.00மணிக்கு சாட்டி மாதா கோயிலில் இடம்பெறும்.

(36176)(43-14-17) - பரிபாலகர்.

## அகவை அறுபது நிறைவில் நன்றியுடன்...



திருமதி
**லோகநாயகி இரத்தினம்**

யாழ். அச்சுவேலி புனித் திரேசாள் மகளிர் கல்லூரியில் மனைப் பொருளியல ஆசரியராகப் பணியாற்றி நேற்று (06-09-2004) சேவையில் இருந்து ஓய்வுபெற்ற திருமதி **லோகநாயகி இரத்தினம்** அவர்கள் எமது கல்லூரிக்கு ஆற்றிய அளப்பெரும் சேவைகளைப் பாராட்டி உளமார வாழ்த்தி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.
(சி-37498)(43-14-17)


## முன்பள்ளி ஆசிரியருக்குப் பயிற்சி

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களால் நடத்தப்படும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான 3நாள்கள் பயிற்சி வகுப்புகள் எதர்வரும் பத்தாம் திகதி ஆரம்பமாவுள்ளன. திருகோணமலையில் உள்ள உள்ளூராட்சித்திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

இப்பயிற்சியில் கலந்துகொள்ளவுள்ள ஆசிரியர்களின் விவரத்தினையும், பங்குபற்றவுள்ள ஆசிரியரின் சம்மதக் கடிதத்தினையும் உடன் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(எ-117)

## துர்க்கா மணிமண்டப இசை அரங்கில் மாற்றம்

நல்லைக்கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினர் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை இசைப் புலவர் சண்முகரத்தினத்தின் புத்திரர் சண்முகராகவனின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

வயலின் எ.ஜெயராமன், மிருதங்கம் கே.அனந்தகோபன், முகர்சிங் கே.நந்தகுமார் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்ட பாட்டுக்கச்சேரி இன்று இடம்பெறமாட்டாது என அறிவிக்கப் பட்டுள்ளது. (எ)

### திருத்தம்

நேற்றைய (06.09.2004) உதயனின் 4ஆம பக்கத்தில் வெளியாகிய R.B.Booking Centre விளம்பரத்தில் -

தொலைபேசி இலக்கம் 021-222-7016 என்பதற்குப் பதிலாக 021-222-3016 என்று அச்சாகிவிட்டது. இதனைத்திருத்தி வாசிக்கவும்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 05 – 07 – 1945



உதிர்வு 08 – 08 – 2004

### அமரர் பரமசாமி மகேந்திரன்

(கல்லுவம் - விசுவமடு)

எமது குடும்பத் தலைவரின் திடீர் மறைவினால், எம்முடன் நேரில் துயர்பகிர்ந்தோரையும், தவிர்க்கமுடியாத காரணங்களால் துயர்பகிர முடியாமற்போனவர்களையும் இன்று (07-09-2004) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

*65R,பகுதி - 1,*
*விசுவமடு.*
(34452)(14-17-43)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(சுகிர்தன், சுகந்தன், சுஜீதா).

## தவறிவிட்டது

கடந்த 04-09-2004 சனிக்கிழமை அன்று புளியங்குளத்தில் இருந்து முகமாலை வரும் பஸ்ஸில் உடுப்புடன் அல்பம் ஒன்றும் மிக முக்கிய ஆவணமும் அடங்கிய Bag முறுகண்டியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும்.

ஜோன் ஞானேந்திரன் துஷ்யந்தன்,
சின்னத்தோட்டம்,
பருத்தித்துறை.
(C/37500) T.P.077-6118666

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் நல்லநாயகம் (செட்டியார்)

(முன்னாள் உத்தியோகத்தர்-சீமெந்து தொழிற்சாலை; முன்னாள் அங்கத்தவர்-சுன்னாகம் பட்டினசபை 6 ஆம் வட்டாரம்; உப தலைவர்-உடுவில் மத்தி பட்டினசபை)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் Germany இல் வசித்தவரும் தற்போது பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நல்லநாயகம் அவர்கள் நேற்று (06.09.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் தர்மலிங்கம் தம்பதிகளின் மருமகனும் நாகலட்சுமியின் அன்புக் கணவரும் உத்தமி, குமாரதாஸ், இளங்குமரன், வாசுகி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கருணாகரன், தேவிகா, சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற யோகராஜா மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் வினோத், விதூலன், நிவேதிகா, அஸ்வின், அரவிந் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற இரட்ணசிங்கம் மற்றும் பத்மாவதி, சண்முகலிங்கம், சிவஞானசுந்தரி, தேவசேனா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*இல.6, இரண்டாம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P-077 6138669* (36177)(29-14-17-43)

தகவல்:
மனைவி.

### செபஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(அந்தோனிமுத்து)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை நேற்று (06.09.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.



அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் (பாக்கியம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற அன்ரன் மக்பாலன் மற்றும் றென்ரன் ஜெயபாலன், காலஞ்சென்ற ரேவதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிர்மலா, தியோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெனி, மார்க், கிறிஸ்தோப்பர், பற்றீசியா ஆகியோரின் அன்புப் பேரனும் சந்தியாப்பிள்ளை காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து, றோசப்பிள்ளை, அன்னம்மா, சுழியான்அம்மா, ஆரோக்கியம், பிலிப்பாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.08, அச்சக வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்திருக்கும் அவரது இல்லத்தில் இருந்து இன்று(07.09.2004) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு புனித மரியாள்சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.08, அச்சக வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(36175)(29-14-17-43)

தகவல்:
ராணி கிறகரி மரியம்மா (தங்கம்)
றென்ரன் (மகன் -கனடா)
T.P 0015143543085

## கண்ணீர் அஞ்சலி



எமது அரிமாக் கழக உறுப்பினர் லயன் திரு.யோ.மாறனின் தந்தை

### அருணாசலம் யோகானந்தா

(உதவிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி வலயம்)

அன்னாரின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்கள் உரித்தாகுக.

(C/37501)(22-14-17-43)

லயன்ஸ் கழகம், சாவகச்சேரி.

நிரஞ்சனாஸ் சங்கானை

ஷொக்

பிரசாந். மீனா. அப்பாஸ் நடித்த

தினசரி 11.00, 2.45, 6.00 (யுதே)

வெள்ளி, சனி, ஞாயிறு. (ரீல்ஸ்) STRIKE FORCE (இரவு 8.45பு.நே)

(C/36805) (33-13-16)

ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த மதுர



பு.நே.:10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

# முல்லைத்தீவுக் கடலில் மீனவர் மீது கடற்படை டோறாப் படகு தாக்குதல்

## கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு

(முல்லைத்தீவு,செப்.7

முல்லைத்தீவுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழ் மீனவர்கள் மீது கடற்படையினர் கடந்த முதலாம் திகதி தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாத்தளன் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது பிற்பகல் 3 மணியளவில் அங்கு வந்த கடற்படையினரின் டோறாப் படகில் இருந்து மீனவர் படகை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. படகில் இருந்த மீனவர்கள் கடலில் குதித்து உயிர் தப்பியுள்ளனர். படகு பலத்த சேதமடைந்தது.

என்.நாகராஜா, ஏ.அருள், டி.தேவகுமார், ஏ.டேவிட்ஸன் ஆகியோர் மீன்பிடித்துக் கொண்டிருந்த படகு மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூடு நடத்திய பின்னர் மீனவர்கள் அருகே வந்த டோறாவில் இருந்த கடற்படையினர் அவர்களை அச்சுறுத்தியதுடன் கரைக்குத் திரும்புமாறும் துரத்திவிட்டனர். கரைக்குத் திரும்ப மாற்றுவழி ஏதும் இல்லாததனால் 22 மணித்தியாலங்கள் கடலில் தத்தளித்த பின்னரே அவர்கள் கரைசேர்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய தாக்குதல்கள் எதிர்காலத்தில் நடத்தப்படாமல் இருப்பதை கண்காணிப்புக்குழு உறுதிப்படுத்த வேண்டும் என்று அவர்களுக்கு எழுதிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

போர்ச்சூழல் நிலவிய கடந்த 20 ஆண்டு காலப்பகுதியில் இத்தகைய தாக்குதல்களை நடத்தி வந்துள்ளனர். இதனால், தமிழ் மீனவர்கள் தமது தொழிலைச் செய்யமுடியாது பெரும் பாதிப்படைந்திருந்தனர். இப்போது சமாதானச் சூழல் நிலவும் வேளையிலும் கடற்படையினரின் இத்தகைய செயல் குறித்து மீனவர்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

(க)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரசர்களைக் கொண்ட குழு இந்த வழக்கை விசாரித்தது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பை அது உறுதிசெய்தது.

இதனை அடுத்து சிங்கராசா, ஐ.நா. மனித உரிமைகள் குழுவிற்கு இந்தத் தீர்ப்புத் தொடர்பாக முறையீடு செய்தார்.

இவரது மனுவை ஆராய்ந்த ஐ.நா. மனித உரிமைகள் குழு அதன் முடிவை அரசுக்கு அறிவித்துள்ளது. அதில் சிங்கராசாவுக்குப் பயனுள்ள நிவாரணத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

தனது முடிவு தொடர்பாக குழு சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் வருமாறு:-

1.சிங்கராசாவின் வழக்கில் நியாயமான விசாரணைகள் மறுக்கப்பட்டுள்ளன.

2. வெளியிலிருந்து அழைக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர் ஒருவர் இல்லாமல் இரு பொலீஸ் அதிகாரிகளால் மட்டும் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

3. வாக்குமூலம் தவறானது என்பதை நிரூபிக்கும் பொறுப்பை (Burden of prove) பாதிக்கப்பட்டவர் மீது சுமத்தியதன் மூலம் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனத்தை இலங்கை அரசு மீறியுள்ளது.

4. சிங்கராசாவின் மனுவை மீள்பரிசீலனை செய்வதற்கு உயர் நீதிமன்றம் 4 வருடகாலத்தைத் தாமதம் செய்ததன் மூலம் அவரது அடிப்படை உரிமை பறிக்கப்பட்டுள்ளது.

எனவே, அவருக்கு பயனுள்ள நிவாரணத்தை அரசு பெற்றுக்கொடுக்கவேண்டும்.

அவரை விடுதலை செய்வதன் மூலம் அல்லது மீள் விசாரணைக்கு உத்தரவிடுவதன் மூலம் அல்லது அவருக்கு நஷ்டஈடு வழங்குவதன் மூலம் அவருக்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் குழு அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

எதிர்காலத்தில் இத்தகைய மீறல்களைச் செய்யாதிருக்கும்படியும் இலங்கை அரசிற்குக் குழு அறிவுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக 90 நாள்களுக்குள் எத்தகைய நடவடிக்கையை இலங்கை அரசு மேற்கொண்டுள்ளது என்பதைத் தனக்கு அறிவிக்குமாறும் குழு கோரியுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்று. இத்தகைய உரிமை மீறல்கள் தொடர்பாக எவரும் ஐ.நா. மனித உரிமை குழுவிடம் முறையிடலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(எ-க)

முக்கிய அறிவித்தல்
A/L 2005
மாணவர்களுக்குரிய முக்கிய அலகுகள் யாவும் நாள்தோறும் 6 p.m. இல் நடைபெறும்.
ஆரம்பமாகும் அலகுகள்.
INORGANIC CHEMISTRY
ORGANIC CHEMISTRY
PHYSICAL CHEMISTRY
THERMO CHEMISTRY & PAPER CLASS
By: அன்பழகன் B.Sc.
இவ்வாரத்தின் பின் இப்பிரிவுக்கு எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள். (சி-37499)
CHEMISTRY CENTRE
Temple Road, (Green Park முன்னே).

NEW SCIENCE CENTRE
PHYSICS - Day Class
9.30-10.30 நடைபெறுகிறது.
புதிய பிரிவு ஆரம்பம்: 08.09.2004
(36160) 10.30-11.30
By:- பிரபா

## வீதி ஒழுங்கு பற்றிய கருத்தூட்டல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.7

துணுக்காய், பாண்டியன்குளம் பகுதியில் நேற்று தமிழீழ காவல்துறையினரின் ஏற்பாட்டில் வீதி ஒழுங்கு பற்றிய கருத்தூட்டலும், கண்காட்சியும் நடைபெற்றன.

மல்லாவி மத்திய கல்லூரி, துணுக்காய் பிரதேச செயலகம், பாண்டியன்குளம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

துணுக்காய், மல்லாவி, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்கள், மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

காவல்துறை அதிகாரிகள், கல்விப்பிரமுகர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

வீதிவிபத்துக்களின் அனர்த்தங்களைச் சித்திரிக்கும் படக்காட்சிகளும் இடம்பெற்றன.

(எ)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சந்திப்பு இன்றுவரை பிற்போடப்பட்டது.

இச்சந்திப்புக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் தலைமையுடன் பேச்சுக்களை நடத்தவென மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் தளபதிகள் கடந்த வெள்ளிக்கிழமை வன்னி வந்திருந்தனர்.

தலைமையுடன் பேச்சுக்களை முடித்துக் கொண்டு அவர்கள் மட்டக்களப்புக்குச் செல்லத் தயாரானார்கள்.

இந்தச் சந்திப்பை பின்போடுமாறு விடுதலைப் புலிகள் கண்காணிப்புக்குழுவினரிடம் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்தே சந்திப்புப் பிற்போடப்பட்டது என்று கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க-3)

## இ.தொ.கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கதா என்பதை உரியவர்களே சிந்தித்து எடுக்கவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வு காணப்படுவதை ஒரு முக்கிய நிபந்தனையாகக் கொண்டு இந்தக் காய்நகர்த்தல் நடந்திருக்குமானால் அதில் அரசியல் இராஜதந்திரம் இருப்பதாகக் கொள்ளமுடியும்.

எனினும், இந்த முடிவுக்கான பின்னணிகளைத் தெரியாமல் - புரியாமல் - எழுந்தமானமாகப் பதில் கூறுவது பொருத்தமற்றது.

ஆனாலும் தமிழ்க்கட்சிகள் எந்த முடிவையும் ஐக்கியப்பட்டு - ஒற்றுமைப்பட்டு - ஏகத் தீர்மானத்தில் - எடுப்பதுதான் அனைத்துத் தமிழர்களுக்கும் நன்மைபயக்கும் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறேன்.

நாம் அனைவரும் ஐக்கியப்பட்டு நிற்பதால் கிடைக்கும் பலத்தைச் சிதறடிக்க விரும்பும் எதிரி, முதலில் நமது ஐக்கியத்தையே பிளக்க முயல்வான். அதற்கு நாம் இரையாகிவிடக் கூடாது. இயன்றவரை இணைந்திருந்து செயற்படுவதன் மூலம் ஒட்டுமொத்தத் தமிழினத்தின் நலனையும் பேணிப் பாதுகாத்து உறுதிப்படுத்துவோம்.

தமிழினத்தை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் விட்டுக்கொடுப்புகளுடனும், முனைப்புடனும், ஆவத்துடனும் செயற்படப் புலிகள் தயாராக உள்ளார்கள் - என்றார் தமிழ்ச்செல்வன். (எ-3)

இன்று ஆரம்பம்
A/L Day Class
பொருளியல்
S.ஜெயகுமார் [B.A.(Hons) Eco.Spl.]
திங்., செவ்., புதன், வியா., வெள்.
8.00 - 9.30 (ப.நே.)
(36165) அலகுரீதியான மீட்டல்.
BEACON யாழ்நகர்.



வடமராட்சி கிழக்கு, ஆழியவளை திலீபன் மருத்துவமனைக்கு வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை வழங்கிய ஒரு தொகுதி மருந்துப் பொருள்களை சபைத் தலைவர் டாக்டர் கே.மயிலேறும்பெருமாள், திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் ஈழவாணியிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*

# பல்லசுட்டி கிராமத்தின் தேவைகள் மதிப்பீடு

வட்டுக்கோட்டை,செப்.7

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவின் பல்லசுட்டி கிராமத்தின் தேவைகள் மதிப்பீடு அரச மறுசீரமைப்பு அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மிகவும் பின் தங்கிய நிலையில் வாழும் பல்லசுட்டி கிராம மக்களின் தேவைகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டு முதற்கட்டமாக இக்கிராம மக்களுக்கு உணவல்லாத பண்டம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தேவை மதிப்பீடு மூலம் கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பாகவும் திட்டமிடப்படவுள்ளது. (எ-161)

## ஆறுமுகனுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்படலாம் என்றும் கூறுப்படுகின்றது.

இதுவரை காலமும் எம்.எஸ்.செல்லச்சாமி அமைச்சராக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் கடைசி நேரத்தில் அவரை ஒரு மாகாணத்தின் ஆளுநராக நியமிப்பதற்கு அரச உயர் பீடமும் இ.தொ.கா. தலைமையும் இணங்கிவிட்டன என்று தெரிகிறது.

செல்லச்சாமி ஆளுநராகிவிட்டால் அவரது இடத்துக்கு இ.தொ.கா. உப தலைவர் இரா.யோகராஜன் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படலாம் என இ.தொ.காவுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

## பலம்வாய்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு களம் அமைத்தவர்களும் நாங்களே.

கல்லோயாத் திட்டம் முதல் மகாவலித் திட்டம் வரை பல அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கியவர்கள் நாமே என்று கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றோம்.

நாம் தற்போது ஆட்சிசெய்த இரண்டு வருடங்களில் ரூபாவின் பெறுமதியைத் தக்க வைத்திருந்தோம். ஆறு வீதத்தால் பொருளாதாரம் வளர்ச்சியுற்றிருந்தது.

வெளிநாட்டு உதவிகளாகக் கிடைக்கவிருந்த 45 ஆயிரம் கோடி ரூபா நிதி இப்போது கிடைக்காமல் போயிருக்கின்றது. அது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

எமது ஆட்சிக்காலத்தில் பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்குக் கூறி ஆட்சியை அமைத்த ஜே.வி.பி. - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டு இன்று அல்லாடுகிறது.

நாம் பொய்யான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கமாட்டோம்.

நாட்டு மக்களுக்குத் தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் அதற்கு ஒரு சமாளிப்புக் காரணத்தைக் காட்டுவதற்காக யுத்தம் ஒன்றை நோக்கி நாட்டை நகர்த்துவதற்கும், அது தொடர்பான தவறான கருத்துக்களை மக்களுக்குப் புகட்டி அவர்களின் சிந்தனையைத் திசைதிருப்புவதற்குமான செயற்பாடுகளில் இந்த அரசு ஈடுபட்டுவருகிறது.

இனியும் நாம் பார்த்திருக்கப் போவதில்லை. அரசு மக்களுக்குக் கொடுத்த மூன்று மாதகால அவகாசத்தை மேலும் மூன்று மாதகாலமாக்கிக் கொள்ளட்டும். அதுவரை நாம் பார்த்திருப்போம்.

பெரும்பான்மை இல்லாத ஓர் அரசை உருவாக்கி மக்களைப் பெரும் இக்கட்டான ஒரு நிலைக்குத் தள்ளியுள்ளமையை நாம் ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை.

- இப்படி அவர் மேலும் கூறினார்.

இந்த வைபவத்தில் கட்சியின் பிரமுகர்கள் மற்றும் அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.

(எ-க)

A/L தமிழ் Day 2005 Paper
இறுதிப் பிரிவு -II
(வாரத்தில் 4 வகுப்புகள்)
திரு.நாக தமிழிந்திரன்
ஈழத்தமிழிலக்கிய வரலாறு
புதன், வெள்ளி, பி.ப.- 3.30 -4.30 (36159)
BEACON - வெலிங்டன் சந்தி.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டிருப்பதாக அறிந்து பல தடவைகள் பொலீஸ் நிலையம் சென்று விசாரித்ததாகவும்-

எனினும், தனது கணவர் குறித்த தகவல்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் - அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து வவுனியா பொலீஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டபோது கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் அவர் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக பொலீஸாரால் தங்களுக்கு பதிலளிக்கப்பட்டதாகவும் அந்த முறைப்பாட்டில் ஜெ.கணேஷின் மனைவி தெரிவித்திருக்கின்றார். (எ-9)

## விசேட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸ் அதிரடிப்படையில் தற்போதுள்ள வசதிகள் போதா. பழைய உபகரணங்களே படைவசம் உள்ளன. இவை இன்றைய தேவையைப் பூர்த்திசெய்யப் போதாதவை. நவீன ஆயுதங்களும் உபகரணங்களும் வேண்டும். இவற்றை வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதற்கு ஜனாதிபதி அனுமதி தந்திருக்கின்றார் - என்றார்.

விசேட அதிரடிப்படையினருக்கான பயிற்சித் தளம் ஒன்றை அம்பாறையை மையமாகக் கொண்டு அமைக்கும் உத்தேசம் உண்டு. நுவரெலியாவில் படையினருக்கு பயிற்சிக் கல்லூரி ஒன்று உருவாக்கும் எண்ணமும் இருக்கின்றது. இவற்றிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது என்று பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கிற்கான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா மேலும் தெரிவித்தார்.

அதேவேளை - மாதுறுஓயா பயிற்சி நிலையத்தில் தமது பயிற்சிகளை முடித்துக்கொண்டு ஒரு தொகுதி விசடேஅதிடிப் படையினர் - இளம் படையினர் அண்மையில் வெளியேறினர்.

கணனிக் கற்கை நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
18.09.2004
விசேட கட்டணச் சலுகையில்
பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதிக்கு எதிர்பார்த்துக் காத்திருக்கும் மாணவர்கள் மற்றும உயாகல்வி கற்கும் மாணவர்களுக்கெனவே விசேடமாகக் கட்டணக் குறைப்புடன் இப்பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.
இச்சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்
"கணனிக் கல்விக்குத் தனித்துவம்மிக்க IIS நிறுவனத்தில் இணைவதன் ஊடாக நீங்கள் கணனி உலகில் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்"
மேலதிக விவரங்களுக்கு:
இயக்குநர்,
IIS, Jaffna.
(C/37400)(15-29-12-13)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.